இலவச வெளியீடு: GERMANY , ENGLAND பங்குனி. March. 2015

Free Circulation

# வெற்றிமணி

Vettimaniy

மணி 65

பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன் B.F.A

Orientalische Textilien & Schmuck

தொடர் மலிவு விற்பனை!



விபரம் பக்கம் 17

தரமான தங்க நகைகளுக்கு உத்தரவாதமிக்க நகைமாளிகை

Königswall 16 (Am HBF) 44137 Dortmund
Tel: 0231/162377 Fax: 49.0231/147836

## பௌத்த தேசிய வாதத்தின் முன் உண்மையை சொல்லப் போகும் தலைவர் யார்?



## தகுதியோடு தலைநிமிர்ந்து ஜெயித்தார் ஜெசிக்கா!

## டீன் ஏஜ் பெண்ணின் அப்பாவா நீங்கள் ?

ஒரு பெண்
முதலில் சந்திக்கும் ஆண்
அவளுடைய அப்பாதானே ?
அப்பாவிடமிருந்து தான்
அவள் ஒரு ஆணுக்குரிய
இலக்கணங்களைக்
கற்றுக் கொள்கிறாள்.

-சேவியர்

பங்குனி 8
பெண்கள் தினம்

T.T.S.Brothers GmbH&Co.KG
RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288 விபரம் பக்கம் 09

ஆதவன் தொலைக் காட்சியின் யேர்மனி முகவர்
கனீன் எலக்ரோனிக்ஸ்
Schevenhofer Weg 24,- 42111 Wuppertal
Tel: 0205 3423 740 விபரம் பக்கம் 26

Gopara Gnanam
Textiles & Jewellery Shop
Tel: 0231/5450028- Mob: 01713306542
Rheinische Str.81-- 44137 Dortmund
மேலதிக விபரம் 6ம் பக்கம்

Ceylon Imbiss Page.32
Tel:0231 7252859

Lucky Fly page.17
0234 239 90 32 Mobile:0179 14 84 892

StaR - Impex
Tel.: 0231/8602696

S.K.Silks & Gold Paraadise



Mr.P.Sritharan.
Proprietor

என்றும் புதியது அழகின் இரகசியம் அது.

தமிழ் புதுவருடத்தை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!
15.03.2015 முதல் 15.04.2015 வரை
அனைத்து ஆடைவகைகளும் 30 வீதம் முதல் 70 வீதம் வரை கழிவு விலையில்!



மாபெரும் ராஜமுத்திரை

Tel:0231 9501 647 Adler str 33 - 44137 Dortmund



Tel.: 0201/236925

APIRAAMI ENTERPRISE
Pferdemarkt 9
45127 ESSEN





## நம்பமுடியாத உண்மைகள்

# கடலைக் கடைந்து மலையைக் குடைந்து சுடலை!



மாதவி

வாழும் வரை கோடி கோடி சேர்க்க பணத்தை தேடி தேடி அலைந்து. வாழ்ந்து முடிவில் ஆறடிநிலமே சொந்தமடா என்று அடங்கும் வாழ்க்கை நமது வாழ்க்கை. வெற்று உடம்பு நீரிலும் நிலத்திலும் நெருப்பிலும் சங்கமமாகும்.

அப்படி அழியும், அழிந்த உடம்பையும் கூண்டோடு அழிக்க நீரில் அமுக்க முடிந்த கதையை இங்கிலாந்தில் Llyn Celyn, Wales நகரிலும்.




இதே அழிவை அழகுற அமைத்து அழிவின் அழகையே காசாக்க எண்ணிய (Florida) புளோறிடா(Located just off Florida's Key Largo, the Neptune Memorial Reef serves as an underwater mausoleum and the world's largest manmade reef. ) நீருக்கடியிலான சுடலையையும் இங்கு காண் கின்றீர்கள்.

அன்று 1960 ஆண்டு Llyn Celyn, Wales நகரில் இருந்து லிவப்போலுக்கு Liverpool. நீர்வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட வேளை அக்கிராமத்தில் இருந்த நீர்த்தேக்கம் உடைந்து Llyn Celyn உள்ள பாடசாலை, தபாற்கந்தோர், மற்றும் தேவாலயம் அதனோடு சேர்ந்திருந்த சுடலை இவையாவும் நீருக்கு அடியில் முழ்கிவிட்டன. இன்றும் அவை நீருக்கடியில் இருக்கின்றது. இப்படியாக வரும் அழிவுகள். இன்று பார்வையாளர்களை வெகுவாகக் கவருகின்றது. ரைட்ரானிக் கப்பலை கடலுக்கு அடியில் சென்று பார்க்கத் துடிக்கும். மனங்கள். அவலத்தின் அழகையும் ஒருவகையில் இரசிக்கும் மனம். அந்ததுயரத்தை மனதில் தாங்கும் சுமையும் ஒரு சுகமாகிவிட்ட மனதுகள் இன்று.

இவற்றை மையப்படுத்தி இன்று கடலைக் கடைந்து மலையைக் குடைந்து அடியில் சுடலை அமைத்துள்ளனர்.



உலகில் கடலுக்கடியிலான மிகப்பெரும் சுடலை புளோறிடாவில் அமைந்துள்ளது. இங்கு இறந்தவர்களின் உடலை எரித்தபின் அங்கு எடுத்துச்சென்று அடக்கம் செய்வார்கள். அதனை உறவினர்கள் நீர்முழ்கியாகச் சென்று பார்வை இடலாம். அங்கு நினைவுச்சின்னங்கள் எழுப்பப்பட்டு இறந்தவர்களது பெயரும் வாழ்ந்த காலமும் பொறிக்கப்பட்டு இருக்கும். அவ்விடத்தில் மீன்பிடித்தல் தடைசெய்யப்பட்டும் உள்ளது. நீருக்குள் உயிரைப் புதைத்தால் ஆத்மாவிற்கு சிறந்தது என்ற கருத்து ஆசியாவில் இருந்து புறப்பட்டு கண்டங்கள் யாவையும் கலக்கிடும் சடங்காகி வருகின்றது. இறந்தவர்களது உடலை எரித்து சாம்பலை கடலிலும் கரைக்கும் வழக்கம் உள்ளது. இது ஐரோப்பியர்களும் கடைப்பிடிக்கும் ஓர் வழக்கமாக இருக்கின்றது. சாம்பலை நடுக்கடலுக்கு எடுத்துச்சென்று மணியடித்து கடலில் கரைக்கின்றார்கள். நீர்முழ்கிகள் புளோறிடாவில் நீருக்கடியில் அமைந்த சுடலைக்கு சென்று, ஓர் புராதன நகரத்துள் புகுவது போன்ற உணர்வைப் பெறுகின்றனர். பழமையயான மனிதர்கள் சிலைகளாக அங்கு உயிர் பெற்று இருப்பது போல் சிலைகள் வடிக்கபட்டு உள்ளன. வாழும்போதும், மரணத்தின் பின்பும் வாழ்வு எப்படி எனக் கற்பனை பண்ணி வாழ்வதில் மனிதனுக்கு அலாதி இன்பம். வாழ்ந்த காலத்தைவிட மரணத்தின்பின்னான காலம் இச் செயல்களால் (நினைவுத் தூபிகளாக) நீண்டுகொண்டே போகின்றது.**சரி அதற்காக கையில் உள்ள வாழ்கையை இரசிக்க மறந்து விடாதீர்கள்.**

## ஆரோக்கியமான இதயம்



முந்திரியில் நல்ல கொழுப்புக்கள் நிறைந்துள்ளது. மேலும் இது உடலில் உள்ள கெட்ட கொழுப்புக்களை குறைத்து, இதயத்தை ஆரோக்கியமாக வைத்துக் கொள்ளும். பலர் கொழுப்புக்கள் நிறைந்துள்ள உணவை முற்றிலும் தவிர்ப்பது நல்ல என்று நினைக்கின்றனர். ஆனால் அது முற்றிலும் தவறு. உடலுக்கு கொழுப்புக்கள் மிகவும் இன்றியமையாதது. அத்தகைய நல்ல கொழுப்புக்கள் முந்திரியில் நிறைந்துள்ளதால், இவற்றை உட்கொள்வதன் மூலம் இதய ஆரோக்கியத்தைப் பாதுகாக்கலாம்.

**அனால் அளவோடு....**






330 High Street North-Eastham/E12 6PH-Tel:0208 470 7844
e.mail:ganeshajewels@hotmail.co.uk

வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்
—கவிஞர்.வி.க

ஓசை 222



ஆரம்பம்:1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
(முன்னாள் அதிபர்:
குரும்பசிட்டி பொன்.பரமானந்தர்
வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
“ஓவியக்கலைவேள்”
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன் B.F.A.

Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A.



Brinker Höhe.13
58507 Lüdenscheid
Germany
Tel: 02351/45 88 62
01575 83 94 325

e-mail: vettimaniy@hotmail.com



Company No: 8876276


“வெற்றிமணிமொழி”
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


பத்திரிகை வடிவம்
சிவகுமாரன் சஞ்ஜீவன்.B .Eng (Hons)
Vettimaniy Ltd
Sanje:07824 61 83 83
vai g (U.K) 00 44 7788 195962



Vettimaniy has
no responsibility of
the contents of the
articles and
advertisements


# பௌத்த தேசிய வாதத்தின் முன் உண்மையை சொல்லப் போகும் தலைவர் யார்?

**ஆட்சி மாற்றம் என்ற ஒன்றை சாதகமாகக் கொண்டு ஜெனிவா மனித உரிமைச் சபையின் விசாரணைகளை முற்றாகத் தடுப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எடுக்கும் முயற்சி பயனளித்தாலும் அந்த விவகாரத்தை புதிய அரசாங்கம் எவ்வாறு கையாளவுள்ளது என்பது தொடர்பாக பௌத்த தேசியவாதம் அவதானித்துக் கொண்டிருக்கின்றது.**

**–அ.நிக்ஸன்–**

தற்போதைய அரசியல் சூழலில் தென்பகுதி சிங்கள அரசியல் கட்சிகளுக்கு பிரதானமாக மூன்று விடயங்கள் முக்கியம் பெறுகின்றன. ஒன்று நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்பது. இரண்டாவது ஜெனீவா மனித உரிமைச்சபையின் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள அமர்வு ஏற்படுத்தவுள்ள மாற்றங்கள். மூன்றாவது வடமாகாண சபையின் இனப்படுகொலை தொடர்பான பிரேரணை.

### புதிய அரசாங்கத்தின் நிலை

இந்த மூன்று விடயங்களும் புதிய அரசாங்கத்துக்கு சங்கடத்தை ஏற்படுத்தலாம். ஆனால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸ அணிக்கு புதிய பாதை ஒன்றை திறந்து விடுவதற்கான வழியை ஏற்படுத்துவதற்கான சந்தர்ப்பங்களும் உண்டு. முக்கியமாக 100 நாள் வேலைத் திட்டத்தை புதிய அரசாங்கம் செய்து முடிப்பதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே உள்ளன. அதுவும் நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறையை மாற்றியமைப்பது என்ற விடயத்தில் புதிய அரசாங்கம் இன்னமும் முன்னேற்றத்தை காணவில்லை. இந்த நிலையில் நடைபெறவுள்ள பொதுத் தேர்தலை எவ்வாறு எதிர்கொள்வது என்ற விடயத்தில் சவால்களை எதிர்நோக்க வேண்டிய நிலை ஏற்படலாம்

ஆட்சி மாற்றம் என்ற ஒன்றை சாதகமாகக் கொண்டு ஜெனிவா மனித உரிமைச் சபையின் விசாரணைகளை முற்றாக தடுப்பதற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எடுக்கும் முயற்சி பயனளித்தாலும் அந்த விவகாரத்தை புதிய அரசாங்கம் எவ்வாறு கையாளவுள்ளது என்பது தொடர்பாக பௌத்த தேசியவாதம் அவதானித்துக் கொண்டிருக்கின்றது. ராஜபக்ஸவுடன் முரண்பாடுகள் இருந்தாலும் போர்க்குற்ற விசாரணை மற்றும் மனித உரிமை மீறல் குற்றச் சாட்டுக்கள் போன்ற விடயத்தில் சர்வதேச அணுகுமுறைகள் அவசியமற்றவை என்பதுதான் பௌத்த தேசியவாதத்தின் கருத்து. ஆகவே அந்த கண்ணோட்டத்தில் புதிய அரசாங்கம் செயற்படவேண்டும். எனவே ஜெனிவா மனித உரிமைச் சபையின் விசாரணைகளை முற்று முழுதாக நிறுத்தக் கூடிய வல்லமை புதிய அரசாங்கத்திடம் இருக்கின்றதா என்பது கேள்வி?

### வடமாகாண சபையின் நிலைப்பாடு

இந்த நிலையில் வடமாகாண சபை நிறைவேற்றிய இனப்படுகொலை தொடர்பான பிரேரணையை அரசாங்கம் நிராகரித்தாலும் சர்வதேச ரீதியாக அந்த பிரேரணை தற்போது பேசுபொருளாகி விட்டது. அமெரிக்கா உள்ளிட்ட சர்வதேச நாடுகள் இனப்படுகொலை என்பதை இலகுவில் ஏற்றுக்கொள்ளாது என்று கூறினாலும் ஜெனீவா மனித உரிமைச் சபையில் அங்கம் வகிக்கும் ஏனைய நாடுகள் அல்லது வேறு சர்வதேச பொது அமைப்புகள் இனப்படுகொலை என்பதை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ள தயாராக இருப்பதாக கூறப்படுகின்றது. இந்த நிலையில் வடமாகாண சபையின் தீர்மானத்தை இலங்கை இந்திய அரசுகளும் மற்றும் அமெரிக்காவும் எற்றுக் கொள்ளாது விட்டாலும் சர்வதேச அரங்கில் இந்த விடயம் பேசுபொருளாக மாறிவிட்ட நிலையில் புதிய அரசாங்கத்துக்கு அது தொடர்ச்சியான நெருக்கடியை ஏற்படுத்தும் என கூறலாம்.

### மஹிந்த அணிக்கு சாதகமா?

அதேவேளை இனப்படுகொலை தொடர்பான பிரேரணை மஹிந்த ராஜபக்ஸ அணிக்கு மீண்டும் பொதுத் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு சாதகமான சூழலை ஏற்படுத்துமா? என்ற கேள்வி எழுகின்றது. சர்வதே நாடுகள் இலங்கை என்ற சிறிய அரசை பிளவுபடுத்த முற்படுகின்றன என்பதுதான் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவின் குற்றச்சாட்டு. இனப்படுகொலை என்ற விடயம் சர்வதேச அரங்கில் பேசுபொருளாக மாற்றிவிட்டமையினால் எதிர்காலத்தில் அதனை அமெரிக்கா கூட தமக்கு சாதகமாக பயன்படுத்தலாம் என்ற கருத்தை மஹிந்த ராஜபக்ஸ அணி தேர்தல் பிரசாரங்களில் கூறுமானால் அதனை பௌத்ததேசியவாதம் ஏற்றுக் கொள்ளும் நிலை ஏற்படலாம். அவ்வாறான நிலை உருவாகினால் அதற்கு எதிரான பிரச்சாரங்களை புதிய அரசாங்கம் முன்வைக்க முடியாது. ஆகவேதான் உண்மை நிலையை பௌத்த சிங்கள மக்களுக்கு சொல்ல வேண்டிய கட்டாயச் சூழல் உருவாகியுள்ளது.

### துணிவுடன் சொல்வது யார்.

ஆனால் தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் உண்டு என்றும் அதற்காக பிரிபடாத இலங்கைக்குள் சுயாட்சி அதிகாரத்தை வழங்க வேண்டும் என்றும் சிங்கள மக்கள் மத்தியில் அதாவது பௌத்த தேசியவாதிகள் முன்னிலையில் துணிவுடன் சொல்லக் கூடிய அரசியல் கட்சி எது? அல்லது அந்த பிரசாரத்தை முன்கொண்டு செல்லக் கூடிய சிங்கள தலைவர்கள் யார்? கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் இனவாதத்தை பேசியே சிங்கள தலைவர்கள் வெற்றி பெற்றார்கள். ஆட்சியமைத்த சிங்கள கட்சிகளும் ஒட்டுமொத்தமாக இனவாதத்தையே பேசினர். அல்லது தமிழ் மக்களுக்கு அதாவது இனப்பிரச்சினை என ஒன்று உள்ளது அதற்கு தீர்வு காணப்பட வேண்டும் என்று தேர்தல் பிரச்சாரங்களில் கூறவில்லை.

இறுதியாக கடந்த மாதம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்திலும் கூட இனப்பிரச்சினை தொடர்பான மூடி மறைப்புகள்தான் இடம்பெற்றன. தமிழ்த்தேசிய கூட்டமைப்புடன் பேசினால் கூட ஈழத்துக்கு ஆதரவு கொடுப்பதாகவே சிங்கள பௌத்த தேசியவாதம் கருதியது. மைத்திரிபால சிறிசேனவுக்கு ஆதரவு வழங்கிய தமிழ்த்தேசிய கூட்டமைப்பு இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான எந்த ஒரு உறுதிமொழியும் இன்றியே வாக்களிக்குமாறு தமிழ் மக்களிடம் கோரிக்கை விடுத்தார்கள். ஏனெனில் உறுதிமொழிகள் அல்லது ஒப்பந்தங்களை செய்தால் சிங்கள மக்கள் மைத்திரிபால சிறினேவுக்கு வாக்களிக்கமாட்டார்கள் என முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா சம்பந்தனிடம் கூறியதாக தகவல்.

தொடர்ச்சி 04 ம் பக்கம்




# முருகனே தனி நாடு கேட்ட போராளிதானே... சீமான் ”





திருவிளையாடல் திரைப்படத்தில் வரும் வசனம் ஒன்றே “முருகன் தனிநாடு கேட்ட போராளி“ என்பதற்கு ஆதாரம் என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

இயக்குநராக இருந்த சீமான் திராவிடர் இயக்க மேடைகளில் பகுத்தறிவுக் கருத்துகளையும் ஈழ விடுதலை ஆதரவு கருத்துகளையும் பேசிவந்தார். 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் “திராவிட“ எதிர்ப்பு அரசியலை முன்வைத்து “நாம் தமிழர்“ இயக்கத்தைத் தொடங்கினார்.

பின்னர் இதனை “நாம் தமிழர்“ அரசியல் கட்சியாக மாற்றினார். அண்மையில் நாம் தமிழர் கட்சியில் பிளவு ஏற்பட்டு. அய்யநாதன் தலைமையில் ஒருபிரிவினர் “நாம் தமிழர்“ என்ற பெயரில் செயல்பட்டு வருகின்றனர். இந்நிலையில் பழனியில் பச்சை வேட்டி, துண்டு அணிந்து வேல் ஏந்தி, மனைவியுடன் காவடி எடுத்த சீமான், வீரத் தமிழர் முன்னணி என்ற பண்பாட்டு மீட்பு அமைப்பைத் தொடங்கினார்.

அதன் தொடக்க விழாவில் பேசிய சீமான், கடவுள் முருகன் எங்களது முப்பாட்டன்.. முப்பாட்டனை நாங்கள் வழிபடுகிறோம் என்றார்.

இது கடுமையான விமர்சங்களுக்கு வழிவகுத்திருக்கிறது. இந்நிலையில் சிகப்புநாடா என்ற ஏட்டில் சீமான் அளித்த பேட்டி ஒன்றில் கூறியிருப்பதாவது:

கேள்வி: முருகன் போராளின்னு சொல்றதுக்கு என்ன ஆதாரம் வைச்சிருக்கீங்க?

பதில்: நீங்க திருவிளையாடல் படம் பாக்கலையா.. ஒரு மாங்கனிக்காக சூது பண்ணி பிள்ளையார் கவுத்த உடனே, “எனக்கென்று ஒரு நாடு, எனக்கென்று ஒரு கொடி, என்நாடு, என் மக்கள்னு“ சொல்லிட்டு முருகன் தனியா கிளம்பி வந்துரல...?
என்ன தம்பி பேசறீங்க.. இதுக்கு மேல என்ன ஆதாரம் வேணும் சொல்லுங்க
கேள்வி: சரிங்க,, முருகனை தமிழ்க்கடவுள்னு ஒத்துக்கிட்டீங்க.. அவரோட அண்ணன் பிள்ளையார், அப்பா சிவன் எல்லோரையும் ஏத்துக்கனுமே பதில்: ஆங்.. அங்கதான் இருக்கு ஆரிய சூழ்ச்சி. அவங்க அப்பா சிவன்கூட தமிழன்தான்..

தமிழ்ச்சங்கத்தோட தலைவனாக இருந்தவன் தான்.. ஆனா அந்த பிள்ளையார்தான் ஆரியர்கள் புகுத்திய இடைச்செருகல்...நாங்க தெளிவா இருக்கோம்ல...

எங்களை யாரும் ஏமாத்த முடியாதுல்ல.. இப்படியான “கலகலப்பாக“ நீள்கிறது சீமானின் பேட்டி.




ஸ்ரீ மலையாளம் பகவதி ஜோதிட நிலையம்

100% Satisfaction Guarantee



Specialised in Astro Palmist (Tamil)



காளியம்பாள் வசீகரணம் சக்தி ஜோதிடர் இந்தியாவில் புகழ்பெற்ற ஜோதிடர்
ஜாதகக்குறிப்பு வாஸ்து சாத்திரத்தில் சிறந்த நிபுணர்
P.K.குருசாமி

ஜாதகம் கைரேகைபார்த்து பலன் சொல்வார். கணவன் மனைவி பிரச்சினை-பிரிவு-பிள்ளைகள் பிரச்சினைகள்.காதலர் பிரிவு. திருமணத்தடைகள் வேலை, தொழில் இவற்றில் உள்ள பிரச்சினைகள் தீர்த்துவைப்பார். செய்வினை பில்லி சூனியத்தால் பாதிப்பு உள்ளவர்களுக்கு அவை நீக்கப்படும்.தமிழ் மொழியில் சொல்லப்படும் கேரளா மாந்தீரகள். குறிப்பு: 48 நாட்கள் மண்டலா அபிசேகம் செய்து, உருவப்படம் தாமரைத்தகடு வழங்கப்படும்.இவற்றைப் பெற்றவர்கள் நல்ல பயன் அடைகின்றார்கள். வீட்டுக்கும் வியாபார பெருக்கத்திற்கும் இத்தகடு உதவும்.

Wilhelm Str.27
59067 Hamm

திங்கட்கிழமைகளில் இலவசமாக ஜோதிடம் பார்க்கப்படும்.

Tel:
0049 152 1675 8175
0049 152 1025 7807


## பௌத்த தேசிய வாதத்தின் முன் .....

3ம் பக்கத் தொடர்ச்சி...

**இந்த நிலைமாற வேண்டும்**

ஆகவே சிங்கள பௌத்த தேசியவாதத்திற்கு பயந்து செயற்படும் இந்த பொய்யான அரசியல் செயற்பாடுகள் மாற்றமடைய வேண்டும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கூட தமிழ் மக்களின் பிரச்சினைகளை தனது சுயநல அரசியலுக்கு பயன்படுத்தி வருகின்றார் என முதலமைச்சர் விக்னேஸ்வரன் கூறியமை ஏற்புடையது. ரணில் விக்கிரமசிங்க ஒரு நரி என முன்னாள் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் கூறிய கருத்துக்கு அது ஒப்பானது என அரசியல் விமர்சகர் ஒருவர் சுட்டிக்காட்டியிருந்தார்.
ஆகவே தொடர்ச்சியாக தேவையற்ற நெருக்கடிகளை எதிர்கொள்ளாமல் 60 ஆண்டுகால அரசியல் பிரச்சினைகளுக்குரிய தீர்வை ஒன்றினைந்து முன்வைப்பதற்கு ஏற்ற வழிவகைகளை காணவேண்டும். வடமாகாண சபையின் பிரேரணையை நிராகரித்து யுத்தத்தில் இடம்பெற்ற படுகொலைகள் மற்றும் அநீதிகளை புறம்தள்ளாமல் பல்லின சமூகங்கள் வாழும் நாடுகளில் உள்ள அரசியல் யாப்பு விதிமுறைகளை பின்னபற்றி நேர்மையான அரசியலுக்கு இடமளிக்கப்பட வேண்டும்.




Wilhelm Str.09
33602 Bielefeld

Lakshmi Jewellery &Silks




பசுமையான மரக்கறிவகைகளும் கடலுணவுப்பொருட்களும்
இவற்றுடன் பலசரக்குப் பொருட்களையும் எம்மிடம்
மலிவாகப்பெற்று பயன் பெறுங்கள்

Asia super markt



தமிழ் புதுவருடத்தை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!
15.03.2015 முதல் 15.04.2015 வரை
அனைத்து ஆடைகளும்
சிறப்புக் கழிவு விலையில்....

Tel:0521 4283 510
தொலைபேசி: Ruban 0179 72 35 729



# கண்ணகி, மாதவி, கோவலன்,




### “புலம்பெயர் வாழ்வில் கண்ணகியும் மாதவியும்“

என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதி அனுப்ப முடியுமா என வெற்றிமணி ஆசிரியர் கேட்டிருந்தார். பெண்கள் எப்போதும் விழிப்பாக இருப்பதற்காக, கண்ணகி மாதவி விடயம் அடிக்கடி பேசப்பட வேண்டிய விடயம்தான் என்பதை நடைமுறை வாழ்வும் நாளாந்த அனுபவங்களும் எங்களுக்கு நினைவூட்டிக் கொண்டு தானிருக்கின்றன.

அம்பை, அகலிகை, போன்ற சில இதிகாச மற்றும் காப்பியப் பாத்திரங்கள் மறுவாசிப்புச் செய்யப்பட்டிருக்கின்றன. அத்துடன் அவை சிந்தனைக்கு நல்ல விருந்தாகவும் அமைந்திருக்கின்றன. மதுரையில், கண்ணகி மூட்டிய தீயில் எரியூண்ட ஒருவரின் மனைவி, “உந்தன் இழப்புக்கு ஊரை எரிப்பது எவ்விதத்தில் நெறிமுறையோ”, எனக் கேட்டு கண்ணகியைக் கல்லாகச் சமைப்பதாக 'அக்னி சாட்சி' என்ற திரைப்படத்தில், இயக்குநர் கே. பாலசந்தர், கண்ணகியை அழகாக மறுவாசிப்புச் செய்திருந்தார். அவ்வகையில், இளங்கோ அடிகளின் சிலப்பதிகாரப் பாத்திரங்கள் பற்றிய என் பார்வையை, நடைமுறை வாழ்க்கையுடன் சேர்த்து எழுதலாம் என நானும் விழைகின்றேன்.

கரிகால மன்னனின் சபையில், மாதவி, அன்று தன் நாட்டியத் திறனைக் காட்டிய போது, தன்னுடைய வாழ்க்கையில் பெரியதொரு மாற்றம் நடக்கப் போகின்றது என அறிந்திருக்க மாட்டாள். அவளுடைய அந்த அற்புதமான நடனத்தைக் கண்டு மகிழ்ந்த சோழ மன்னர், பச்சை மாலை ஒன்றையும், மிகச் சிறப்புப் பட்டமான, “தலைக்கோலி“ என்ற பட்டத்தையும் மாதவிக்கு அளித்து அவளைப் பெருமைப்படுத்துகின்றார்.
வேலைக்காரப் பெண்ணின் கையில் அந்தப் பச்சை மாலையைக் கொடுத்து, நகரத்து இளைஞர்கள் பலரும் திரிந்து கொண்டிருக்கிற பெருந்தெருவிலே நின்று, அந்த மாலையை வாங்குபவர் மாதவியை அடையலாம் எனக்கூறி விற்குமாறு அனுப்புகின்றாள், மாதவியின் அன்னை சித்ராபதி.
கலையார்வமும் இளமைத் துடிப்பும் மிகுந்த கோவலன், அக்காலச் சமுதாய மரபுப்படி, மாதவியின் உடலைப் பொருள் கொடுத்து வாங்கலாம் என நினைத்து அன்று அந்த மாலையை வாங்கியிருக்கலாம். அல்லது, டாக்டர் மு.வ சொல்வது போல, அரங்கேற்றத்தின்போது மாதவி, தன்னையே காதல்கொண்டு நோக்கினாள் என எண்ணி, தானும் அவள் மேல் மையல்கொண்டு அந்த மாலையை வாங்கியிருந்திருக்கலாம்.
எதுவாக இருந்தாலும், போனவன் அங்கேயே தங்கிவிடுகின்றான். பரம்பரை வழக்கப்படி, தான் ஒரு நாடகக் கணிகையாக இருக்க மாட்டேன் எனத் தனது தாயாருக்கு உறுதியாகச் சொல்லியிருந்த மாதவி, கோவலனுக்கும் தன் நிலையைச் சொல்லத் தவறியிருக்க மாட்டாள் என்று கருதுவதற்கு இங்கு இடமுண்டு. இருந்தாலும், இது கண்ணகிக்கு ஏற்படுத்தக்கூடிய பாதிப்புப் பற்றி மாதவியோ அல்லது கோவலனோ எதுவும் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

எப்படியோஇ காலம் கரைகின்றது. மாதவியின் ஊடலும் கூடலும் முடிவுறா மகிழ்ச்சியைக் கோவலனுக்குக் கொடுக்க, அதற்குள் அமிழ்ந்து போகின்றான், அவன். மேலும் மாதவி தனக்குரியவளாக மட்டுமே இருக்க வேண்டும் என்ற ஆக்ரமிப்பு மனப்பான்மையும் அவனுக்குள் வளர்கின்றது. அதனால், கோயிலில் பலர் முன்னிலையில் மாதவி நடனமாடுவது அவனுக்குப் பிடிக்காமல் போகின்றது.

அவ்வகையில், இந்திரவிழாவில், அவள் ஆடிய நடனம் அவனுக்கு எவ்வளவு சினத்தைக் கொடுத்திருக்கின்றது என்பதை உணராத மாதவி, யாரோ ஒரு பெண்ணை நினைத்துப் பாடுவது போல் கோவலன் பாடிய பாட்டுக்குப் பதிலாக, தானும் அப்படி இன்னொருவனை நினைத்து ஏங்கிப் பாடுவது போல ஊடல்கொண்டு பாடுகின்றாள். ஆனால், அந்தப் பாடல் கோவலனின் உள்ளத்தில் மேலும் கோபத்தை வளர்த்து, அவளை விட்டு அவன் பிரிவதற்குக் காரணமாகின்றது. மாதவிக்கு ஏற்பட்ட இந்தப் பிரிவுத் துயருக்கு கண்ணகியின் கண்ணீர் வித்திட்டிருக்கலாமோ என்றும் இங்கு எண்ணத் தோன்றுகின்றது
தானாக மாதவியின் வீட்டைத் தேடிச் சென்று, அங்கு உண்டு, உறங்கி, களிப்பான வாழ்க்கையை வாழ்ந்தவன், பின்னர், மாதவியை விட்டுப் பிரிந்து கண்ணகியிடம் சென்றதும், 'சலம்புணர் கொள்கைச் சலதி' என அவள் மேல் அவதூறுகளை வாரியிறைத்து அவளைத் தூற்றுகின்றான். தன் மேல் பிழை என எதையும் சொல்லி அவன் கண்ணகியிடம் மன்னிப்புக் கேட்டதாகவோ அல்லது நடந்த உண்மையைச் சொல்லி, இனி இப்படி எதுவும் நடக்காது எனக் கண்ணகிக்கு உறுதிமொழி சொன்னதாகவோ சிலப்பதிகாரம் சொல்லவில்லை.
பொருள் போய்விட்டது என வருந்தும் கோவலனிடம் தன் சிலம்பைக் கொடுக்கின்றாள், கண்ணகி. ஆனால், மாதவியிடம் அவன் போனதற்காக அவள் சினக்கவும் இல்லை, ஆத்திரப்படவுமில்லை.

மீண்டும், இப்படித் தன்னை விட்டுவிட்டு மாதவியிடமோ அல்லது இன்னொருத்தி யிடமோ அவன் போக மாட்டானா என அவள் அவனைக் கேள்விகளால் குடையவுமில்லை. குற்றம் சொல்லவு மில்லை. இன்பத்திலும் துன்பத்திலும் கை கொடுப்பேன் எனத் திருமணம் செய்து விட்டபடியால் அவனுக்கு உதவுவது தனது கடமை எனக் கண்ணகி நினைத்திருக்கக் கூடும்.

இருந்தாலும், அவ்வகையில் அடக்கி வைக்கப்பட்ட உணர்வுகளால் உருவான ஒரு மனத்தகைப்புத்தான் மதுரையை எரிக்கும் அளவுக்கு ஆவேசத்தை கண்ணகிக்குக் கொடுத்திருக்கலாம் என நினைப்பதற்கும் இங்கு இடமுள்ளது. தன்னுடைய குற்றம் மனதில் உறுத்தியதால், மற்றவர்களின் முகத்தில் விழிக்க அஞ்சி, இரவோடு இரவாக யாருக்கும் தெரியாமல் சோழ நாட்டை விட்டு விலகி, பாண்டிய நாட்டுக்கு கண்ணகியுடன் செல்கின்றான் கோவலன்.

போகும் வழியில், வசந்தமாலை மூலம் மாதவி கொடுத்தனுப்பிய செய்தி என்னவென்று கூடப் பார்க்காமல் இருக்கும் அவனை அவளிடமிருந்து வந்த இரண்டாவது செய்தி குழப்பி விடுகின்றது. மாதவியோடு நடத்திய இன்ப வாழ்க்கையை அது அவனுக்கு நினைவு படுத்துகின்றது.

தொடர்ச்சி 6ம் பக்கம்...



**கண்ணகி, மாதவி, கோவலன்,** 5ம் பக்கத் தொடர்ச்சி....

அதனால், கடமையுணர்வுடன், கட்டிய மனைவியான கண்ணகியோடு வாழ்க்கை நடத்த வேண்டுமென்று அவன் முயன்ற போதும், அதற்கு அவன் மனம் இடங்கொடுக்கவில்லை. இதனையேஇ "மாதவி அனுப்பிய கடிதம் அவனை மறுபடியும் பழைய கோவலனாக மாற்றிவிடுகிறது. அவன் மனத்தில் மகிழ்ச்சி பொங்குகிறது. வழியில் கண்ட பாணர்களிடம் யாழை வாங்கி, யாவரும் வியக்கும்படியான அளவுக்கு இசையைக் கூட்டுகிறான், என கோவலனுக்கும் கண்ணகிக்கும் எந்த அளவிலும் மனப்பொருத்தமில்லை என்பதை மிக நுண்மையான முறையில் காட்டுகிறார் இளங்கோவடிகள்", என்கிறார், இந்திரா பார்த்தசாரதி அவர்கள். மாதவியும் அவன் தன்னிடம் மீள வருவான் என அவன் மேல் கொண்ட மாறாக் காதலினால் காவலிருக்கின்றாள். பரம்பரை வழக்கப்படியான கணிகையர் குலம் என ஒன்று இல்லாத சூழலிலும்கூட இவ்வகையான, கோவலன் மாதவி - கண்ணகி உறவுகளை புலம் பெயர் வாழ்வில் மட்டுமன்றி, இலங்கையிலும் நாம் பார்த்திருக் கின்றோம், இப்போதும் பார்க்கின்றோம். இங்கு, அவை அதிகளவில் உருவாகுவதற்கு மன உளைச்சல் நிறைந்த வாழ்வு, அணுகக்கூடிய வசதிகள் அதிகம் உள்ளமை என்பன பெருமளவில் தூண்டலாக அமைகின்றன எனலாம். தங்களுடைய ரசனைகளுக்கேற்றபடி உறவுகளைத் தேடும் கோவலன்கள், முடிவில் சமுதாயம், கலாசாரம் என்ற வரம்புகளை மேவ மாட்டாமலோ அல்லது வேறு சுயநலக் காரணங்களுக்காகவோ, மீண்டும் பழையபடி குடும்ப வாழ்வுக்குள் போய்ச் சேருவது அல்லது அதற்குள் இருந்து கொண்டு மற்றைய உறவையும் பேணுவதும் கண்ணகிகளும் அது தான் தம் விதி எனக் காதலினாலோ அல்லது வேறு வழியில்லாததாலோ ஏற்றுக்கொள்வதும் மாதவிகள் தமது மடமையை எண்ணித் தம்மை நொந்துகொள்வதும்தான் அனேகமாக நடக்கின்றது.

அத்துடன் கலாசாரம் என்ற முலாம் பூசி, உறவுகளைப் பார்க்கும் எங்கள் தலைமுறையும் இதைத்தான் ஏற்றுக் கொள்கின்றது. உண்மையாக வாழ்வதை விட உலகுக்காக வாழ்வது உத்தமமானது, ஆண்கள் என்றால் அப்படித்தான் இருப்பார்கள், என்று கோவலன் பக்கம் நின்று, கண்ணகி சரியாக இருக்கவில்லை என்றோ அல்லது சட்டப்படி விவாகரத்து ஆகாத அவனுடன் உறவை ஏற்படுத்தும் மாதவிக்கென்ன அறிவு என்றோ பொதுவாகப் பெண்களைக் குற்றம் சொல்வதுடன், கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்று கோவலன் பிழை பொறுத்து குடும்பத்தைக் கட்டிக் காக்க வேண்டும் என்று கண்ணகிகளுக்கு ஆலோசனை வழங்குகின்றது.

'அந்தரங்கம் புனிதமானது' என்ற கதையில் வரும் சுந்தரத்தின் மனைவி ரமணியம்மாள் மூலம் ஜெயகாந்தனும், 'அம்மா வந்தாள்' நாவலில் வரும் அப்புவின் அப்பா மூலம் ஜானகிராமனும்கூட, adultery எனும் பிறர்மனை நயத்தல் செய்த துணையின் பிழை பொறுத்து குடும்பம் என்ற அமைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்தலே வேறு எந்த வாழ்க்கைப் பெறுமானத்தையும் விட மிகவும் முக்கியமானது எனச் சொல்கின்றார்கள். பெண்ணியம் பேசுபவர்கள் கூட நியாயத்தின் பக்கம் நிற்பதைவிட குடும்பம் என்ற அமைப்புக்கே முக்கியத்துவம் கொடுக்குமளவுக்கு கலாசாரம் அனைவரையும் அதற்குள் ஊறப் போட்டிருக்கின்றது எனலாம்.

ஆனால், தற்போது, கலாசார மாற்றம், சுதந்திரம் என்றால் என்ன என்பது பற்றிய சிந்தனை, பிறருக்காக அன்றி எமக்காக வாழ வேண்டும் என்ற அவா, நேர்மையாக இருப்பதே உறவில் முக்கியமான பெறுமானமாக இருக்க வேண்டும் என்ற கோட்பாடு என்பவற்றால், இந்த நிலைப்பாடு சற்றுப் பிரச்சினைக்குள்ளாவதையும் நாங்கள் பார்க்கின்றோம்.

தேவைக்கேற்பவும் நிலமைக்கேற்பவும் மாறும் பச்சோந்திகளாக இருப்பது சுலபமான விடயமாக இருப்பதால், கோவலன்களாக இருப்பதே சில கோவலன்களுக்கு பிடித்திருந்தாலும்கூட, அனேகமான கண்ணகிகளோ அல்லது மாதவிகளோ அப்படி இருக்கத் தயாராக இல்லை. அப்படிக் கண்ணகிகள் தங்களின் உரிமைகளுக்குப் போராடும் போது - மாதவிகளுடான தொடர்பை இல்லாமல் செய்ய வேண்டும் என்ற நிலைக்கு கோவலன்கள் தள்ளப்படும் போது சில கோவலன்கள் ஊரை விட்டு ஓடி ஒளிகின்றார்கள் அல்லது மாதவிகள் தம்மைத் துன்புறுத்துகிறார்கள் எனக் குற்றம் சாட்டி, அவர்கள் தம்முடன் தொடர்புகொள்ளல் ஆகாது என்று காவல்துறையினரின் மூலம் அவர்களுக்கு எச்சரிக்கைச் செய்தி அனுப்புகிறார்கள்.

இப்படியான விடயங்களை, இளம்வயதினர் முதல் முதியோர் வரை, சராசரி மனிதன் முதல், மேதாவிகள், சமூகப் புரட்சி செய்யும் எழுத்தாளர்கள் எனத் தம்மை இனம்காட்டுவோர் ஈறாக, எல்லோருமே எந்த வேறுபாடுமின்றி செய்கின்றார்கள் (அதே போல, அகலிகைகளும் தமது விருப்பு முடிந்த பின்பும் இந்திரன் திரும்பிச் செல்லாமல் தொடர்ந்து அவர்களுடன் இருக்க முயற்சித்தால், தாம் மீளவும் கௌதமரிடம் செல்வதற்காக, சுயநலத்துக்காக சட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்கிகின்றார்கள்).

அதே சமயத்தில், இது இன்னொரு விதமான உளவியல் தேடலையும் உருவாக்கி சிலரில், முக்கியமாகப் பெண்களில், பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இதனால் மனநோய் மருத்துவமனைகளில் நோயாளர் எண்ணிக்கை அதிகமாவதைக்கூடக் காணக் கூடியதாகவுள்ளது. இதைத்தான் டாக்டர். க. ரத்தினம் அவர்கள், அகலிகை பின்வருமாறு கொதிப்பதாகச் சொல்கிறார். கொடுத்தேன் வாங்கினேன்! என்ற கொள்கைவாத வணிகப் பேய்க்கு! எனது நாட்டம் எப்படித் தெரியும்?"

இவ்வகையில் அனேகமான கோவலன்களுக்கும்.·.இந்திரன்களுக்கும் கொடுத்தேன், வாங்கினேன் என்றரீதியிலான சிறு சம்பவங்களாக இருக்கும் இந்த உறவுகள் சில மாதவிகளுக்கும், அகலிகைகளுக்கும் மறக்கமுடியாத சரித்திரங்களாகவும் மாறிவிடுகின்றன. அதே போல கண்ணகிகளினதும் கௌதமர்களினதும் வாழ்க்கையையும் மனங்களையும் இது வெகுவாகப் பாதிக்கின்றது. எனவே தன் அன்பின் பெறுமதி தெரியாத ஒருவரை எண்ணி ஏங்குவதும், அவரை நம்பி உரிமையற்ற உறவு கொள்வதும், பந்தங்களுக்காகவோ அல்லது பொருளாதாரக் காரணங்களுக்காக குறிப்பிட்டவருடன் வாழ்வதும் நின்றுபோய், அரிதாரிகள் தூக்கி எறியப்பட வேண்டும் என்ற சிந்தனையும் செயலும் மகளிர் தினம் கொண்டாடப்படும் இந்த மார்ச் மாதத்தில் உறுதிசெய்யப்படல், இவ்வகையான மாதவி கண்ணகி - கோவலன் உறவுகளையும் அந்த மனப்பான்மையையும் முடிவுக்குக் கொண்டுவர உதவிசெய்யும்.



# தமிழர் மரபுத் திங்கள் - பங்குனி

முனைவர் மனோன்மணி சண்முகதாஸ்





தமிழரது மரபு எத்தகையது என்பதை இன்று தேடிச்செல்ல வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக இளைய தலைமுறை தமிழர் என்னும் இனத்தின் வரலாற்றையும் பண்பாட்டையும் வாழ் வியலையும் இணையத் தளங்களிலே தேடுகிறது. உலகத்து ஏனைய இனங்களோடு தமிழினத்தை ஒப்பிட்டு நோக்க விரும்புகிறது. அவர்களுக்கு வேண்டிய தகவல்களையும் குறிப்புகளையும் இன்று வாழும் மூத்தோர் கொடுக்க வேண்டியுள்ளனர். முதியோர் தம்பட்டறிவை அதற்காகப் பதிவுசெய்ய வேண்டிய பொறுப்பை ஏற்கவேண்டும். இளமைக்கும் முதுமைக்குமிடையே இடைவெளியைப் பேணாமல் வாழ வேண்டும்.

முதுமை இளமையைத் தனக்கு ஏற்ற ஊன்றுகோலாக்கி உலகைவலம் வர உடன்நிற்க வேண்டும்.

தமிழர் மரபான வாழ்வியலில் காலக்கணிப்பு என்பது ஒருநீண்ட பண்பாட்டுநடைமுறையாக பேணப்பட்டு வந்துள்ளது. அந்த வகையில் ஓராண்டினைத் திங்கள் பன்னிரண்டாக வகுத்துக் காலத்தின் கடப்பை உணர்ந்து வாழும் மனப்பக்குவம் தமிழரது வாழ்வியலாக இருந்ததைத் தமிழிலக்கியங்கள் காலத்துக்குக் காலம் பதிவு செய்துள்ளன. இப்பதிவுகளின் தரவுகள் இன்றும் நமக்கு வழிகாட்டுவனவாக உள்ளன. இன்று பங்குனித் திங்கள் பற்றிய பதிவுகளை நோக்கலாம்.

காலத்தால் முற்பட்ட பழந்தமிழ் இலக்கியங்களான சங்கஇலக்கியத் தொகுப்பு நூல்களில் அகநானூறு, புறநானூறு என்னும் தொகுப்பு நூல்களில் பதிவுகள் காணப்படுகின்றன. 'பங்குனி' என்னும் திங்களின் பெயர் குறிப்பிடப்படும்போது சிறப்பான பண்பாட்டு நிலையும் விளக்கப்பட்டுள் ளது. அகநானூறு பதிவு பின்வருமாறு அமைந்துள்ளது.

"இன்கடுங் கள்ளின் உறந்தை ஆங்கண்
உருவ வெண்மணல் முருகுநாறு தண்பொழில்
பங்குனி முயக்கம் கழிந்த வழிநாள்
வீஇலை அமன்ற மரம்பயில் இறும்பில்
தீதில் அடுப்பின் அரங்கம் போலப்
பெரும்பாழ் கொண்டன்று நுதலே.........."
(பாடல்: 137)

இப்பாடல் காதலனைப் பிரிந்தகாதலியின் உணர்வைப் பதிவுசெய்வதாக அமைந்துள்ளது. பெண்ணின் பிரிவுத் துன்பத்தின்போது காலத்தின் கடப்பை எண்ணி அவள் வருந்துகிறாள். அவனோடு மகிழ்வாக இருந்த காலத்தை மீண்டும் நினைத்துப் பார்க்கிறாள்.

"சோழ நாட்டிலே உள்ள ஒரு சிறப்புப் பெற்ற ஊர் உறந்தை. வீரர்கள வெற்றியைக் கொண்டாட இனியகள்ளை அருந்திமகிழும் காலம். அந்த ஊரிலே நிறைந்த வெள்ளம் கரைபுரண்டு ஓடும் பேரியாற்றங்கரை. அழகிய வெண்மணற் பரப்பு.

நறுமணமவீசும் குளிர்மையான பூஞ்சோலை. அங்கு வெம்மையான பங்குனித் திங்களின் போது மகிழ்வோடு இருவரும் தழுவியிருந்த நாட்கள். அவை கழிந்துவிட்டன.இப்போது இலையில்லாத மரம் நிறைந்த காட்டிலே தீப்பற்றி எரிந்து முடிந்த பின்னர் அடுப்பிலே காணப்படும் தனல் போலக் காட்சியளிக்கும். அதுபோல எனது நெற்றியும் வெம்மையாக பாழாக உள்ளது."

இங்கு காதலன் உடனிருந்த போது காதலிக்குப் பங்குனித் திங்களின் வெம்மை தெரியவில்லை. ஆனால் அவன் பிரிந்து சென்றபோது கூர்மையாகத் தெரிகிறது. மனித உணர்வுகளை இயற்கை நிலையோடு பதிவுசெய்யும் புலவர் பங்குனித் திங்களின் வெம்மையின் கொடுமையையும் வெகு நுட்பமாக விளக்கியுள்ளார். இந்த வெம்மையின் கொடுமையைப் புறநானூற்றுப் பாடல் பின்வருமாறு பதிவு செய்துள்ளது.

"முடப்பனையத்து வேர்முதலாக்
கடைக்குளத்துக் கயம்காயப்
பங்குனி உயர் அழுவத்து......" (பாடல்: 229)

"முடமான பனந்தோப்பில் வெம்மையால் நிலம் காய மரங்களின் வேர்கள் வெளிவரு
கின்றன. அருகிலுள்ள குளம், குட்டையிலுள்ள நீரெல்லாம் வற்றிவிட்ட பங்குனித்
திங்களின் அதிவெப்பநிலை........."

இங்கும் பங்குனித் திங்களின் வெப்பநிலை தெளிவாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. "பங்குனித் திங்களில் பகல்வெளி நடந்தவனைப் பார்த்திருப்பவனும் பாவி" என இன்றும் தமிழரிடையே ஒருமுது மொழி வழக்கில் இருப்பது பங்குனித் திங்களின் வெம்மையை மக்கள் நினைவில் கொள்ள வேண்டும் என்பதைக் குறிப்பதாக உள்ளது.

இத்தகைய வெம்மையான பங்குனித் திங்களின் கொடுமையிலிருந்து தம்மைப் பேணுவதற்குத் தமிழர் சில வழிபாட்டு நடைமுறைகளைக் கைக்கொண்டுள்ளனர். ஆண்டாளுடைய நாச்சியார் திருமொழியும் பங்குனித்திங்கள் பற்றிய நடைமுறை ஒன்றைப் பதிவுசெய்துள்ளது. காம தேவனை வேண்டி நோன்பு நோற்பதாக அச்செய்தி அமைந்துள்ளது.

"உருவுடையார் இளையார்கள் நல்லார்
ஓத்துவல் லார்களைக் கொண்டுவைகல்
தெருவிடை யெதிர்கொண்டு பங்குனிநாள்
திருந்தவே நோற்கின்றேன் காமதேவா"

இங்கு ஆண்டாள் ஒரு முக்கியமான செய்தியைக் குறிப்பிட்டுள்ளாள். அழகிய இளைய தலைமுறை யினர், நற்குண இயல்புடையவர்கள் கற்றறிந்தவர்களைக் கொண்டு வழிபாட்டு நடைமுறைகளை அறிந்து அதனை மேற்கொள்கின்றனர். நாள் தோறும் பங்குனித் திங்களில் தெருவிடையே நோன்பு நோற்பவரை ஆண்டாள் எதிர்கொள்கிறாள். அவர்களைப் போலவே தானும் முறைப்படி நோன்பு நடைமுறைகளைத் திருத்தமாக மேற்கொள்வதைக் கூறியுள்ளாள். ஆண்டாள் வாழ்ந்த காலத்தில் வழிபாட்டு நடைமுறைகளை இளையோரும் மேற்கொண்டிருந்தனர். குறிப்பாகப் பெண்கள் அவற்றை மேற்கொண்டு திங்களின் வருகையையும் நிறைவையும் தமது வாழ்வியலோடு இணைத்துக்கொண் டனர். பங்குனித் திங்களின் வெம்மையான காலம் ஒரு வழிபாட்டுக்குரிய காலமாகவும் பேணப்பட்டதைத் திருஞானசம்பந்தரும் தமது பாடலில் பதிவுசெய்துள்ளார்.

"மலிவிழா வீதிமட நல்லார் மயிலைக்
கலிவிழாக் கண்டான் கபாலீச்சர மமர்ந்தான்
பலிவிழாப் பாடல்செய் பங்குனி யுத்தரநாள்
ஒலிவிழாக் காணாதே போதியோ பூம்பாவாய்"

இப்பாடலில் பங்குனித் திங்கள் உத்தர நாளன்று மைலாப்பூர் எனத் தற்போது வழங்கப்படும். மயிலையிலே உள்ள கபாலீச்சரம் என்னும் திருக்கோயிலிலே பெண்கள் கொண்டாடிய வழிபாட்டு நடைமுறை ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளது. திருக்கோயில்களிலே பெண்கள் செய்யும் சிறப்பான வழிபாட்டு நடைமுறைகளைப் பதிவுசெய்தமைக்கு ஒரு காரணத்தையும் ஊகிக்கமுடிகிறது. ஒரு குறிப்பிட்ட திங்களின் வருகையை இயற்கை நமக்கு அறிவிக்கும். ஆனாலதை உற்றுநோக்கிச் செயற்பட மனிதன் மறப்பதுண்டு.

தொடர்ச்சி 8 ம் பக்கம்...

Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும் சுடச்சுட சுவைகுன்றாது
உங்களுக்குத் தேவையான இலங்கை, இந்திய, ஐரோப்பிய உணவுவகைகளை
தயாரித்து நாம் வழங்குகின்றோம்!
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டப நடுப்பகுதிச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளனர்.
NANDY'S CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
www.Nandys.de
e.mail:info@nandys.de

# யாழ்ப்பாணம் அழகாக இருந்தாலும் ஏனோ மனம் ஏங்குது!

நகுலா சிவநாதன்



போர் காலத்திற்கு பின் பழைய யாழ்நகரை இன்று காண முடிந்தது. பழைய என்று அல்ல நவீன யாழ் நகராக மிளிர்வு பெற்றுள்ளதை பார்க்க கூடியதாக இருந்தது. குன்றும் குழியுமாக இருந்த பூமி இன்று நவீன வீதிகளின் அமைப்பால்நாலாபுறமும் அழகிய வேகவீதிகளாக உள்ளன. சத்தம் காதை செவிடு படுத்தும் வண்ணம் வாகன அதிகரிப்பும் ஓட்டமுமாக பிசியாக வீதிகள் உள்ளன.

பயம் என்பது இல்லாத சுதந்திர பூமியில் நடமாடிய அனுபவம் இருந்தது. இயற்கையாக குருவிகளின் ஓசைகள் மிருகங்களின் சத்தங்கள் பாடசாலைப்பிள்ளைகளின் ஆரவாரம் ஆலயமணி ஓசை அத்தனையும் மகிழ்வையும் இயற்கையோடும் ஒன்ற வைத்தன. பழங்கள் நிறைந்த மரங்கள் வாழைப்பழங்கள் பலாப்பழம் கொய்யா கனிகள் மரத்தை நிறைத்தன. மகிழ்வாய் அதனை அழகான இயற்கை உணவுகளாய் உடன் பெற்று உண்ணவும் முடிந்தது.

மக்கள் மகிழ்வாகவும் ஆனந்தம் நிறைந்தவர்களாகவும் காணப்பட்டனர். தென்றல் காற்றின் இனிமை உடலை மட்டுமல்ல உணர்வுகளையும் உற்சாக மடைய வைத்தன. ஆங்காங்கு ஓடும் ரயில்கள் போருக்கு முன் உள்ள யாழ்நகரை நினைவூட்டவைத்தன. கிராம மணம் கமிழும் பாடல்கள் பேருந்துகளையும் சிற்றுந்துகளையும் நிறைத்தன. இடைக்காலப் பாடல்களை இனிமையாய் ஒலிபரப்பியதை கேட்க அந்த நாள் ஞாபகங்கள் நெஞ்சிலே முட்டிக் கொண்டன.

இத்தனையும் இனிமையாய் இருந்தாலும் ஏனோ மனங்கள் மாபெரும் கேள்விகளை எழும்பச் செய்தன. பல வீடுகள் வெளிநாட்டுப் பணத்தால் மினுக்கங்கள் பெற்றன. மாடிட்கட்டடங்கள் எழுந்துள்ளன. வளர்ச்சி உச்சியை தொட்டன. வரவேற்க வேண்டிய விடயம்தான். ஆனாலும் வெளி நாட்டுப்பணத்தில் மக்கள் இன்னமும் தங்கியிருக்கும் நிலை இருப்பதை உணர முடிந்தது. இன்னும் பலர் தன் உழைப்பை முயற்சியுடன் மேற்கொள்ளாமல் உறவினரின் உழைப்பில் தங்கியிருப்பதை அறிய முடிந்தது. வெளிநாட்டுப்பணமென டாம்பீகமாக செலவு செய்து மகிழ்வுடன் வாழும் நிலை பலருக்கு இருந்தாலும் சிலருக்குவறுமை தொடர்ந்த வண்ணமும் உள்ளது. கைத்தொலைபேசியில் காலம் கரைவதும் காசும் கரைவதையும் கண்ணூடாககாண முடிந்தது. இளைஞர்களின் மோட்டார் பவனி. தேவையற்ற நோக்கமற்ற தேய்மானங்கள்.

வாங்கி கொடுத்தவர்கள் பலர் இங்கு பனியில் நடைபவனி வருகின்றார்கள் என்பது புரியாத நிலையில் அங்கு சில இளைஞர்கள்.

வெளிநாட்டில் நாம் உறைபனிக்குள்ளும் கடின வேலை செய்து உழைப்பதை யார் தான் உணர்வார்கள். பணம் கிடைத்தால் சரி. சாதரணமாக ஒரு அன்பளிப்பாக ஒரு நோட்டு கொடுத்தால் ஏளனமாக பார்க்கும் நிலை பலருக்கு உள்ளது. ரொக்கங்கள் பலதுக்காய் காத்திருப்பு தொடர்நிலையில் சிலருக்கு உள்ளது.

வீட்டுக்கு வீடு திருமணமாகாத கன்னிகள் வெளிநாட்டு காசை நம்பி கலியாணத்திற்காய் காத்திருப்பு. மண்டையில் மயிர் கொட்டிட சகோதரன் உழைப்பு. உழைத்த பணத்தை அனுபவிக்க நேரமில்லை. இரவு பகல் உழைப்பாய் ஓட்டம்.சமுதாயப் பார்வையில் அவற்றை எண்ணிடா தாயக வாழ்வு. உதவி ஒன்று கேட்டிட்டால் உடனடியாக செய்ய வர மனம் மறுப்பு. பணம் பெற்று செய்வது பசனாகி விட்டது. கன்னிகளுக்கு ரொக்கம் கொடுப்பு இன்னமும் தொடர்கதை.

வரன்கள் வாங்க தயாரான நிலை இப்பவும். இப்போ வளர்ச்சி பல கண்டாலும் இதனை ஏன் இன்னமும் உணராதவர்களாக உள்ளார்கள்?

## தமிழர் மரபுத் திங்கள் - பங்குனி

7ம் பக்கத் தொடர்ச்சி.



அதனால் தமிழர் பண்பாட்டு வளர்ச்சியில் திருக்கோயில்கள் அமைக்கப் பட்டபோது ஓராண்டின் பருவ மாற்றங்களை எல்லோரும் அறியும் வகையில் விழாக்கள் நடத்தப்பட்டன.

முன்னோரது இறை நம்பிக்கைகள், வழிபாட்டு நடைமுறைகள், தொன்மக் கதைகள் என்பவற்றைப் பின்னவரிடம் கையளிப்புச் செய்யும் நடைமுறையாகவும் இவை அமைந்தன.

அந்த வகையில் பங்குனித் திங்கள் உத்தரநாள் முருகன் தெய்வயானையை திருமணம் செய்த நாளாகவும் நினைவுகூரப்படுகிறது. எனவே தமிழர் மரபு வழிபாட்டு நடைமுறைகளால் தொடர்ந்தும் பேணப்பட்டு வருகிறது.

மேலை நாடுகளில் பங்குனித் திங்கள் ஒரு பருவ மாற்றத்தின் நிறைவுத் திங்களாகக் கணிக் கப்படுகிறது. கடுமையான பனி பொழியும் திங்கள்களாக மார்கழித் திங்கள் 21 தொடக்கம் பங்குனித் திங்கள் 21 வரை கருதப்படுகிறது. எனவே பங்குனித் திங்கள் கடைக்கூறாக விரைவில் இலைதளிர் காலத்திற்கு வழிவிடும் திங்களாக அமைந்துள்ளது.

நீண்ட இரவுகொண்ட பனிக்காலம் நிறைவடைய மீண்டும் வெம்மையான காலத்தை எதிர்நோக்க இடையிலே பங்குனித் திங்கள் அமைந்துள்ளது. பனிப் பொழிவின் அழகிய தோற்றத்தை எல்லோரும் காணப் பங்குனித் திங்கள் இயற்கையின் ஒரு கோல அழகாக நிற்கிறது.

எனவே பங்குனித்திங்கள் மனிதர்களின் வாழிடத்திற்கும் பண்பாட்டுப் பேணல் நிலைகளுக்கும் ஏற்றவகையில் பல்வேறு விழாக்களுடன் இணைந்து உள்ளதை இளைய தலைமுறை நன்குணர வேண்டும்.

அத்திங்களின் தொடக்கத்தையும் நிறைவையும் வெறுமனே ஒரு காலத்தின் நகர்வாக எண்ணாமல் ஆண்டுதோறும் மனிதனோடு உறவாடி மகிழ்ந்து செல்லும் காலநதியின் சிற்றோடையாகக் கருதவேண்டும்.

அதுவே நம் வாழ்நாட்களை வளமான நாட்களாக அமைப்பதற்குரிய சிறந்த வழியாகும்.



# பவள விழாக்காணும் தமிழ்ப் பேரறிஞன் பேராசிரியர் அ.சண்முதாஸ்



வெற்றிமணி மணிவிழாவில் (2010) பேராசிரியர் அ.சண்முதாஸ்

## யேர்மனியில் வெற்றிமணி எடுக்கும் சிறப்பு விழா!

**மு.க.சு.சிவகுமாரன்.**

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்கள் அந்த முகத்திற்கு சொந்தக்காரர் அவர். அவர்தான் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள்.

அவரது பேச்சில் பல மகோன்னதங்கள் புதைந்து கிடக்கும். அவரது காந்தக்குரல் மாணவர்களையும் பெரியவர்களையும் தம்பால் ஈாத்துவைத்திருக்கும் திறன் வாய்ந்தது. இவ்வளவு பெருமைக்குரியவர் தமது பெருமைகளை தமக்குள்ளே அடக்காது பிறரும் தமிழால் பெருமையடைய அரும்பணி ஆற்றுபவர்.



வெற்றிமணி மணிவிழாவில் (2010) பேராசிரியர் அ.சண்முதாஸ் முனைவர் மனோன்மணி தம்பதிகள்

வெற்றிமணி பத்தரிகையின் 60 வது ஆண்டு மணிவிழாவில் யேர்மனியில் கலந்துகொண்டு (28.08.2010) வாழ்த்தியதை மறக்கமுடியாது. தாயகத்தில் வெளிவரும் வெற்றிமணிக்கு அவரது வாழ்க்கைத்துணைவி முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களுடன் இணைந்து பெரும் பணியாற்றி வருகின்றார்.

யேர்மனியில் கடந்த ஆண்டு பிஞ்சுமனங்களின் தேடல் என்ற நூலை வெற்றிமணி வெளியீடு செய்தது. இந்த அற்புதமான நூலை ஆக்கியவர் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்கள். மேலும் யேர்மனியில் தமிழ் கற்கும் மாணவர் களுக்கும், கற்பிக்கும் ஆசிரியர்களுக்கும் அவ்வப் போது அவர்களுக்கு தேவையான பயிற்சி யினையும், அறிவுரைகளையும் வழங்கி தமிழ் மேம்பாட்டுக்காக அயராது தம் துணைவியாருடன் உழைத்து வருபவர்.

இன்று பவளவிழாவினைக் காணும் தன் இனிய கணவருக்கு காதற் பரிசாக தான் ஜப்பானிய மொழியில் இருந்து மொழி பெயர்த்த ஜப்பனிய காதற் பாடல்கள் என்ற நூலினை 75 வது அகவைப்பரிசாக வழங்கி மகிழ்கின்றார்.

பவளவிழா நாயகன் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்கள் தாயகத்தில் அருணாசலம் முத்தம்மா தம்பதியினருக்கு மகனாக திருகோணமலையில் 1940 ஆண்டு தைமாதம் 2ம்திகதி பிறந்தார்.

தமது ஆரம்பக்கல்வியை திருமலை புனித சவேரியார் பாடசாலை, மட்டக்களப்பு வந்தாறு மூலை மத்திய கல்லூரி, சிவானந்த வித்தியாலயம் ஆகியவற்றிலே தொடக்கநிலை இரண்டாம் நிலைக் கல்வியைக் கற்றார்.



14. 01. 2015 அன்று கனடா- பெரிய சிவன் கோயில் மண்டபத்தில். முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் ஜப்பானியமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்த்த ஜப்பானியக் காதற் பாடல்கள் என்னும் நூலை வெளியிட்டு அதனைத் தனது கணவர் பேராசிரியர் அருணாசலம் சண்முகதாசின் அகவை 75இன் இனிய காதல் பரிசாக வழங்கினார்.

இலங்கைப் பேராதனை பல்கலைக் கழகத்தில் இளங்கலைமாணிப் பட்டத்தினை 1963 ம் ஆண்டு முதற் பிரிவு சித்தியுடன் பெற்றார். ஸ்கொட்லாந்து எடின்பறோப் பல்கலைக் கழகத்தில் பன்மொழிப் புலவர் பேராசிரியர் ஆர்.இ. ஆஷரின் வழி காட்டலில் மொழியியல் கல்வியில் "இலங்கைப் பேச்சுத் தமிழின் ஒலிவடிவம்" என்னும் ஆய்வில் முனைவர் பட்டத்தினையும் பெற்றவர்.

நாடுதிரும்பிய பேராசிரியர் பேராதனை பல்கலைக் கழகத்திலும் பணிபுரிந்தார்.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் கலைப் பீடாதிபதியாகவும், உயர்பட்டப் படிப்புகள் பீடாதிபதியாகவும், பலதடவைகள் பதில் துணை வேந்தராகவும் பணிசெய்துள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் தமிழ், மொழியும் பண்பாடும், சித்த மருத்துவம், இசைத் துறைகளின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.



கனடாவில் இடம் பெற்ற பவள விழா 2015

மானிய ஆணைக்குழுவின் துணைக்குழுக்களில் அங்கம் வகித்தவர். இலங்கைத் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் நிபுணத்துவ ஆலோசகப் பேராசிரியராக இருந்துள்ளார். அப்பல்கலைக் கழகத்தின் பேரவை உறுப்பினராகவும் இருந் துள்ளார்.

ஜப்பான் கக்சுயின் பல்கலைக் கழகத்திலும் நைஜீரியா இபாடன் பல்கலைக் கழகத்திலும் விருந்துநிலைப் பேராசிரியராகவும் பணிசெய் துள்ளார். திருநெல்வேலி சைவச்சிறுவர் இல்லம் நடத்தும் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவராகவும் பணிசெய்தவர். 2008இல் இலங்கை அரசு இவருக்கு 'சாகித்ய ரத்னா' விருது வழங்கியது.

தற்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தகைசார் வாழ்நாட் பேராசிரியராக இருக்கின்றார்.

பன்முக ஆற்றல் கொண்ட எங்கள் பேராசிரியருக்கு 2010 ஆண்டு யாழ் பல்கலைக்கழகம் இலக்கியக் கலாநிதி பட்டத்தினை வழங்கிக் கௌரவித்தது.

இன்று பவளவிழாக்காணும் பேராசிரியர் அவர்தம் துணைவியார் முனைவர் மனோன்மணி அவர் களுடனும் பிள்ளைகளுடனும் இன்னும் பல் லாண்டு காலம் வாழ்ந்து தமிழ் மொழிக்கும் நம் சமூகத்திற்கும் தொண்டாற்ற வாழ்த்துகின்றோம்.




T.T.S.Brothers GmbH&Co.KG

உங்கள் வீட்டு தேவைக்கான அனைத்து மளிகை பொருட்கள்-ஆடை அணிகலன்கள் மற்றும் உங்கள் உறவுகளுக்கு பணம் அனுப்புவது முதல் அனைத்து தேவைகளுக்கு நாடவேண்டிய ஒரே ஸ்தாபனம்.

உங்கள் உறவுகளுக்கு
துரிதமாகப் பணம் அனுப்ப நாடுங்கள்!
0.01€ இருந்து 500€ வரை அனுப்ப 8.90 € மட்டுமே!
500€ இருந்து 1.500€ வரை அனுப்ப 15.00€ மட்டுமே!

MoneyGram Transfert d'argent

RHEINISCHE STR 52
44137 DORTMUND
Tel:0231 819288

Helmholtz Str.11
46045 Oberhausen
Tel:0208 202829

Garten Str.29
48147 Münster
Tel: 0251 2301184

Johannes Str.35
53225 Bonn Beuel
Tel. 0228 40377846

# விமானிகளுக்கு ஏற்படும் மர்ம நோய்!





திரைப்படம் எடுத்து அம்பலப்படுத்திய பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானி

தரையில் நோய் வந்தால் ஒரு கரையில் நிறுத்தலாம் வாகனத்தை. கடலில் கப்பலோட்டிக்கு நோய்வந்தாலும் கப்பல் கடலில் மிதக்கலாம். வானில் நோய் வந்தால் எங்கு எப்படி நிறுத்தவது. எனவே வானில் நோயற்ற வாழ்வே நம் பிறப்புக்கும், பறப்புக்கும் உயர்வான செல்வம்.

இங்கிலாந்தை சேர்ந்த ட்ரிஸ்டன் லோரைன் என்ற விமானி, பிரபல விமான சேவை நிறுவனமான 'பிரிட்டிஷ் ஏர்வேஸ்' நிறுவனத்தில் 19 ஆண்டுகள் விமானியாக பணியாற்றிய அனுபவசாலி. ஆனால், 2006-ல் அந்நிறுவனத்திலிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டார். காரணம் 19 ஆண்டுக்கால பணியின் பலனாக அவருக்கு கிடைத்த வியாதி.

நிறுவனத்திலிருந்து வெளியேற்றப்படுவதற்கு முன்னதான 7 ஆண்டுகளில் பிஏஈ 146 ரக ஜெட் விமானத்தை இயக்கினார். அந்த விமானத்தின் இன்ஜினை ஒவ்வொரு முறை இயக்கும் போதும் கரும் எண்ணெய் புகை வெளியாகும். ஆனால் அது இவ்வளவு பெரிய பாதிப்பை உண்டாக்கும் என்று அவர் அப்போது நினைக்கவிலை.

அவருக்கு ஏற்பட்டது 'ஏரோடாக்சிக் சிண்ட்ரோம்' என்ற நோய். தொடக்கத்தில் இந்த நோயின் பாதிப்பால் கை விரல்கள் மற்றும் கால்களில் உணர்ச்சிகள் மரத்துப்போவது, அடிக்கடி வாந்தி வருவது போன்ற உணர்வால் பாதிக்கப்பட்ட லோரைனுக்கு உடலியல் மற்றும் நரம்பியல் கோளாறுகளும் ஏற்பட்டுள்ளது.

2007-ம் ஆண்டு 'ஏரோடாக்சிக் அறக்கட்டளை'-யைத்தொடங்கி தனக்கு தெரிந்த விமானத்துறை ரகசியங்களை இணையதளத்தின் மூலம் வெளியிட்டார். இந்த பிரச்சனைகள் தொடர்பாக விமானத்துறை நிறுவனங்களுக்கு பல கோரிக்கைகள் வைத்தார். அதை அவர்கள் ஏற்காதபோது உண்டான கோபம்தான் அவரை வெல்கம் அபோர்ட் டாக்சிக் ஏர்லைன்ஸ்(2007) உட்பட பல திரைப்படங்களை எடுக்க வைத்தது. இதில் ஊழியர்கள் மீதான விமான நிறுவனங்களின் அக்கறையின்மை உள்ளிட்ட பல விஷயங்களை வெளிப்படையாக பேசியுள்ளார்.

லண்டனில் ஜென்னி குட்மேன் என்ற மருத்துவர் 180 விமானிகளிடம் செய்த ஆய்வில் அவர்களுடைய உடலில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதும் பலருக்கு முடக்குவாத நோய்க்கான அறிகுறிகள் இருப்பதும் தெரிய வந்துள்ளது. இதற்கு காரணம் விமானிகள் அறையில் உள்ள வேதிப்பொருட்கள் உருவாக்கும் நச்சு வாயுக்கள்தான் என்பதும் தெரிய வந்துள்ளது.

ஏரோடாக்சிக் சிண்ட்ரோமால் பாதிக்கப்பட்டால் நினைவாற்றல் இழப்பு, நாள்பட்ட சோர்வு, சுவாசப்பிரச்சனைகள் மற்றும் புற்றுநோய் என்று பல நோய்கள் உண்டாகும். தற்போது நோயுடன் சேர்ந்து தன் சக விமானிகளின் உடல் நலத்திற்காகவும் போராடி வருகிறார் போராளி ட்ரிஸ்டன் லோரைன்.

## ஜேர்மனியின் ஜி டி எம் தொலைக்காட்சியில், புடினின் புதிய ஆவணப்படம்



மனைவியை அடித்து உதைப்பது போன்று காட்சி!

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் குடித்துவிட்டு தனது மனைவியை அடித்து உதைப் பது போன்று வெளியாகி யுள்ள ஆவணப்படம் சர்ச்சையை கிளப் பியுள்ளது.

ஜேர்மனியின் ஜிடிஎம் தொலைக் காட்சி, அடையாளம் தெரியாத மேற்கத்திய உளவுத்துறை நிறுவனம் ஒன்றின் ரகசிய தகவல்களை கொண்டு, புதிய ஆவணப்படம் ஒன்றை எடுத்து வெளியிட்டுள்ளது.

அதில், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் இதற்குமுன் தனது விவாகரத்து செய்யப்பட்ட மனைவி லுயிட்மிலாவிடம் வன்முறைத்தனமாக நடந்து கொண்டதையும், அவரது வாழ்க்கை வரலாறும் பதிவு செய்யப்பட்டிருப்பதாக டெலிகிராப் செய்தி வெளியிட்டு உள்ளது.

மேலும் புடினின் வாழ்க்கையை சித்தரிக்கும் இந்த படத்தில், தேசிய பாதுகாப்பு அமைப்பான கேபிஜி-யின் அதிகாரியாக இருந்து படிப்படியாக தற்போது ஜனாதிபதி பதவிக்கு வருவது வரை காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், அதிகாரியாக இருந்த நாட்களில் இருந்து புடின் அதிகம் குடிப்பவராகவும், கேபிஜி பார்ட்டியின் போது ஒரு பெண்ணை கீழே தள்ளியதாகவும் காட்டப்படுகிறது.

கடந்த 1983ம் ஆண்டு லுயிட்மிலாவை திருமணம் செய்து கொண்ட புடின், 2014ம் ஆண்டில் அவரை விவாகரத்து செய்துவிட்டார், இவர்களுக்கு மரியா மற்றும் யேக்டரினா என 2 குழந்தைகள் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.







# பிறக்கப் போவது ஆண் குழந்தையா பெண் குழந்தையா தேர்வு யாரிடம்!

டாக்டர் எம்.கே.முருகானந்தன்




**முதல் குழந்தை ஆணாகவே இருக்க வேண்டும் என்ற விருப்பு ஜேர்மனியர்க்கும் உண்டு?**

ஆண் குழந்தை வேண்டும் என, அல்லது பெண் குழந்தை தமக்கு வேண்டும் என காத்திருக்கும் பல தம்பதிகளினரின் பெருவிருப்பை மருத்துவர்கள் ஆய்வுகூட கருக்கட்டல் (IVF) முறை மூலம் தீர்த்து வைக்கிறார்கள்.

'குழந்தை ஆணாக இருக்க வேண்டுமா பெண்ணாக இருக்க வேண்டுமா என்ற பாலினத் தேர்வை இச் சிகிச்சை மூலம் கோரக் கூடாது, செய்யக் கூடாது. அவ்வாறு செய்வது தவறு' என இந்தியச் சட்டம் தெளிவாகச் சொல்லியிருக்கின்ற போதும் மூடிய மருத்துவ மனைகளின் கதவுகளுக்கு பின்னால் இது நடை பெறுகிறது என்பது ரகசியமல்ல.

பெறப் போகும் குழந்தையில் பாலினத் தேர்வு செய்வது சட்டரீதியாக மட்டும் குற்றம் என்பது மட்டுமல்ல அது சமூக ரீதியாகவும் தார்மீக ரீதியாகவும் ஏற்றுக் கொள்ள முடியாததாக இருக்கிறது. ஏனெனில் இது வெறுமனே பாலினத் தேர்வு என்பதுடன் நின்றுவிடவில்லை.

**அதற்குள் ஒரு அழிப்பு நடவடிக்கையும் மறைந்து இருக்கிறது.**

இனஅழிப்பு (Geneocide) பற்றி நாம் நிறையவே கேள்விப்பட்டிருக்கிறோம். பாலினத் தேர்வு எனப்படுவது உண்மையில் பாலின அழிப்பு (புநனெநசஉனைந) என்றே பலரும் கருதுகிறார்கள். ஆம். இங்கு பெரும்பாலும் பெண் கரு முளைகள் களையப்படுகின்றன. ஆண் கருமுளைகள் ஓம்பப்படுகின்றன.

இதனால்தான் குழந்தையில் பாலினத் தேர்வு செய்வது ஆகாது எனப் பலரும் கூக்குரலிடுகிறார்கள். மாறாக அவ்வாறு செய்வதைத் தடுப்பதால் பெற்றோர்களது மன உணர்வுகள் பாதிக்கப்படும். அது அவர்களது சுதந்திரத்தில் கை வைப்பதாகும் என மாற்றுக் கருத்துகள் சொல்வோரும் உளர்.

**குழந்தையில் பாலியல் தேர்வு**

ஆஸ்திக்கு ஒரு ஆணும் ஆசைக்கு ஒரு பெண்ணும் என இரு குழந்தைகளும் வேண்டும் என்று பொதுவாகச் சொன்னாலும் ஒவ்வொரு பெற்றோருக்கும் தமக்கு எந்தக் குழந்தை வேண்டும் என்பது பற்றிய தனிப்பட்ட உள்ளார்ந்த விருப்புகள் இருக்கவே செய்யும்.
இருந்தபோதும் இந்தியாவைப் பொறுத்த வரையில் ஆண் குழந்தைகளே பெரிதும் விரும்பப்படுகின்றன. 'எனக்கொரு மகன் பிறப்பான். அவன் என்னைப் போலவே இருப்பான்..' எனக் கவிஞர் பாடுவது வெறுமனே அக் கவிஞனின் வார்த்தைகள் அல்ல. அது அந்தச் சமூகத்தின் பிரதிபலிப்பு என்றே சொல்ல வேண்டும்.
பிறப்பில் ஆண்கள் அதிகமாக உள்ள நாடுகளில் ஆர்மேனியா, ஆர்ஜன்ரைனா, சீனா, இந்தியா, ஜோர்ஜியா போன்றவை முன்னணியில் நிற்கின்றன.
தங்கள் முதல் குழந்தை ஆணாகவே இருக்க வேண்டும் என்ற விருப்பு ஜேர்மனி உட்பட்டதான சில ஐரோப்பிய நாடுகளிலும் இருப்பதாக உலக சுகாதார அறிக்கை ஒன்று கூறுகிறது.
பெண் குழந்தைகள் விரும்பப்படாமைக்கு பெண்கள் மீதான அடக்கு முறைகளும், பாலியல் பலாத்காரங்களும் முக்கிய காரணமாக இருக்கலாம். சீதனம் கொடுக்க வேண்டிய பிரச்சனையும் மறைமுகக் காரணம்தான். இது பொதுவாக கீழை நாடுகளின் நிலை.
குடும்பத்தில் ஆண் பெண் சமநிலை வேண்டும் என்பதற்காக பாலினத் தேர்வு மேலைநாடுகளில் விரும்பப்படு வதாகச் சொல்லப்படுகிறது.

பாலினத் தேர்வானது இன்று நவீன அறிவியல் ரீதியான ஒன்றாக இருக்கிறது. ஆயினும் தங்கள் குழந்தையின் பாலினத்தைத் தேர்வது பற்றிய ஆர்வமும் அதற்கான முயற்சிகளும் நீண்ட காலமாக இருந்திருக்கின்றன.
சீனர்களின் பாலினத் தேர்வு கலண்டர் (Chinese Gender Calendar) பாலினத் தேர்விற்கான உணவு முறை எனப் பல முயலப்பட்டுள்ளன. இவை யாவும் இயற்கையானவை.

**Chinese Gender Predictor**

ஓரளவு விஞ்ஞான அறிவையும் கலந்து Shettles Method என்பதை உருவாக்கினார்கள்.
விந்துத் தேர்வு (Sperm selection) முறை ஒன்றும் இருக்கிறது. ஆனால் இவை எதுவுமே பூரணமான பலன் தரும் முறைகள் அல்ல. விரும்பிய தேர்வை நிச்சயம் தரும் என நம்ப முடியாது.

Methods of Gender Selection

எவ்வாறு செய்யப்படுகிறது
இப்பொழுது 'ரெஸ்ட் ரியூப்' முறையில் குழந்தை பெறும்போது பெற்றோர்களால் தங்கள் குழந்தையின் பாலினத்தைத் தேர்வது முடியும்.
ஆய்வுகூட கருக்கட்டலின் போது ஆய்வுகூடக் கோப்பையில் முட்டையையும் விந்துவையும் இணைப்பார்கள். அது கருவாக வளர்வதற்கான ஆரம்ப நிகழ்வாகும். ஒரு கலமான அது அங்கே பல கலங்களாகப் பிரிந்து வளரும். எட்டுக் கலங்களேயான பிளாஸ்டோசைட் (blastocyst) ஆகி மேலும் வளரும். இதன் பின்னரே அதை பெண்ணின் கருப்பையில் வைப்பார்கள். பொதுவாக 3 முதல் 5 நாட்களில் வைப்பார்கள். அவ்வாறு வைப்பதற்கு முன்னர் நுணுக்கமான ஒரு மரபணுப் பரிசோதனை செய்வதுண்டு. நுண்ணிய ஊசி மூலம் அதிலிருந்து ஒரே ஒரு கலத்தை மட்டும் எடுத்து மரபணுப் பரிசோதனை (Preimplantation genetic diagnosis (PGD) செய்வார்கள். ஏதாவது கடுமையான பரம்பரை நோய்கள் இருக்கிறதா என்பதை அறிவதற்கான பரிசோதனை இது. அவ்வாறு தேர்ந்தெடுத்து நோய்கள் அற்ற கருமுளையைத்தான் பெண்ணின் கருப்பையில் வைப்பார்கள்.

Preimplantation Genetic Diagnosis

இது மருத்துவக் காரணங்களுக்கான தேவைகளுக்காகச் செய்யப்படும் பரிசோதனை.
இதே பரிசோதனை மூலம் அந்தக் கருமுளையானது ஆணா பெண்ணா என்பதையும் கண்டறிய முடியும். மருத்துவக் காரணங்களுக்கானது அல்ல என்பதால் வழமையாகச் செய்யப்படுவதில்லை. பெற்றோரின் விருப்பத்திற்காக மட்டுமே மிகுந்த செலவில் செய்யப்படுகிறது. பாலினத் தேர்வுடன் ரெஸ்ட் ரியூப் பேபிக்கான மிகக் குறைந்த செலவானது 20,000 அமெரிக்க டொலர்கள் வரை இருக்கும் எனத் தெரிகிறது. விந்து, முட்டை ஆகியன தேவைப்பட்டால் இது மேலும் அதிகரிக்கலாம். செலவு அதிகமானாலும் இம் முறையானது 99 சதவிகிதம் வெற்றியளிக்கும் என்கிறார்கள்.

தொடர்ச்சி 12ம் பக்கம்.


உங்கள் அனைத்து
இல்லக் கொண்டாட்டங்களுக்கும்
100 இருக்கைகளுடன்
நீங்கள் விரும்பும்
சோடனைகளுடன்

all you can eat Buffet
daily from 11.00-22.00
only 6,-€

Om Namaste
Indisches Restaurant

every Sunday
from 17.00-22.00
Vegetarian
all you can eat Buffet
10 vegetarain Currys
Rice,Salad,Soup,Samosa,
Desserts and and...
only 9,90 €

உங்கள் விருப்பம்போல் இலங்கை
இந்திய உணவுகளை சுவையாக
தயாரித்து அனைத்தையும் இந்நாட்டு
மக்களுக்கும் ஏற்ற வகையில்
பரிமாறக் காத்திருக்கின்றோம்.

Offnungszeit: 11.00 -24.00

www.om-namaste@.com
e.mail: om-namaste@.de
facebook:om namaste

-கொத்துரொட்டி
-புரியாணி
-மசாலாத்தோசை
-பேப்பர் தோசை
-சிற்றூண்டிகள்
-Original Naan Pizza
இன்னும் இன்னும் இன்னும்
ஒரு முறை விஜயம்
செய்து பாருங்கள்!

உடன் தொடர்பு
கொள்ளுங்கள்!
Brückstr 33
44135 Dortmund
0231 33 48 52 82

# பிறக்கப் போவது ஆண் ....

11ம் பக்கத் தொடர்ச்சி



உலகில் முதலாவது test tube baby –Louise Brown, உருவாக்கிய Professor Robert Edwards அவர்களுடன்

கருவில் வளரும் குழந்தையானது ஆணா பெண்ணா என்பதை சாதாரண ஸ்கான் பரிசோதனைகள் (Ultra Sound Scan) மூலமும் கண்டறிய முடியும். ஆனால் அதற்கு சற்று காலதாமதம் ஆகும். கருமுளையானது தாயின் கருப்பையில் 12 முதல் 20 வாரங்கள் வளர்ந்த பின்னர் ஏற்படும் அங்க வேறுபாடுகள் மூலமே தெளிவாகக் கண்டறிய முடியும்.

பால்வழித் தேர்வும் அழிப்பும்

அவ்வாறு கண்டறியும்போது அது வேண்டாத பாலினக் கருவெனில் சிலர் அதைக் கலைக்க முனைவார்கள். கருக் கலைப்பு சட்டவிரோதமானது என்ற காரணத்தால் அவ்வாறு குழந்தை ஆணா பெண்ணா எனக் கண்டறியும் ஸ்கான் பரிசோதனை செய்வதை இலங்கை உட்பட பல நாடுகளில் தடை செய்துள்ளார்கள்.
இதே காரணங்களுக்காகத்தான் ஆய்வுகூட கருக்கட்டலின் பின்னரான பாலினம் அறியும் பரிசோதனை நிறுத்தப்பட வேண்டும் என்பது 'பால்வழி அழிப்பு' என்பவர்களின் வாதமாகும்.
ஆனால் இது பால்வழி அழிப்பு அல்ல, தேர்வு மட்டுமே என ஆதரிப்பவர்கள் சொல்கிறார்கள். அவ்வாறு சொல்வதன் காரணம் என்ன?

ரெஸ்ட் ரியூப் முறை என்படும் இத்தகைய ஆய்வுகூட கருக்கட்டலின் போது ஒரு பெண்ணுக்காக பல முட்டைகள் கருக்கட்டப்படுகின்றன.

தேவையானதை மட்டும் எடுத்துக் கொண்டு மீதியை உறை குளிரில் வைத்துப் பாதுகாப்பார்கள். தானகவே கருச் சிதைந்துவிட்டால் மீண்டும் வைப்பதற்கு அது உதவும். அல்லது அடுத்த மகப்பேற்றை நாடும் போது உதவலாம் என்பதற்காகவே ஆகும். மாறாக குழந்தை இல்லாத வேறொரு பெற்றோருக்கு சேமிப்பிலிருந்து தானமாகவும் வழங்கவும் முடியும்.

ஆனால் அதை அழிக்கவும் முடியும். பெரும்பாலும் அதுவே நடக்கிறது என்பதை மறுக்க முடியாது.
இந்தியாவில் பாலியல் தேர்வு 1994ம் ஆண்டு முதல் தடைசெய்யப்பட்டுள்ளது. இருந்தபோதும் கடுமையாக அமுல்படுத்தப்படாததால் சனத்தொகையில் பெண்களின் வீதாசாரம் குறைந்துள்ளது. பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் அதிகரித்துள்ளன. அண்மையில் டெல்லியில் ஒரு கும்பல் பெண்ணை கூட்டு வன்புணர்வு செய்யதற்கு சமூகத்தில் பெண்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தமையே மறைமுகக் காரணம் என்கிறார்கள். ஏனெனில் மொத்த சனத்தொகையில் 50 சதவிகிதத்திற்கு அதிகமாக இருப்பது 25 வயதிற்கு உட்பட்ட வயதினரே ஆகும்.

வாலிபப் பையன்களின் இயல்பான பாலியல் தேவைகளுக்கு ஏற்றளவு அவர்கள் வயதொத்த பெண்களின் எண்ணிக்கை போதாமலிருக்கிறது. இதுவே வன்புணர்வுகளுக்கு காரணம் என்கிறார்கள்.

இப்பொழுது பிரித்தானியாவிலும் பாலியல் தேர்வுகளுக்கு தடையிருக்கிறது. ஆயினும் அங்குள்ள மருத்துவ அறிவியல் (அநனளைஉயட நவாஉைளைவள) குழுவானது அத் தடைக்கான தேவை எதுவும் இல்லை என்கிறது. ஆனால் அது சரியான கருத்தா? பெற்றோர்களின் உளவியல் தாக்கங்கள் மற்றும் குடும்ப சமநிலைக்காக பாலியல் தேர்விற்கு தடை விதிக்கக் கூடாது என்பது அவர்களது வாதம். அது ஓரளவு உண்மை என்ற போதும், தடையை நீக்குவதால் சமூக ரீதியாகவும் தேசிய ரீதியாகவும் உலகளாவிய ரீதியிலும் ஏற்படக் கூடிய பாதிப்புகளை மனம் கொள்ள வேண்டும்.

பிரச்சனைகள்

குழந்தை ஆணாகவா பெண்ணாகவா இருக்க வேண்டும் என்ற தேர்வு இதுவரை இயற்கையிடமே இருந்திருக்கிறது. இந் நிகழ்வை பெற்றோர்கள் தீர்மானிக்க வழிவிட்டால் அது மருத்துவ ரீதியான வணிகமயப்படுத்தலுக்கு வழிவகுக்கும். அந்நிலையில் பாரிய பாதிப்புகள் ஏற்படுவதைத் தடுக்க முடியாது போய்விடும்.

மருத்துவரும் பெற்றோரும் தனிப்பட்ட ரீதியில் எடுக்கும் முடிவுகள் பாலினத் தேர்வுடன் மட்டும் நின்றுவிடப் போவதில்லை. ழுசபைளை ழுக டுழளந, என்ற தனது நாவலில் முளைாறயச ஹுநளயஙெ அவர்கள் இது பாலினத் தேர்வுக்கு அப்பாலும் மருத்துவ வணிக மயமாதலுக்கு சென்றுவிடலாம் என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.
புநவஜஅயபந

குழந்தையின் சரும நிறம் எதுவாக இருக்க வேண்டும், அதனுடைய அறிவாற்றல் எவ்வளவு இருக்க வேண்டும், குழந்தையின் தலைமுடி எவ்வாறு இருக்க வேண்டும் என்றெல்லாம் பெற்றோர்கள் கோரக் கூடும். அதற்கான ஆதரவாக மருத்துவர்கள் குரல் எழுப்புவார்கள் என்கிறார்.
முளைாறயச ஹுநளயஙெ யவ வாந ழுஒகழசன டவைநசயசல கநளவளையட, 2010.

ஆயினும் இவற்றிற்கு 'ஆம்' சொன்னாலும் அவர்களுக்கு பூரண திருப்தி ஏற்படப்போவதில்லை. மனித மனம் என்றுமே பூரண திருப்தி அடைவதில்லை. ஒன்று கிடைத்தால் கிடைக்காத வேறு ஒன்றைப் பற்றி ஏங்கிக்கொண்டே இருக்கும். ஆண் குழந்தை அதுவும் எலுமிச்சை நிறக் குழந்தை வேண்டும் எனக் கேட்பார்கள். அது கிடைத்துவிட்டால் அத்தோடு ஆசை அடங்கிவிடாது. அதன் கண்ணின் நிறம் கருமை போதாது என மனம் குற்றம் காணக் கூடும். தனக்கு விருப்பிற்கு ஏற்றவிதத்தில் மற்றொரு ஆய்வுகூட குழந்தையைப் பெறவும் அவர்கள் முனையக் கூடும்.

விரும்பியபடியே குழந்தை கிடைத்துவிட்டால் புதிய வடிவில் பிரச்சனைகள் தலை தூக்கும்.
ஏற்கனவே உள்ள குழந்தைகளுக்கும் இப் புதிய குழந்தைக்கும் இடையே பெற்றோர்கள் சிறிது பாரபட்சம் காட்டுவார்கள் என்பது நிச்சயம். அறிவுள்ள பெற்றோர் அவ்வாறு பாரபட்சம் காட்டக் கூடாது என மனதார எண்ணினாலும் கூட அவர்கள் அறியாமலே அது நுணுக்கமாக செயற்பாடுகள் ஊடாக வெளிப்படும்.
பாதிக்கப்பட்ட குழந்தையானது தான் வேண்டாத பிள்ளை என உணர நேரும்போது உறவுகளில் சிக்கல்கள் உருவாகும்.

கதைகளிலும் திரைப்படங்களிலும் நாம் எதிர்பாராத திருப்பங்களை விரும்புகிறோம். ஏன் நிஜ வாழ்வில் மட்டும் அதற்கு இடமில்லை. ஆணா பெண்ணா எனக் காத்திருப்பதில் ஒரு திரில் இருக்கிறது. சுகமும் இருக்கிறது. புதிய வரவு எதுவாக இருப்பினும் அது எங்களது, எங்களுக்கே ஆனது, எங்கள் வாரிசு என்பதில் மனம் நிறையவே செய்யும்.

இயற்கையுடன் முரண்படாது அதன் தேர்விற்காகக் காத்திருப்பது நல்லதா அல்லது விஞ்ஞானத்தின் நவீன முன்னகர்வுகளுடன் இணைந்து கொள்வதா?

குழந்தையின் பாலினத் தேர்வில் நீதியின் தராசு எந்தப் பக்கம் சரிய வேண்டும் என நீங்கள் நினைக்கிறீர்கள்?"ஆண் குழந்தையா பெண் குழந்தையா? பாலினத் தேர்வு யாரிடம் இருக்க வேண்டும்?"



# தொண்டைமானாறு கடல் நீரேரி ஆனையிறவு வரை நீள்கிறது!

ஆதவன் ஞானா, இலங்கை கல்வி நிர்வாக சேவை





தொண்டைமானாறு கடல் நீரேரி ஆனையிறவு வரை நீள்கிறது என்பதை கேட்டதும் நம்பமுடியாதளவு இருக்கும். ஆனால் உண்மை!
குடாக்கடல் நீரேரி நாவற்குழி ஊடாக இடையிட்டு தொண்டைமானாறு நீரேரியில் இணைந்து கொள்கிறது. மேலோட்டமாக பார்த்தால் இவ்விரு வழிகளுமே பிரதானமாக யாழ்ப்பாணத்தில் விழுகிற மழையை சமுத்திரத்துக்கு சேர்க்கின்ற வடிகால்கள்.

சூழலியலாளர்களின் ஆழ்ந்த பார்வையில். இவ்விரு வழிகளுமே குடாநாட்டுக்கான குடிநீரின் சேமிப்புத் திறனை தக்கவைத்துக் கொள்ள போதுமான வழிகள். தொண்டைமானாறு நாவற்குழி இரண்டு உப்பாற்று முகங்களுமே -இயற்கை, யாழ்ப்பாணிகள் மீது வைத்த கரிசனை!
'மேலதிக நீரை மட்டும் சமுத்திரத்துக்குள் அனுப்புவது' என்ற முன்மொழிவு எங்களில் பலருக்கு ஒத்து வருவதில்லை. மழை காலங்களில் எல்லோருமே 'நீர் தேங்கி நிற்காத வளவுகளையே' கேட்கிறோம், விருப்புடன். மண் பறித்து வீட்டின் வெளி நிலத்தை உயர்த்தியவர்களும், வேலிகளில் தடுப்பு மண் அணை கட்டியவர்களுமே எம்மில் ஏராளம்.

இது, அடுத்த வீட்டின் தண்ணீர் வராமல் மட்டுமல்ல, எங்கள் கூரையின் மேல் பொழிந்த நீரையும் வீட்டு வளவுக்குள் அனுமதிக்க மனமொப்பாத சுத்த முட்டாள் தனத்தின் அடையாளங்கள். சீமெந்து கற்கள் பதிக்கப்பட்ட எங்களது வீட்டு முற்றம் உட்பட, தண்ணீரில் கால் பட வெட்கப்பட்டு காசை கல்லாக்கி அழகு பார்த்த யாவருக்குமே, தொண்டைக்குழி வறண்டு போகக் கடவதே, "தூஉம்" சாபம்.

தேங்கி நிற்பதால் மட்டுமே, நிலத்தடி நீர் மீள சேமிக்கப்படும் என்ற சித்தாந்தமே, தொண்டைமானாறு நீரேரியின் மீது தற்போது பிரயோக்கிப் படுகின்ற நன்னீர் திட்டத்தின் அடிப்படை. தொண்டைமான் ஆற்றிலும் (செல்வச் சந்நிதியான் பின் வீதியில்), நாவற்குழியிலும் (ஏ9 ல், பாலத்துக்கு அருகில்) இரு தடுப்பு கதவுகளை அமைத்து, குறித்த மிகை நீர்மட்டம் யாழ்ப்பாணத்தின் நிலப்பகுதியில் ஏற்பட்ட பின்னரே உபரி நீரை கடலுக்குள்ளாக சமுத்திரத்தினுள் அனுமதிக்கும் திட்டம் அது.

வரள்காலத்தில் நிலத்துக்கு கடலூடாக உவர் நீர் வருவதை முற்றிலும் தடை செய்வதன் மூலம், உப்பாற்று நீரேரிகளை நன்னீராக்கி குடாநாட்டின் கிராமங்கள் யாவையும் நன்னீர் கிணறுடையவை ஆக்கும், தொலைநோக்கு இத்திட்டத்துக்கும் உண்டு.
அயலில் உள்ள, தொண்டைமான் ஆறும், அதன் தடுப்பணையும் அண்மைய வருடங்களில் எதிர் கொண்ட எதிர்ப்புகளுக்கு என் காதில் விழுந்த நொண்டிச் சாட்டுகள் கீழ்வருமாறு-
,, களிப்பாங்குடைய தோட்டங்களிலும், வயல்களிலும் தண்ணீர் வத்துதில்லை.
,, உப்புத் தண்ணி ஏறினால் தானே, இறால்- நண்டு விளையும்
,,வல்லையிலிருந்து வரும் உப்பு புழுதி(கோடையில்), மண்டான் வயல்களில் நெல்லில் படிந்து விளைச்சலை குறைக்கும்.
,,சன்னதி கோயிலுக்கு சனம் நடந்து போக- சைக்கிள் பாக் வைக்க மண்போட்டு பாதை போட வேணும். இன்னும் சில...



மண்போட்ட பாதை

வழக்கமாக போடப்படும் மண்பாதை வெட்டி எடுப்பதற்கு அமைப்பதை விட மூன்று மடங்கு செலவாகும் என்பதால், முழுமையாக அகற்றப்படுவதில்லை, தொண்டைமானாற்றில்...
வெளியேறும் நீருக்கே இதனால் பாதிப்பு என்பதால், நீர்ப்பாசனத் திணைக்களமும் பெரிதாக அலட்டிக்கொள்வதில்லை.
வருமான வழியாக, காசு கொட்டும் குறுக்கு வழியாக நீர் ஆதாயத்துடன் விளையாடும் பிரதேச சபையின் ஆடல்கள் நிச்சயம் இவ்வருடமும் தொடரக் கூடும்.
நல்ல தண்ணீர் வரும் வரை, ஏனைய அனைத்து தனித்த விருப்பு வெறுப்புக்களையும் ஒத்திவைத்தால், ஏன் ரத்துச் செய்தால் தான் தீர்வு வருமென்றால், ஏன் அத்தகைய முடிவை நோக்கி தம்மைத் தாமே உந்திச் செல்ல எம்மக்கள் மறுக்கிறார்கள்??

காவிரிக்காக, முடியை பிய்த்துக் கொள்ளும் தமிழகத்தின் டெல்டா விவசாய குடிகளை ஒருமுறை நேரில் காணவேண்டும் நாங்கள் அனைவரும்.
நீரின்மையால், தற்கொலை செய்துகொள்ளும் சோகம் எங்களிடம் வேண்டாமே??

எந்த திட்டமானாலும், எந்த உபாயமானாலும் அந்தந்த ஏந்து பிரதேச மக்களின் ஆதரவும், இடரிலும் தளராத உறுதியுமே வெற்றியை தீர்மானிக்கும். 'எம் பிள்ளைகள் தண்ணீருக்கு கையேந்தி' விடக் கூடாதென்று ஒவ்வொருவரும் நினைக்கத் தொடங்கினால் போதும்.
தீரும் தாகம்.

நன்றி: நானிலம் டொட்.கொம்




Essen மாநகரில் புதிய உதயம்
Oviyan textiles
ஓவியன் ஆடைகள் உலகம்
Öffnungszeiten 11.00-19.00 Uhr
Tel:0201 330 99 464
அழகிய பட்டுச்சேலைகள் பாட்டிசாறிகள் பெரியவர் சிறுமிகளுக்கான
அழகிய பஞ்சாபிகள், இமிற்ரேசன் நகைகள் அனைத்தையும்
மலிவாகவும் தரமாகவும் பெற நாடுங்கள், ஓவியன் ஆடைகள் உலகம்!
Handy 0177 73 98 346 / 0157 5721 7563
Ihn.Balasundaram
brobert@aol.nl
எசன் நகர பிரதான புகையிரத நிலையித்தில் (Hbf) இருந்து 5 நிமிட நடைத்தூரம்
Baedecker Str.11
45128 Essen

# அடுப்படி



## கருப்பையை பலப்படுத்தும் ”உழுத்தங்களி”



அக்காலத்தில் பெண் குழந்தைகள் வயதுக்கு வந்துவிட்டால் கர்ப்பப்பை பலம் பெறுவதற்காக உழுத்தங்களி கொடுப்பது வழக்கமாக இருந்தது.

அது மட்டுமின்றி வயது வந்த உடனேயே முட்டையையும், நல்லெண்ணெயையும் தினமும் வெறும் வயிற்றில் குடிக்கச் செய்வர். இந்தக் களியில் வெல்லம், உளுந்து, நல்லெண்ணெய் சேருவதால் இரும்புச்சத்து, புரதச்சத்து, மாவுச்சத்து தாதுககள் என்று எல்லாம் கிடைத்து கர்ப்பப் பை பலமாக அமையும்.

இதை எப்படி செய்வது? (உழுத்தங்களி)

அரை கப் உழுந்தை வாணலியில் வறுத்து அதோடு அரை கப் அரிசி சேர்த்து மாவாகத் திரித்து தூய்மையைக அரித்து கொள்ளவும். 2 கப் உடைத்த கருப்பட்டி வெல்லத்தோடு தண்ணீர் 2 கப் விட்டு சூடாக்கவும், வெல்லம் கரைந்ததும் வடிகட்டி அழுக்கு, மண்நீக்கி, வாணலியைக் கழுவி மறுபடியும் அதிலேயே வெல்லக் கரைசலை ஊற்றவும். அதோடு 2 டேபிள் ஸ்பூன் நல்லெண்ணெய் சேர்த்துச் சூடாக்கவும். கரைசல் கொதிக்கும்போது மாவை மத்தியில் கொட்டிக் கிளறி, ஒரு கரண்டியை அதில் குத்தி மூடி வைக்கவும். குறைந்த தணலில் 7- இருந்து 10- நிமிடங்கள் வரை வேக விடவும். பிறகு அடுப்பிலிருந்து இறக்கி நன்றாகக் கிளறிவிடவும் சிறிது ஆறியதும் 2 டேபிள் ஸ்பூன் நெய் விட்டு கலந்து உருண்டைகளாக உருட்டி சாப்பிடக் கொடுக்கவும்.

## உடல் எடையைக் குறைக்கவல்ல பழம் பலாப்பழம்



(விடுமுறைக்கு தாயகம் செல்பவர்கள் இந்த பழக்காலத்தை மனதில்வைத்து விடு முறையைப் பதிவுசெய்யவும்.)

உடல் எடையில் மாற்றம் தெரிய வேண்டுமா? அப்ப உங்க டயடல் பலாப் பழத்தை சேத்துக்கொள்ளுங்கள்.

தாயகத்தில் கிடைக்கக்கூடிய பழங்களில் பெரும்பாலானோர் விரும்பி சாப்பிடும் ஒரு பழம் தான் பலாப்பழம். அதிலும் இந்த பழமானது யாழ்ப்பாணம் திருகோணமலை மட்டக்களப்பு மன்னார் வன்னி எங்கும் தேன் சுவையுடன் கிடைக்கும்.

நிறைய மக்கள் பலாப்பழத்தில் ஊட்டச் சத்துக்களானது குறைவாக உள்ளது என்று நினைக்கின்றனர். ஆனால் பலாப் பழத்தில் மற்ற பழங்களை விட ஊட்டச்சத்துக்கள் அதிகம் நிறைந் துள்ளது. அதிலும் உடல் எடையை குறைக்க நினைப்போர் பலாப் பழத்தை சாப்பிட்டால், உடல் எடையில் மாற்றத்தைக் காணலாம். இங்கு பலாப் பழத்தை சாப்பிட்டால் எப்படி உடல் எடையில் மாற்றம் தெரியும் என்று பார்ப் போம்.

உடல் எடையில் மாற்றம் தெரிய பலாப் பழத்தை சாப்பிடுங்க...

குறைவான கொழுப்பு பலாப்பழத்தில் சாச்சு ரேட்டட் கொழுப்புக்கள் குறைவாக உள்ளது. எனவே இது உடல் எடையை நிச்சயம் அதிகரிக்காது. மேலும் இந்த பழத்தை எவ்வளவு வேண்டுமானாலும்



உடல் எடை கூடுமோ என்ற அச்சமின்றி சாப்பிடலாம். அதுமட்டுமல்லாமல் உடல் எடையை குறைக்க நினைப்போர் டயட்டில் இதை சேர்த்துக் கொண்டால் நல்ல பலன் கிடைக்கும்.

சோடியம் குறைவு சோடியம் அதிகம் உள்ள உணவுப் பொருளை உட்கொண்டால் தான் உடல் எடை அதிகரிக்கும். ஆனால் பலாப்பழத்தில் சோடியத்தின் அளவு மிகவும் குறைவாக இருப்பதால், இது உடல் எடையை அதிகரிக்காது.

அதிக அளவு நார்ச்சத்து பலாப்பழத்தில் நார்ச்சத்து அதிகம் உள்ளதால், அதனை உட்கொள்ளும் போது, உடலில் தங்கி யுள்ள கொழுப்புக்களானது உடைக் கப்பட்டு, உடலில் கொழுப் புக்களின் அளவானது குறையும். மேலும் நார்ச்சத்து அதிகம் உள்ள உணவுப் பொருளை உட்கொண்டால், செரிமான மண்டலமானது சீராக செயல்படும். அதுமட்டுமல்லாமல் நார்ச்சத்துள்ள உணவுப் பொருட்கள் உடலின் எனர்ஜியை அதிகரிக்கும்.

ஊட்டச்சத்துக்கள் பலாப்பழத்தில் எண் ணற்ற வைட்டமின்கள், கனிமச்சத் துக்கள் மற்றும் இதர சத்துக்கள் நிறைந்துள்ளன. இதனால் உடலில் உள்ள நச்சுக்கள் வெளியேற்றப்பட்டு, உடல் எடையானது அதிகரிக்காமல் இருக்கும். மேலும் இதில் உள்ள சத்துக்கள் உடலுக்கு மட்டுமின்றி, சருமம், கூந்தல் போன்றவற்றிற்கும் தான் நன்மைகளை வழங்குகிறது. எனவே பலாப்பழம் சாப்பிட்டு, உடலை சிக்கென்று அழகாக வைத்துக் கொள்ளுங்கள்.








# காதல் ரேகை கையில் இல்லை!

(குரு அரவிந்தன்)

எனக்கு என்ன ஆச்சுஇ எதுவும் புரியவில்லை. ஒரு பெண்ணைக் கண்டவுடன் ஏற்படும் ஈர்ப்பு இவ்வளவு சக்தி வாய்ந்ததாக இருக்குமா என்று நினைத்துப் பார்த்தேன். திரும்பத் திரும்ப அவளையே பார்க்கத் தூண்டிய மனசு அவளைச் சுற்றிச் சுற்றியே வந்தது. மனசும் ஒரு தேனீ போலத்தான் இருக்குமோ என்ற நினைத்தேன். மொட்டாக இருந்தால் உதாசீனம் செய்வதும்இ மலரப் போகிறது என்று தெரிந்தல் சுற்றிச் சுற்றி வருவதும்இ மலர்ந்து விட்டால் தேனை அருந்தி விட்டு விலகிச் செல்வதும் தேனிக்குக் கைவந்த கலையாக இருக்கலாம்.
இதுவரை எத்தனையோ பெண்களைப் பார்த்திருக்கின்றேன் ஆனால் இப்படியொரு ஈர்ப்பு ஒருபோதும் ஏற்பட்டதில்லை. சினிமாப் படங்களில் சில நடிகைகளைப் பார்க்கும் போதெல்லாம் மனசு கொஞ்சம் சஞ்சலப்படுவது உண்மைதான். நிழற் காட்சிபோல மறுகணம் அது மாயமாய் மறைந்துவிடும். ஆனால் இது என்ன மாயம்இ இன்று எனக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை.
கனவுலகில் இருந்து நான் மீண்ட போது அவள் மறைந்து போயிருந்தாள். அவளை இன்னுமொரு முறையாவது பார்க்க வேண்டும் என்று மனசு ஏங்கியது. இந்தக் கூட்டத்தில் அவளை எங்கே தேடுவது? தென்றலாய் வந்தவள் சட்டென்று என் மனதில் சூறாவளியை ஏன் ஏற்படுத்தினாள்? என் தவிப்பு என்னவென்று அவளுக்குப் புரியப் போவதில்லைஇ ஆனாலும் மனசு எதற்கோ தவித்தது.

வரவேற்பு மேசையில் உட்கார்ந்திருந்த பெண்ணோடு சிரித்துச் சிரித்துப் பேசிக்கொண்டிருந்த அவள்தான் திடீரென மறைந்திருந்தாள். சரிஇ இத்தோடு விட்டு விடுவோம் என்று நினைத்துக் கொண்டு நகர்ந்தேன். விரிவுரை நடக்கவிருக்கும் அறை எங்கே இருக்கிறது என்று முதலில் தேட வேண்டும். விரிவுரைக்குச் செல்லுமுன் கோப்பி ஒன்று அருந்தினால் நல்லாயிருக்கும் போல இருந்தது. பூட் கோட்டில் இருந்த ரிம்ஹோட்டனுக்குச் சென்று வரிசையில் நின்றேன். வரிசை மெல்ல நகர்ந்தது. வரிசையில் நகர்ந்து கொண்டிருந்தாலும் மனசெல்லாம் அவள் நினைவாகவே இருந்தது.

தற்செயலாகத் திரும்பிப் பார்த்தேன். மறுவரிசையில் அவளும் நகர்ந்து கொண்டிருப்பது போன்ற ஒரு உணர்வு ஏற்பட்டது. இது வெறும் மாயையா அல்லது நிஜமா ஒரு கணம் சுயநினைவு பெற்றுத் திரும்பிப் பார்த்தேன். நிஜம்தான் என்பதை உணர்ந்தேன். திரும்பவும் அவளைக் கண்டதில் மனம் மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தது. அவள் என்னைப் பார்த்ததாகத் தெரியவில்லை. ஆனாலும் வைத்த கண் வாங்காமல் அவளைப் பார்த்தேன். இப்படி ஒருத்தன் அவளை விழுங்கி விடுவது போலப் பார்க்கிறேனே என்பதைக்கூடப் பொருட்படுத்தாமல் அவள் கோப்பியை வாங்கிக் கொண்டு. நகர்ந்தாள்.
பூட்கோட்டில் இருந்த ஒரு இருக்கையில் அமர்ந்து கோப்பியை மெல்ல மெல்ல ருசித்து அருந்தினாள். நானும் அருகே இருந்த இருக்கையில் அமர்ந்து இருந்தது. ஒவ்வொரு தடவையும் அவளது உதடுகள் அந்தக் கோப்பையில் பதிந்த போது எனக்குள் ஏதேதோ உணர்வுகள் எழுந்து என்னைப் பரவசப்படுத்தியது.

மனசு ஒரு நிலையில் இல்லை என்பதை உணர்ந்தேன். முதல் நாள் என்பதால் விரிவுரை தொடங்குமுன் அங்கே சென்று தகுந்த இடத்தில் அமர விரும்பினேன். ஏற்கனவே சிலர் அங்கே வந்து அமர்ந்திருந்தார்கள். நான் எனக்கு வசதியான இடத்தில் அமர்ந்து கொண்டேன். தென்றல் தழுவிச் சென்றது போலஇ இனிய சுகந்தம் காற்றில் மிதந்து வந்து என்னைத் தழுவியது. நிமிர்ந்து பார்த்தேன். சற்றும் எதிர் பாராத ஆச்சரியம் எனக்குக் காத்திருந்தது. யாரைத் தேடினேனோ அவளேதான்இ எனக்கு அருகே இருந்த இருக்கையில் வந்து அமர்ந்தாள்.
'ஹலோ ஐ ஆம் ரீனா ஹிரோக்கி' என்றாள். ஒரு கணம் எனக்கு கைகால் இயங்கவில்லை. ஆனாலும் சமாளித்துக் கொண்டு 'ரஜீவன்.. கிளாட் டு மீட்யூ' என்று கை கொடுத்தேன். அவள் சகஜமாகக் கை கொடுத்துவிட்டு. நடக்க இருக்கும் விரிவுரை பற்றிப் பேசினாள். தன்னை யார் என்று அறிமுகப் படுத்தினாள். என்னை நானும் அறிமுகப் படுத்திக் கொண்டேன். ஏதாவது அவளுடன் பேசவேண்டும் என்பதற்காகஇ 'ரீனா என்றால் என்ன அர்த்தம்?' என்றேன். 'ஜாஸ்மின்' என்றாள். என் சுவாசத்தில் மல்லிகை மணத்தது. அவள் மல்லிகைதான்! 'எனக்கும் பிடிக்கும்' என்றேன். புன்னகை உதிர்த்தாள்.

அதன் பின் விரிவுரை நடக்கும் நாட்களில் அவளை அடிக்கடி சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது. அவளைப் பற்றிய தொடர் நினைப்பு அவள் மீது ஏற்பட்ட ஒரு வகை ஈர்ப்பு என்றுதான் நினைத்தேன். இந்த வயதில் ஏற்படும் இயற்கையான கவர்ச்சிதான் என்னை அவள் பக்கம் திருப்பியிருக்கலாம். அடிக்கடி அவளைச் சந்திப்பதும் எங்களுக்குள்ளான கருத்துக்கள் ஒன்று பட்டிருந்ததும் காரணமாக இருக்கலாம்.
பெற்றோர் பார்த்துச் செய்யும் திருமணத்தை ஏற்பதாக இதுவரை நம்பிக் கொண்டு கட்டுப்பாட்டுடன் இருந்தாலும் என் மனம் அவளைச் சுற்றியே வருவதை உணர்ந்தேன். கைரேகை பார்த்து அதைத்தான் சொன்னார்கள். எப்படி இது சாத்தியமாயிற்றுஇ காதல் ரேகை கையில் இல்லை என்பது எனக்குப் புரியலாயிற்று. கருத்துப்பரிமாறஇ ஒருவரை ஒருவர் புரிந்து கொள்ள பொதுவான ஒரு மொழி இருந்தது ஒரு வேளை காரணமாக இருக்கலாம். இவளைப் பற்றி அம்மாவிடம் சொன்னால் அம்மா கேட்கும் முதல்கேள்வி என்னவாயிருக்கும் என்று யோசித்துப் பார்த்தேன்.
அவள் என்னுடைய இனத்தவளாஇ என்னுடைய மதத்தவளாஇ அல்லது எனக்கு உறவினராஇ என்னுடைய நாட்டவளா கேள்விகள் இப்படித்தான் இருக்கும். இதற்கு என்ன பதில் சொல்ல முடியம்இ சாதகமாக எதுவும் இல்லையே! இது காதல் என்றால்இ அவளும் என்னை விரும்பினால் முடிவு எடுப்பது நாங்களாகத்தான் இருக்க வேண்டும். யாருக்கு யாரென்று ஆண்டவன் ஏற்கனவே எழுதி வைத்திருக்கிறான் என்பார்கள். அது போல எனக்கு இவள்தான் என்று ஒரு வேளை எழுதி வைத்திருக்கலாமோ?

அன்று வலன்ரைன் தினம். செரிடன் கல்லூரி வளாகம் கலகலப்பாக இருந்தது. வழமைபோல நட்புக்கு அடையாளமாக எல்லோரும் நண்பர்களுக்கு ஏதாவது கொடுத்தார்கள். ரீனா தனது தோழிகளோடு கலகலப்பாகப் பேசிக் கொண்டு நின்றாள்.
'ஒஹாயோ ரீனா' என்றேன். ஆச்சரியமாய் பார்த்தாள்.
அவளது அந்த ஆச்சரியம் கலையுமுன்பே நானும் ஒற்றை ரோஜா ஒன்றை அவளிடம் நீட்டினேன்.

**தொடர்சி 28ம் பக்கம்**





# ஆண்மையின் முழுமை பெண்மை.

ஆண்மையின் முழுமை பெண்மை.

ஆணும் பெண்ணும்
சமமெனும் வாதங்கள் எதற்கு ?
பெண் ஆணை விடப் பெரியவளல்ல
என பறைசாற்றவா ?

பெண்கள் இல்லாத உலகத்தைக் கற்பனை செய்து பார்க்க முடியுமா ? உலகிலிருந்து வர்ணங்களை வெளியேற்றி விட்டால் எப்படி இருக்குமோ அப்படி அழகற்றுப் போய் விடும் மனுக்குலம். நிறங்கள் வற்றிப் போய்விட்ட வானவில் போல ஆகிவிடும் தினசரி வாழ்க்கை. வாழ்க்கையை அழகாக்குவதும், அதை இனிமையாக்குவதும் பெண்களே ! பெண்மை அழகானது !

உடலில் இருந்து உயிரை எடுத்தால் என்னவாகும் எனும் கேள்வியைக் கேட்டால், "பிணமாவோம்" என்பது தானே பதில்! ஆண்களுக்குத் தான் அது பொருந்தும். பெண்களுக்குப் பொருந்த வேண்டுமென்பதில்லை. பெண்ணின் உடலில் இருந்து உயிரை வெளியே எடுத்தால் அவள் "தாய்" என்று கூட அழைக்கப் படலாம் இல்லையா ? பெண்மை வியப்பானது !

படைப்பின் முழுமை பெண்மையில் தான் அடங்கியிருக்கிறது. கடவுளின் படைப்பு ஏவாளைப் படைத்தவுடன் நிறைவுற்றது என்கிறது பைபிள். படைப்பின் உயர்நிலையாகப் பெண் சிறப்பிடம் பெறுகிறாள். பெண்மை உயர்வானது !

பெண்களின் வலிமை அவர்களுடைய மென்மையில் தான் அடங்கியிருக் கிறது. உயர்ந்தவர்கள் என தங்களை அழைத்துக் கொள்ளும் ஆண்கள் தான் மென்மையின் மேன்மையைப் புரிந்து கொள்ளாமல் இருந்து விடுகிறார்கள்.

கணினியில் முதல் மென்பொருளை எழுதிய அட லவ்லேஸ் முதல் ஃபேஸ் புக் நிறுவன சி.ஓ.ஓ வான ஷெரில் சேன்ட்பெர்க் வரை பெண்கள் தொழில் நுட்பத் துறையில் கொடிகட்டிப் பறக்கின்றனர். லோக்கல் வார்ட் கவுன்சிலர் முதல் ஜெர்மனியின் சேன்ஸ்லர் ஏஞ்சலா மெர்கல் வரை அரசியலில் கலக்குகின்றனர். பிளாக்கில் எழுதும் பெண்கள் முதல், ஜே.கே ரௌலிங் வரை எழுத்துத் துறையில் பிரமிக்கிறார்கள். பெண்கள் எந்த வகையிலும் ஆண்களுக்குக் குறைவானவர்கள் இல்லை என்பதை கிடைக்கும் சந்தர்ப்பங்களிலெல்லாம் நிரூபித்துக் கொண்டே இருக்கின்றனர்.

பெண்களின் சாதனை என்பது பாறைகளை உடைத்து வெளிவரும் முளையைப் போன்றது. ஆண்களின் வெற்றி என்பது வயலில் நடப்பட்ட விதையின் முளையைப் போன்றது. அதனால் தான் பெண்களின் வெற்றி பிரமிப்பாகப் பார்க்கப் படுகிறது. ஒருவேளை ஆண்கள் பாறைகளை உடைத்து முளைக்க வேண்டிய சூழலில் இருந்திருந்தால் வெற்றியடைந்திருப்பார்களா என்பது சந்தேகமே. காரணம் பெண்களின் மன திடம் ஆண்களின் மன திடத்தை விட அதிகம். இதை நான் சொல்லவில்லை, ஆய்வுகள் சொல்கின்றன.

மொட்டாகி, இதழ் விரித்து, மலராகிச் சருகாகும் பூவின் வாழ்க்கையைப் போலவே பெண்களின் வாழ்க்கையும் அமைந்து விடுகிறது. கவிஞர்கள் பெண்களை மலரென சொல்வதன் மர்மமும் இங்கே தான் அடங்கியிருக்கிறது. பெண் குழந்தைகள் ஓடி விளையாடும் வீடுகளைப் பார்த்திருக்கீர்களா ? இல்லையேல் சன்னல் வழியே எட்டியேனும் பாருங்கள். சுவர்க்கத்தின் அறிமுகம் உங்களுக்கு அப்போது தான் கிடைக்கும். தேவதைகள் ஓடியாடும் தளத்தை சுவர்க்கம் என்று சொல்லாமல், சுவர்களடைந்த அறைகள் என்று சொல்வது மாபெரும் பிழையல்லவா !

சிறுமியர் பாண்டி விளையாடும் தெருக்களில் வசித்திருக்கிறீர்களா ? நீங்கள் பாக்கியம் செய்தவர்கள். அவர்களுடைய புன்னகையின் பூ விரிப்புகளில் தெருவே பூக் கோலம் போர்த்துக் கொள்ளும். அவர்களுடைய கதைகளின் சிலிர்ப்புகள் தெருக்கள் தோறும் பறவைகளாய்ப் பறந்து திரியும். அவற்றை வீதிகள் என்று சொல்லாமல் வியப்பின் மீதிகள் என்று சொல்வது தான் சரியல்லவா !



பதின் வயதுப் பெண்களின் வெட்கம் வழியும் குறும்புப் பார்வைகளைத் தரிசித்திருக்கிறீர்களா ? விடலைக்கும், முழுமைக்கும் இடைப்பட்ட தளத்தில் சிரிக்கும் அவர்களுடைய வளர்பிறைக் கனவுகளை கண்களில் ஏந்தியிருக்கிறீர்களா ?
இளமையோடு, இலட்சியங்களையும் நெஞ்சில் சுமக்கும் அவர்களுடைய பயணத்தில் இணைந்திருக்கிறீர்களா ? அவை வெறும் பயணங்களல்ல பரவசத்தின் தருணங்களல்லவா !

தொடர்ச்சி 20ம் பக்கம்....



# டீன் ஏஜ் பெண்ணின்




# அப்பாவா நீங்கள் ?






சேவியர்

வயசுக்கு வந்த பிள்ளையை வளர்க்க வேண்டியது அம்மாவோட பொறுப்பு என நைஸாக நழுவும் அப்பாவா நீங்கள் ? கொஞ்சம் நில்லுங்கள். உண்மையில் உங்கள் டீன் ஏஜ் மகளுக்கு அம்மாவை விட அதிகம் தேவை நீங்கள் தான். முழிக்காதீங்க...

தந்தையின் நேசம் கலந்த வழிகாட்டுதல் இல்லாத பதின் வயதுப் பெண்கள் பல்வேறு சிக்கல்களில் விழுகிறார்கள். சிறுவயதிலேயே அவர்கள் பாலியல் ரீதியாக பலவீனப்படுகிறார்கள். தேவையற்ற தாய்மையைப் பெற்றுக் கொள்கிறார்கள். இதையெல்லாம் நான் சொல்லவில்லை ! அமெரிக்கா மற்றும் நியூசிலாந்தில் நடத்தப்பட்ட விரிவான ஆராய்ச்சி ஒன்று சொல்கிறது.

இந்த ஆராய்ச்சியை முன் நின்று நடத்தியவர் நியூசிலாந்திலுள்ள கேண்டர்பர்க் பல்கலைக்கழகத்தின் உளவியல் பேராசிரியரான புரூஸ் ஜே எல்லிஸ். டீன் ஏஜ் பருவத்திலேயே செக்ஸ் பிரச்சினைகளில் மாட்டி கர்ப்பமாவது அமெரிக்கா மற்றும் நியூசிலாந்தில் சர்வ சாதாரணம். இதற்குக் காரணம் என்னவாக இருக்கும் என அவர்கள் அலசி ஆராய்ந்தபோது தான் சிக்கியிருக்கிறது இந்த அதிர்ச்சியூட்டும் உண்மை. தந்தையின் சரியான வழிகாட்டுதல், அன்பு, அரவணைப்பு இல்லாதது தான் எல்லா பிரச்சினைக்கும் மூல காரணமாம். இப்போது சொல்லுங்கள், டீன் ஏஜ் பெண்ணின் வளர்ச்சிக்கு நீங்கள் தேவையா இல்லையா ?

ஒரு டீன் ஏஜ் மகளுக்கு அப்பா என்பவர் வெறும் ஒரு நபரல்ல. ஒரு நண்பன், பாதுகாவலன், ஊக்கமூட்டுபவர், உற்சாகப்படுத்துபவர், தன்னம்பிக்கை வளர்ப்பவர், நம்பிக்கை ஊட்டுபவர், பண்புகளை ஊட்டுபவர், வழிகாட்டி என எக்கச்சக்க முகங்கள் அவருக்கு இருக்க வேண்டும். ஒரு பெண் முதலில் சந்திக்கும் ஆண் அவளுடைய அப்பா தானே ? அப்பாவிடமிருந்து தான் அவள் ஒரு ஆணுக்குரிய இலக்கணங்களைக் கற்றுக் கொள்கிறாள். ஆண் என்பவனின் குணாதிசயங்களைக் கற்றுக் கொள்கிறாள். ஆண் என்பவருடைய அளவீடுகளைக் கற்றுக் கொள்கிறாள். ஆண் என்பவரின் தேவையைக் கண்டு கொள்கிறாள். எனவே மகள் மழலையாய் இருக்கும் போதே எல்லா வகையிலும் முன் மாதிரிகையான வாழ்க்கை வாழவேண்டியது அப்பாவின் கடமையாகிறது.

சின்ன வயதில் மழலையாய் சிரித்துச் சிணுங்குகையில், அழகழகாய் ஆடைகள் வாங்கிக் கொடுப்பதானாலும் சரி, பென்சில், ரப்பர் வாங்குவதானாலும் சரி ரொம்பவே ஈடுபாடு காட்டுவீர்கள். எல்லாவற்றையும் தேடித் தேடி வாங்குவீர்கள். பாப்பாவும் ரொம்பவே சமர்த்தாய் உங்கள் கழுத்தைக் கட்டிக் கொண்டு கன்னத்தில் முத்தம் தருவாள். திடீரென ஒரு நாள் பார்த்தால், சட்டுபுட்டுன்னு வளர்ந்து நிற்பாள். “என் டாடி சூப்பர்” என்று சொல்லிக் கொண்டிருந்தவள், “டாடிக்கு ஒரு மண்ணும் தெரியாது” என்று பல்டி அடிப்பாள். மூக்குத்தியை எடுத்து நாக்கில் மாட்டுவாள். டென்ஷன் ஆகாதீர்கள். எல்லாவற்றுக்கும் காரணம் அவளுடைய உடல், மன மாற்றங்கள் தான்.

என் பொண்ணுக்கு என்னைக் கண்டாலே புடிக்கல. அவளுக்கு நான் இனிமே தேவையில்லை என்றெல்லாம் உளறிக் கொட்டாதீர்கள். ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் மகள் உங்கள் மகள் தான். உங்கள் மீதான பாசமும், அன்பும், கரிசனையும் எப்போதுமே அவளிடம் நிரம்பி இருக்கும். ஆனால் அவளுடைய வெளிப்படுத்தல்களில் தான் எக்கச் சக்க மாற்றங்கள் முண்டியடிக்கும்.

“டாடி பிளீஸ்... டாடி... வாங்கிக் கொடுங்க டாடி” என்று சின்ன வயதில் கெஞ்சிய மகள் “டாட்... எனக்கு இது வேணும். முடியுமா முடியாதா “ என பிடிவாதம் பிடிப்பாள். உடனே நீங்கள் பதட்டப்படுவீர்கள். ஆனால் உண்மையில் அவள் உங்களுடைய அனுமதியை எதிர்பார்த்து நிற்கிறாள். அப்பாவின் அனுமதி இருந்தால் தான் அவளுக்கு அதில் ஒரு ஆத்ம திருப்தி. நீங்க பாட்டுக்கு எல்லாவற்றையும் சகட்டு மேனிக்கு நிராகரித்துத் தள்ளாதீர்கள். “நல்லதுன்னா அப்பா ஒத்துப்பார்” எனும் நிலமை தான் இருக்க வேண்டுமே தவிர “அவர் கிட்டே என்ன சொன்னாலும் வேலைக்காவாது” என்ற நிலைக்கு நீங்கள் வந்து விடவே கூடாது.

இது ஒரு நீச்சல் போல. கரையில் இருந்து கொண்டே நீங்கள் ஆர்டர் போட முடியாது. இன்னும் சொல்லப் போனால் டீன் ஏஜ் பருவத்தினருக்கு அட்வைஸ் எனும் வார்த்தையே அலர்ஜி. காரணம் பெரும்பாலும் அவளுடைய விருப்பத்துக்கு நேரானதாகத் தான் இருக்கிறது அப்பாக்களின் அட்வைஸ். அதற்காக நல்ல விஷயங்களைச் சொல்லக் கூடாதா என்பதல்ல. அதை செயலில் காட்டவேண்டும். அல்லது நாசூக்காக விளக்க வேண்டும். பேசுவதை விட மிக மிக அதிகமாய் மகள் பேசுவதைக் கேட்கவேண்டும். அது தான் முக்கியம்.

“எங்க காலம் தான் பொற்காலம்... இப்போ எல்லாம் டெக்னாலஜி சாத்தான் ஆட்டம் போடுது” என பழமை பேசாதீர்கள். அது உங்கள் டீன் ஏஜ் மகளை உங்களிடமிருந்து ரொம்பவே விலக்கி வைத்து விடும். காலத்துக்கேற்ப மாறிக் கொண்டே இருக்க வேண்டும். உங்கள் மகள் ஏ.ஆர் ரஹ்மான் பிரியை என்றால் ஒரு ஐ-பாட் வாங்கி நிறைய ஏ.ஆர் ரஹ்மான் பாட்டை நிரப்பிக் கொடுங்கள். அவள் ரசிக்கட்டும். அப்போது தான் நீங்களும் உங்களை இளமையாக்கிக் கொள்கிறீர்கள் என்று அர்த்தம்.

ஒன்றை நினைவில் கொள்ளுங்கள், “என் அப்பா டெக்னாலஜியில் என்னைப் போல ஹைடெக்..” என கருதுவதில் உங்கள் மகளுக்கு இருக்கும் மகிழ்ச்சி அலாதியானது. நீங்கள் அந்த டெக்னாலஜி உலகுக்குள் நுழைந்தால் தான் அதிலுள்ள நன்மை தீமைகளை நாசூக்காக உங்கள் மகளுக்குச் சொல்லவும் முடியும் ! அதை விட்டு விட்டு, “என்ன இவ சாப்பிடும்போ எஸ் எம் எஸ் அடிக்கிறா, பேசிகிட்டே எஸ் எம் எஸ் அடிக்கிறா, ஆர்குட், பேஸ் புக் என்னன்னவோ சொல்றா....” என புலம்பித் தள்ளாதீர்கள்.

இன்னொரு விஷயம், உங்கள் மகள் பருவத்துக்குரிய வனப்புடன் வளர்கிறாள் என்றதும் தள்ளியே நிற்காதீர்கள். அது மன அளவில் உங்கள் டீன் ஏஜ் மகளைப் பாதிக்கும் என்கின்றனர் உளவியலார்கள். உங்கள் மகளின் தோளைத் தட்டிப் பாராட்டுவதோ, தலையைக் கோதிப் பாராட்டுவதோ, செல்லமாய் அரவணைத்துக் கொள்தலோ அவளுக்கு ரொம்பவே தேவை.

அடிக்கடி வெளியே கூட்டிப் போங்கள். ஐஸ்கிரீம் பார்லர் போன்ற இடங்களுக்கு ஜாலியாகப் போய் வாருங்கள். மகளுடன் நிறைய நேரம் செலவிடுங்கள். நிறைய நேரத்தை நீங்கள் அவளுடன் செலவிடும்போது அவளுக்கு இயல்பான உரையாடல் சாத்தியப்படுகிறது. நினைத்ததை எப்படியேனும் வெளிப்படுத்தி விடுவாள். அவள் பள்ளியிலோ, கல்லூரியிலோ ஏதேனும் விழா நடக்கிறது , அழைக்கிறாள் என்றால் தவற விடாதீர்கள். வெறுமனே நீங்கள் அவளுடன் இருந்தால் போதும் அவள் உங்களை ரொம்பவே கொண்டாடுவாள். நீங்கள் அவளை அன்பு செய்கிறீர்கள். சரி ! மதிக்கிறீர்கள். சரி ! ஆனால் அதை அவளிடம் வெளிப்படையாகச் சொல்லியிருக்கிறீர்களா ? இல்லையேல் அதைச் சொல்லுங்கள் முதலில். டீன் ஏஜ் மனது எதிலும் வெளிப்படையாய் இருக்க விரும்பும் மனது. .

தொடர்ச்சி 18ம் பக்கம்....









சுற்றி வளைத்து எதையும் பேசாமல், உங்கள் மகளை நீங்கள் மதிக்கிறீர்கள், அன்பு செய்கிறீர்கள் என்பதைச் சொல்லி விடுங்கள். டீன் ஏஜ் மகளின் தினசரிகள் பல்வேறு அனுபவங்களால் நிரம்பி வழியும். ஆனந்தம், கவலை, எரிச்சல், சோகம் என எக்கச் சக்க உணர்வுகள் நிரம்பி வழியும். சக தோழிகளின் கிண்டல், காதல், படிப்பு, அழகு என கண்டதுக்கும் கவலைப்படும் வயது அது. அதை முதலில் நீங்கள் எப்போதும் நினைவில் கொள்ளவேண்டும். “எதுவானாலும் கவலையில்லை … அப்பா இருக்கிறார்” எனும் நம்பிக்கையை நீங்கள் உங்கள் மகளிடம் ஊற்ற முடிந்தால் அதை விடப் பெரிய விஷயம் ஏதும் இல்லை. அதற்கு மகளிடம் உண்மையாய் இருக்க வேண்டியது உலக மகா தேவை !

மகளிடம் நீங்கள் எந்த அளவுக்கு உண்மையாய், நம்பிக்கைக்குரியவராய் இருக்கிறீர்களோ அந்த அளவுக்கு அவள் உங்களிடம் வெளிப்படையாய் பேசுவாள். உண்மையை உள்ளபடி பேசுவாள். அப்படி மனம் திறந்து பேசும் போது எந்தக் காரணம் கொண்டும் அவளைத் திட்டாதீர்கள். அவள் என்னதான் மிகப்பெரிய தவறு செய்திருந்தாலும் சரி, உணர்ச்சி வசப்படாதீர்கள். பிரச்சினைகள் விளைவுகள் தீர்வுகள் என சிந்தியுங்கள். நீங்கள் பதட்டப்பட்டு உங்கள் கோபத்தையும், ஆத்திரத்தையும் மகளிடம் காட்டி விட்டால் போச்சு. அது வீட்டைப் பூட்டி சாவியை தூர எறிவதற்குச் சமம். உங்கள் மகள் அதன் பின் உங்களிடம் எதையும் பேசுவாள் என்று சொல்வதற்கில்லை.

எப்போதும் அவளிடம் தோழமை உணர்வுடன் பழகுங்கள். அடிக்கடு உங்கள் மூடு மாறாமல் இருக்க வேண்டியது ரொம்ப முக்கியம். “அப்பா எப்போ அமைதியா இருப்பாரு, எப்போ எரிஞ்சு விழுவாருன்னு தெரியாது” எனும் நிலமை வந்தால் சிக்கல் தான். அவளுடைய படிப்பு, நட்பு, காதல் எல்லாவற்றிலும் உங்கள் அளவான ஈடுபாடு இருக்கட்டும். “அவளுக்கு இதெல்லாம் சொல்லித் தெரிய வேண்டியதில்லை” என்று மட்டும் எப்போதும் நினைக்காதீர்கள். குறிப்பாக ஆண்களைப் பற்றியும், ஆண்களின் குணாதிசயங்கள், சிந்தனைகள், எதிர்பார்ப்புகள் போன்றவற்றைப் பற்றியும் அவளுக்குப் புரியும் வகையில் அவ்வப்போது சொல்வது அவசியம். வெளுத்ததெல்லாம் பாலல்ல, பாய்சன் கூட உண்டு என்பதை அவள் தெரிந்து கொள்ள வேண்டும், அதான் விஷயம். இந்த அப்பா மகள் பந்தத்தில் யாருக்கு அதிக பொறுப்பு என நினைக்கிறீர்கள் ? அப்பாவுக்கு என்று சொன்னால் நீங்கள் ஒரு பொறுப்பான அப்பா என்று அர்த்தம். டீன் ஏஜ் மகளின் மனநிலையைப் புரிந்து கொண்டு பொறுமையாக வழிகாட்ட வேண்டியது உங்கள் கடமை. ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். டீன் ஏஜ் பருவம் தொட்டால் வெடிக்கும் பருவம். சின்னச் சின்ன மன வருத்தங்களுக்காக தற்கொலை செய்து கொள்வது கூட இந்த வயதில் சகஜம். அதனால் அவளை உசுப்பேற்றும் எந்த சண்டையையும் நடத்தாமல் இருப்பது நல்லது. குறிப்பாக அவளுடைய தோற்றம், அழகு, ஆடைகள் போன்றவற்றைக் கிண்டலடிக்காதீர்கள். மாறாக, பாராட்டுங்கள். பாராட்டுக்கள் தன்னம்பிக்கையை வளர்க்கும். அவளை வலுவாக்கும்.

சமூகம் சார்ந்த பல அறிதல்களையும் நீங்கள் தான் அவளுக்குச் சொல்லித் தர வேண்டும். பெரும்பாலான இளம் பெண்கள் புகை, போதை என பரிசோதித்துப் பார்ப்பது இந்தப் பதின் வயதில் தான். அவற்றைப் பற்றிய தெளிவை மகளுக்குத் தரும் பொறுப்பும் உங்களிடமே.

ஒரு ஆச்சரிய உண்மை என்னவென்றால், பதின் வயதுத் தொடக்கத்தில் இருக்கும் மனோபாவம் நாள் செல்லச் செல்லப் பக்குவப்படும். பெண்ணின் திருமண வயது வரும்போது “அப்பா தான் உலகம்” எனும் நிலைக்குப் பெண்கள் வந்து விடுவார்கள். அதுவரை சலிக்காத வழிகாட்டலும், பொறுமையான அணுகு முறையும், நிபந்தனையற்றை அன்பும் நீங்கள் காட்ட வேண்டியது அவசியம்.

சின்ன வயதிலிருந்தே தந்தையின் வழிகாட்டுதலிலும், அன்பிலும் வளரும் குழந்தைகள் நல்ல மன வளர்ச்சி அடையும் என்கிறார் எழுத்தாளரும் மருத்துவருமான மெக் மீக்கர். “ஸ்ட்ராங் ஃபாதர்ஸ், ஸ்ட்ராங் டாட்டர்ஸ்” எனும் நூலில் அப்பாவின் வழிகாட்டுதலே டீன் ஏஜ் பெண்களுக்கு மிக மிகத் தேவை என்கிறார். “என் பொண்ணோட வாழ்க்கையில் மிக முக்கியமான நபர் நான்” எனும் எண்ணம் அப்பாக்களுக்கு வரவேண்டியது தான் முதல் தேவை என்கிறார் இவர்.இன்னொரு முக்கியமான விஷயம், நீங்கள் உங்கள் மகளை எப்படி நடத்துகிறீர்கள் என்பதை வைத்து மட்டும் உங்கள் மகள் உங்களை எடை போடுவதில்லை. உங்கள் மனைவியை நீங்கள் எப்படி நடத்துகிறீர்கள், மற்றவர்களை எப்படி நடத்துகிறீர்கள் என்பதையெல்லாம் அவள் கூட்டிக் கழித்துப் பார்ப்பாள். நீங்கள் எல்லா இடத்திலும் வலுவாக இல்லையேல் நீங்கள் அவளிடம் காட்டும் அன்பை போலித்தனம் கலந்ததாக அவள் கருதிக் கொள்ள வாய்ப்பு உண்டு. கடைசியாக ஒன்று. “ என் அப்பாவைப் போல நல்ல ஒரு ஆண் எனக்குக் கணவனாக வர வேண்டும்” என உங்கள் மகள் நினைக்க வேண்டும். அப்படி நடந்தால் நீங்கள் ஒரு அப்பாவாக ஜெயித்து விட்டீர்கள் என்று பொருள் ! ஜெயிக்க வாழ்த்துக்கள் !



Super Singer 4 இறுதி நிகழ்வுக்கான ஒத்திகையின் போது!!!


**Nirubagini Magendiran LL.M.**
Vereidigte Dolmetscherin und Übersetzerin
Tamil- Deutsch
Deutsch- Tamil
மொழிபெயர்ப்பாளர்
தமிழ் – யேர்மன்
யேர்மன் – தமிழ்
Mobil: +49176-24012135
Email: nirumagendiran@hotmail.com


உங்கள் அனைத்துக் காப்புறுதிகளுக்கும் அதிக பணம் செலுத்துவதாக உணர்கின்றீர்களா?
உங்களுக்கு உகந்த காப்புறுதி எதுவென்று தெரிந்து அதை நான் உரிய முறையில் செய்துதரக்காத்திருக்கின்றேன்.
அழைக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்.


Thuvaragan Nesapalan
Telefon: 0202/5270-250
Mobil: 0171/6412008
www.rmb3.de
Düsseldorfer Str. 128
42115 Wuppertal
rmb³ VERSICHERUNGSKONZEPTE FINANZDIENSTLEISTUNGEN
rmb³ ist Partner der Gothaer



Tel: phone 0049 2304 250 058 7, 0049 176 3065 6695

AMERICANADA HOLIDAYS





# தகுதியோடு தலைநிமிர்ந்து நிற்க விரும்புபவன் தமிழன்.

## அந்த தலைநிமிர்வுடன் ஜெயித்தார் ஜெசிக்கா!

சூப்பர்சிங்கர் பட்டத்தை கைப்பற்றினார் ஸ்பூர்த்தி: தங்கம் வென்ற ஜெசிக்கா

பல கட்டத்தேர்வுக்கு பின்னர் இறுதிச்சுற்றில் பரத், அனுஷ்யா, ஜெசிக்கா, ஸ்பூர்த்தி, ஹரிப்ரியா, சிரிஷா ஆகிய 6 பேர் போட்டியிட்டனர். அனைவரையும் மெய்மறக்கச் செய்த ஸ்பூர்த்தி மக்கள் ஓட்டுக்கள் மற்றும் நடுவர்களின் தீர்ப்புகளின் அடிப்படையில் வெற்றிபெற்று சூப்பர் சிங்கர் பட்டத்தை கைப்பற்றியுள்ளார். மேலும் 70 லட்சம் மதிப்புள்ள ஒரு அடுக்குமாடி வீட்டை வென்றுள்ளார். இதில் ஈழத்தமிழ் சிறுமியான ஜெசிக்கா இரண்டாவது இடத்தை பெற்று 1 கிலோ தங்கத்தையும், ஹரிபிரியா மூன்றாம் இடத்தை பிடித்து 10 லட்சம் ரூபாய் மதிப்புள்ள காரையும் பரிசாக வென்றனர்.
உலகம் முழுவதும் உள்ள தமிழ் நெஞ்சங்களை கொள்ளை கொண்ட ஒரு இசை நிகழ்ச்சி சூப்பர் சிங்கர். கடந்த 7 ஆண்டுகளுக்கு மேலாக மக்களை கவர்ந்து வரும் சூப்பர்சிங்கர் ஜூனியர் சீசன் 4 நிகழ்ச்சியின் மிகப்பிரம்மாண்டமான இறுதிச்சுற்று இன்று 20.02.2015 சென்னையில் நடைபெற்றது.

ஜெசிக்கா யூட் இலங்கை வடமராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த முனைப்பகுதியைப் பிறப்பிடமாகவும், கனடா ஸ்காபுரோவை வசிப்பிடமகவும் கொண்டவர்.

தனக்கு பரிசாகக் கிடைத்த ஒரு கிலோ தங்கத்தின் பெறுமதியான பணம்அனைத்தையும் தமிழகத்திலும்,இலங்கையிலும் வாழும் அனாதைக் குழந்தைகளுக்கு வழங்கப்போவதாக ஜெசிக்காவின் தந்தை யூட் சூசைதாசன்,இன்று விஜய் தொலைக்காட்சியின் விருது வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு தெரிவித்த பொழுது,அங்கு கூடியிருந்த இரசிகர்கள், பலத்த ஆரவாரம் மூலம் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தனர்




இந் நிகழ்ச்சி தொடர்பாக கருத்து தெரிவித்த பொழுத, ஜெசிக்கா ஜூட்ஸ்,தனது ஆசிரியர்களுக்கும்,விஜய் தொலைக்காட்சிக்கும், நடுவர் களுக்கும்,தனது தாய்,தந்தை,சகோதரர்களுக்கும் அவரது இசையை நெறிப்படுத்திய அனந்த் அவர்களுக்கும் தனது நன்றியைத் தெரிவிதுக் கொண்டார்.

உண்மையில் ஈழத்தமிழர் ஜெசிக்கா என்பதை விட உண்மையிலேயே அப்போட்டிக்கும் வெற்றிக்கும் தனது கடின உழைப்பால் தன்னைத் தயார்படுத்திக்கொண்டமை அவருக்கு வாக்களித்த ஈழத்தமிழர் எல்லோரையும் மெய்சிலிர்க்க வைத்தது. தகுதியோடு தலைநிமிர்ந்து நிற்க விரும்புபவன் தமிழன்.



அந்த தலைநிமிர்வைக் கொடுத்து ஜெயித்த ஜெசிக்காவிற்கு வாழ்த்துக்கள்.
தோல்வி நிலை என நினைத்தால் மனிதன் வாழ்வை நினைக்கலாமா. உரிமையை இழந்தோம் உடமையை இழந்தோம் உணர்வை இழக்கலாமா? விடைகொடு எங்கள் நாடே பனைமரம் ... என்று இருபாடலையும் இணைத்து தமிழ் இதயங்களையும் இணைத்து உணர்வில் இசையில் நம்மைபிழிந்து எடுத்த ஜெசிக்கா அரங்கை ஒரு முறை உலுப்பியேவிட்டார்.
நடிகர் தனுஷ் ஒரு உண்மைச் சொன்னார். ஜெசிக்கா இந்தப்பாடல் மூலம் இந்தமேடையில் ஒரு பெரிய காரியத்தை செய்துள்ளாய் என்று.

ஈழத்தமிழன் எந்த இடத்தில் நின்றாலும் அவன் தன் அடையாளத்தை இழக்கமாட்டான். அத்துடன் கொடை உணர்வு அவனுடன் கூடப்பிறந்தது. தங்கத்தை தானமாகவே கொடுத்துவிட்டாள்.

சுப்பர் சிங்கர்- 4 நிகழ்ச்சியில் இறுதிப் போட்டியில் மூன்றாவது இடத்தைக் கரிபிரியா பெற்றுக் கொண்டார்.இவருக்கு 10 இலட்சம் ரூபா பெறுமதியான புத்தம் புதிய கார் அருண் எக்சல் நிறுவனத்தினரால் பரிசாக வழங்கப்பட்டது. ஏனைய முதல் மூன்று இடங்களுக்குள் இடம் பெறாத போட்டியாளர்களாக பரத்,திரிசா,அனுசா ஆகியோர் வெற்றியாளர்களாகத் தெரிவு செய்யப் பட்டனர். இவர்களுக்குத் தலா ஐந்து இலட்சம் ரூபா பரிசாக வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினர்களாக பிரபல திரைப்பட நடிகர்களான தனுஷ், சிவகார்த்திகேயன் ஆகியோர் கலந்து கொண்டு இறுதிப் போட்டியில் கலந்து கொண்ட இளம் பாடகர்களுக்குத் தமது வாழ்த்துத்துக்களைத் தெரிவித்துக் கொண்டனர்.
வென்றவர்களையும் வெற்றிக்காக முயன்றவர்களையும் வெற்றிமணி வாழ்த்தி மகிழ்கின்றது.






பொங்கல் அன்று
தவம் கோயிலுக்குப் போனபோது,
மனைவியின் கைப்பையை
சிறிது நேரம் வைத்திருக்க வேண்டிய
சூழ்நிலை ஏற்பட்டது.
அது அவரது தோள்ப்பட்டையில்
இருந்து ஊஞ்சலாட்டம் ஆடியது.

அந்தக் காட்சியை பல இளம் பெண்கள்
பார்த்து விட்டார்கள்.
“எங்களுக்கும் அவரைப் போல
மாப்பிள்ளை வேணும்” என்று தமது
பெற்றோரிடம் அன்புக் கட்டளை
இட்டார்கள் அவர்கள்.

# ஆண்மையின் முழுமை...

.....16ம் பக்கத் தொடர்ச்சி

காதலாகிக் கசிந்துருகி, இமைகளின் இடைவெளியில் இதயங்கள் பரப்பி, உதடுகளின் சமவெளியில் கூடாரமடித்துக் குடியிருந்ததுண்டா ? காதலியின் மூச்சுக் காற்றில் உயிரின் கடைசிப் பனிக்கட்டியும் உள்ளுக்குள் உடைந்து வழியும் அனுபவம் பெற்றதுண்டா ? மெல்லிய புன்னகையில் மலைகள் உடைந்து தெறிக்க, மெல்லிய முத்தத்தில் எரிகடல் அடங்கி பதுங்க மென்மையின் வலிமையை உணர்ந்ததுண்டா ? அவற்றை என்னவென்பது ? சுவர்க்கத்தின் விரிவாக்கம் என்றால் கூட சிறிதாகவே தெரிகிறதல்லவா ?
ஒரே கூரையில் உயிரைப் பரிமாறி, குழந்தை வளர்ப்பில் நேசம் பரிமாறி, உயிரை உங்களிடம் இடம் மாற்றிக் கொண்ட மனைவியின் பாசத்தை அருந்தியிருக்கிறீர்களா ? உங்கள் துயரத்தில் துடித்து, உங்கள் ஏக்கத்தில் கரைந்து, உங்கள் கனவுகளுக்காய் விழித்திருக்கும் உங்கள் மனைவியை உணர்ந்திருக்கிறீர்களா ? அவர்கள் துணைவியரல்ல, கூடுவிட்டுக் கூடுபாய்ந்த துறவியரல்லவா ?.
கடைசியாக, தன்னலத்தின் காற்புள்ளி அரைப்புள்ளி கூட இல்லாமல், இருமல் இடையிலும் உங்களை நலம் விசாரித்து, முதுமைச் சுருக்கத்தின் இடையிலும் “இளைச்சுட்டியா ?” என வருத்தப்பட்டு, உங்களைப் பார்ப்பதும் பேசுவதுமே தெய்வ தரிசனம் என உயிரை விரல்களில் ஊற்றி நீட்டும் அம்மாவின் கைபிடித்து அருகில் அமர்ந்திருக்கிறீர்களா ? காரணமே இல்லாமல் அவர்கள் மடிசாய்ந்து கசிந்திருக்கிறீர்களா ? அம்மா என்பது வெறும் உறவல்ல, உயிரின் தொடர்பல்லவா ?.

இப்படி பெண்மையின் ஒவ்வோர் படிக்கட்டிலும் அவர்களோடு பயணித்திருக்கிறீர்களா ? அப்படியெனில் இந்தக் கட்டுரையின் முதல் பத்தியை நீங்கள் ஒத்துக் கொள்வீர்கள்.

பெண் குழந்தைகள் பாலியல் வன்முறைக்கு ஆளாகிறார்கள் என புள்ளி விவரங்கள் துயரம் தெரிவிக்கும் போது, தோற்றுப் போகிறது ஆண்களின் கண்ணியம்.
இளம் பெண்கள் பாலியல் வன்முறைக்குள் தள்ளப்படும் போது தோற்றுப் போவது பெண்களல்ல, ஆண்களின் நேர்மை.
விவாகரத்துகள் வீதிகளுக்கு வந்து விசாரித்துச் செல்லும் போது படுதோல்வி அடைவது ஆண்களின் கம்பீரம்.

தாய்மார்கள் முதியோர் இல்லங்களின் முற்றங்களில் முகவரி தேடி முடங்கிக் கிடக்கும் போவது தோற்றுப் போவது மனிதம் மட்டுமல்ல, ஆண்களின் முழுமையும் !
ஆண் எனும் வேர்களும், பெண் எனும் மலர்களும் இணைந்த செடியே சமூகம். இதில் வேர்களே பூக்களைத் தின்பதென்பது துயரத்தின் உச்சம்.

விலங்குகளுக்குப் பயந்து வீடுகளுக்குள் அடைத்துக் கொள்ளலாம், வீடுகளே அச்சமூட்டுமெனில் கானகங்களுக்கா இடம் பெயர முடியும் ?.

பெண்கள் பூமியின் பிரமிப்புகள் அவர்களை நேசிப்பது ஆண்களின் கடமை. ஒவ்வொரு பெண்ணையும் ஆழமாய் நேசிக்கப் பழகினால் பெண்களைச் சுற்றியிருக்கும் அத்தனை கட்டுகளும் அவிழ்ந்து விடும். சட்டங்களின் பக்கங்கள் செய்ய முடியாததை அன்பின் செயல்கள் செய்து விடும். பெண்களின் பெண்மையைப் பாதுகாப்பதில் இருக்கிறது ஆண்களின் ஆண்மை !

பெண்ணாய் பிறந்ததற்காய் பெண்களும், பெண்களைப் பெற்றதற்காய் ஆண்களும் மகிழ்ச்சியடைந்து துள்ளிக் குதிக்கும் நாளில் இருக்கிறது வாழ்க்கையின் வெற்றி.
அந்தக் கனவுகள் நிஜமாகட்டும் !





திருமணம் சொர்க்கத்தில் நிச்சயிக்கப்படுகின்றது
விழா ஒழுங்கமைப்பு எம்மிடம் நிச்சயிக்கப்படுகின்றது!

KS Services

அழைப்பிதழ்கள் முதல் திருமணத்தில்
அன்பளிப்பு வழங்கும் வரை
மணவறை அலங்காரம் மங்கலவாத்தியம்
ஒளி ஒலி உணவு சிற்றுண்டி டீஜே (DJ)
என அனைத்தும் நம்வசம்

E-Mail. info@ksservices.de
Web. www.ksservices.de



வாகன ஒழுங்கு தங்குமிட வசதி.
ஐரோப்பா தழுவியசேவை.
இன்னும் பல சேவைகள்

Tel. 0049 21025300247 Mobil. 004917610247194 / Mobil. 00491722192035

KS Services
Berliner Str. 49- 40880 Ratingen



குஷ்பூ



பூஜா





நமீதா

# குஷ்பூ சோனியா தெய்வீக உறவு!

முதல் முதல் நாம் அறிந்த பெரும் கோவில் குஷ்புக்கு (திருச்சிராப்பள்ளியில்) கட்டப்பட்டது. நமீதாவிற்கு திருநெல்வேலியிலும் பூஜாவிற்கு இலங்கையிலும் அதன் பின் மக்கள் திலகத்திற்கும் ஒரு கோவில் நாதமேடு திருனிண்டாவூர்)கட்டப்பட்தாக அறிந்தோம். மனிதன் என்பவன் தெய்வ மாகலாம் வாரி வாரி வழங்கம்போது வள்ளல் ஆகலாம். சரி மக்கள் திலகத்தை விடுங்கள். வாரி வாரி விட்டவர்கள் எல்லாம் தெய்வம் ஆகிவிடுகின்றார்கள் பாருங்கள். 500 கி.லோ எடைஉடைய பித்தளைச் சிலை.9 அடி உயரமானது.

எம்பெருமாள் சோனியாக்கடவுளின் சிலை இது. இது கடந்த 2009 ஆண்டு சோனியவின் பிறந்த நாள் அன்று ஆந்திரா பிரதேசத்தில் அமைக்கப்பட்டு திறக்கப்பட்டது. இச்சிலையை வடித்தவர் தேசிஅளவில் பரிசில்களை வென்றவர். தனக்கு கோவில் அமைந்துள்ளது என்ற விபரம் சோனியா தெய்வத்திற்கும் தெரியும் என்பது அதிசயமான செய்தியாகும். குஷ்பு இன்று சோனியா தெய்வத்துடன் இணைந்துள்ளது அவர்களது தெய்வீக உறவைக் காட்டுகின்றது.

பி.குறிப்பு ரஜினிக்கம் கோவில் உண்டு (Kolar district, Karnataka)

# ஒழுக்கம்!...

**வ.சிவராஜா**

இன்று உலகில் நாகரீகம் பண்பாடு, தொழில்நுட்பம், அறிவியல், கணனித்தொழில்நுட்பம் எனப்பல துறைகளும் பல மடங்கு வளர்ந்துவிட்டதை நாம் அறிவோம். மனிதனில் தேடல், ஆர்வம், முயற்சி, சுகவாழ்வு அதிகரித்து அதிக ஆசைகளின் மேலீட்டால் இவை யாவும் வளர்ச்சி பெற்றுவருகின்றன.. இன்றைய விஞ்ஞான அறிவியல் கணனி உலகில் மனிதவாழ்வோ மிக வேகமாக ஓடிக்கொண்டிருக்கின்றது. பணம் பொருள் ஒன்றே குறிக்கோளாக மாற்றமடைந்துள்ளது. இன்றைய உலகமயமாக்கலில் படித்தவர் படியாதவர் என்ற வேறுபாடில்லாமல் எல்லோரும் சேர்ந்தே பயணிக்கவேண்டிய சூழலில் நாம் வாழ்கிறோம். இதன் அடிப்படையில் இன்றைய வாழ்வியல் முறைகளில் நம் குடும்பத்தில் நாம் வாழும் சமூகத்தில் ஏன் நாட்டில் ஒழுக்கம் குன்றிவருவதையே நாம் காண்கிறோம். சுயநலமும் பணம் பண்ணுதலும் போலி வாழ்க்கை முறைகளும் இன்று உலகில் பரவியுள்ளதால் நமது பண்பாடு, ஒழுக்கம் எல்லாம் சீர்குலைந்து வருவதையே நாம் அன்றாடம் காண்கிறோம்.

இன்றைய உலகில் பொய் பேசுதல், கெட்டவார்த்தைகளைப் பேசுதல், வேண்டாத காரியங்களில் ஈடுபடுதல், தவறான உறவுகள், தவறான தொடர்புகள் இவை எல்லாம் சர்வ சாதாரணமாகவே நமது வாழ்வுடன் கலந்துவிட்டன என்றே கூறவேண்டும். பெற்றோர் பிள்ளைகள், ஆசிரியர் மாணவர், நட்புக்கள் - உறவுகள், மக்கள் - அரசியல்வாதிகள், தொழிலாளி முதலாளி, குரு சிஷ்யன் என எங்கு பார்த்தாலும் ஒழுக்கம் குன்றிய நிலையே காணப்படுகின்றன. இதன் அடிப்படைக் காரணம் என்னவென்று பார்த்தால் ஒழுக்கம் தவறிவிட்டதாலேயே என்பது உண்மையான விடையமாகும். இதிலிருந்து அநேகமானோர் தடம்புரண்டு தவறி வாழ்வதால் இன்று ஒழுக்க வாழ்வு என்பது கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது. இதனால்: இன்று ஒழுக்கமில்லாத வாழ்வு பெருகியுள்ளது என்றே கூறவேண்டும்.

இவற்றைவிட இன்று உலகின் பல நாடுகளில் போர், உள்நாட்டுப்போர், அணுஆயுதப்போட்டிகள், பாவனைகள், மற்றும் இயற்கை அழிவுகள், பயங்கரவாத நடவடிக்கைகள் போன்ற காரணங்களாலும் மனித ஒழுக்கம் கட்டுப்பாடுகள் அழிந்துவருவதை நாம் காண்கின்றோம். நம்மவர் வாழ்வியலிலும் தாயகத்தின் போர்ச்சூழல், நாகரீகமாற்றம், கட்டுப்பாடற்ற வாழ்க்கை முறை, கணனி, தொலைபேசிகளின் அதீத பாவனை போன்ற வாழ்வு முறைகளாலும் ஒழுக்கம் கெட்டு சமூகச் சீரழிவுகள் இடம்பெற்றுவருவதை அன்றாடம் நாம் காண்கின்றோம். புலம்பெயர் நாடுகளிலும் நம்மவர்கள் பலர் சமூக ஒழுக்கக் கட்டுப்பாடுகளை மீறி, நவநாகரீகத்திற்கு அடிமையாகி ஒழுக்கம் கெட்ட வாழ்வுக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். மேலும் சின்னத்திரை, சினிமா, சிலவானொலி, தொலைக்காட்சி ஊடகங்களும் இந்த நாடுகளின் கடுமையான சட்டதிட்டங்கள் இன்மையாலும் நம் சமூகத்தில் பலர் ஒழுக்கம் கெட்டுவருவதை நாம் அன்றாடம் காண்கிறோம்.

ஆகவே ஒழுக்கம் என்பது உயிரிலும் மேலானது என்று நம் சமூகம் காலதிகாலம் கடைப்பிடித்துவரும் அரிய விடையமாகும்.இதனையே வள்ளுவப் பெருந்தகையும் இப்படிச் சொல்லியுள்ளார் என்பதை சிறிது சிந்திப்போம்!



Video & Foto
E-mail : kajas.makeup@hotmail.de
facebook : KSR Bridal Artist
KSR BRidal
Tel:02323 39 88 470

KSR BRIDAL ARTIST

தங்கத்தில் வைரம் பதித்ததுபோல் உங்கள் அழகுக்கு
அழகூட்ட எம்மை நாடுங்கள்.மணப்பெண் அலங்காரம்.
மாலைகள் மற்றும் பூச்செண்டுகள்
அனைத்தும் ஓர் இடத்தில்.

Make up......
Bridal, wedding, puperty, party
Christian Make up......
Threading Eye brow Face.....
Facial..........
hair style
hair straightening
hair curls

contact : 015236649870





# வெளிநாட்டினருக்கு இனி வாடகைத்தாய் கிடையாது: தாய்லாந்து அரசு திடீர் தடை

## கருத்தரிப்பு சுற்றுலா"





கருத்தரிப்பு சுற்றுலா' செல்பவர்களுக்கு மிகப் பிடித்தமான நாடு தாய்லாந்து. காரணம் அந்நாட்டு மக்களின் மீதான அரசின் அக்கறை. வளர்ந்த நாடுகளில் குழந்தையில்லாத தம்பதிகளுக்கு வாடகைத் தாய் முறையில் குழந்தை பெற்றுக் கொடுப்பவர்கள் மிகவும் குறைவு. அரிதாக ஒரு சில பெண்கள் கிடைத்தாலும் அதற்கும் ஏகப்பட்ட சட்ட விதிமுறைகள் அங்கு உண்டு. காரணம் ஒரு குழந்தையை பிரசவிப்பதென்பது ஒரு பெண்ணுக்கு உடலியல் மற்றும் உளவியல் ரீதியாக பல பாதிப்பை உண்டாக்கும்.

ஆனால், தாய்லாந்து போன்ற வளரும் நாடுகளில் இதுபோன்ற எந்த சட்ட திட்டமும் இல்லை. இதனாலே உலகம் முழுவதிலும் உள்ள பல தம்பதிகள் அங்கு வந்து தாய்லாந்து வாடகைத்தாய்கள் மூலம் குழந்தைப்பேறு பெறுகின்றனர். இந்த செய்கைக்கு நாகரீகமான பெயர்தான் "கருத்தரிப்பு சுற்றுலா".

ஆஸ்திரேலியாவிலிருந்து வாடகைத்தாய் மூலம் குழந்தை பெற ஒரு பெண் தாய்லாந்து வருகிறார். ஆஸ்திரேலியப் பெண்ணின் கருவை சுமந்த தாய்லாந்து பெண்ணுக்கு பிரசவம் நடக்கிறது. பிறந்த குழந்தை வளர்ச்சிக் குறைபாட்டால் பாதிக்கப்படுகிறது. குழந்தையை அந்த தாய்லாந்து பெண்ணிடமே விட்டுவிட்டு அந்தப் பெண் ஆஸ்திரேலியாவுக்கு ஓடிவிட்டார்.

இதைவிட, ஜப்பானிலிருந்து வந்த ஒரு சுற்றுலாப் பயணி தாய்லாந்து பெண்கள் மூலமாக அதிவேகமாக 16 குழந்தைகளுக்கு தந்தையானார். இந்த சம்பவத்தை 'குழந்தைகள் தொழிற்சாலை' என்று தாய்லாந்து தினசரி ஒன்று கடுமையாக விமர்சித்தது.

கடந்த வருடம் நடந்த இந்த இரண்டு சம்பவங்களும் வாடகைத்தாய் முறையால் தாய்லாந்து பெண்கள் அனுபவித்த கொடுமையை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்தது.

இந்நிலையில் கடந்த ஆகஸ்ட் மாதம் வணிக ரீதியாக வாடகைத் தாய் முறை குற்றம் என்ற வரைவு சட்டத்திற்கு முதற்கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டது. இது நேற்று முதல் சட்டமாக அமல்படுத்தப்பட்டது. மேலும் வாடகைத்தாய்களுக்கு 25 வயதுக்கு மேல் இருக்க வேண்டும் என்றும் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டம் வெளிநாட்டிலிருந்து வந்து வாடகைத்தாய் மூலம் குழந்தை பெறுவதை முற்றிலுமாக தடை செய்கிறது. இனி வெளிநாட்டினருக்கு தேவையான வாடகைத்தாய்கள் தாய்லாந்தில் கிடைக்கமாட்டார்கள்.










# உங்கள் மகிழ்விலும் பிறரை வாழவைக்கலாம்!







காதலர்தினம் தமிழர்வாழ்வில் உண்டா? இல்லையா? என்ற விவாதங்களுக்கு அப்பால் காதலர்தினம் கொண்டாட்டங்கள் உலகெங்கும் தமிழர்கள் குறிப்பாக இளையசமூதாயத்தினர் கொண்டாடியே வருகின்றனர்.

கால ஓட்டத்தில் நமது காலச்சாரத்தில் பல புதிய சங்கதிகள் வந்து ஒட்டுவதுபோன்றே இந்தக் கொண்டாட்டங்களும். அன்று நாங்கள் சிறுவர்களாக இருக்கும்போது பிறந்தநாள் கொண்டாடினோம். கோவிலுக்கு போவதும், பாடசாலையில் இனிப்பு வழங்குவதும். இப்போ பிறந்தநாள் வயதுக்கு ஏற்ப விதம் விதமாக நடைபெறுகின்றது. அதனையும் நாம் ஏற்று வாழப்பழகிக்கொண்டோம்.
பிள்ளைகளின் மகிழ்ச்சியே பெற்றவர்களது மகிழ்சி என்றாகிவிட்டது நமது வாழ்வு. இதனை நாம் என்றும் குறைவாக எண்ணவில்லை. மனநிறைவுடனே ஏற்கின்றோம்.
புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாளும் நாம். எமது பிள்ளைகளை, இச்சூழலில் வளரவிட்டு, நமது தாயகச் சூழலில்தான் பூக்களையும் கனிகளையும் நீங்கள் தரவேண்டும் என்று முழுமையாக எதிர்பார்க்கவும் முடியாது. அத்தோடு நமது தாயகத்தில் உள்ள எமது வாழ்வின் அன்றைய -அழவுகோல்- அதனையே இன்றும் நாம் வைத்திருக்கின்றோம். காலத்துக்கு காலம் எது மாறினாலும் நமது பழைய அந்த அளவுகோலை விடுவதாக நாம் இல்லை. சிலவற்றை விட்டுத்தான் பிடிக்க வேண்டும். கணனிக்கு மட்டுமல்ல நமது வாழ்விலும் நாம் சில Update செய்யத்தான் வேண்டும்.

வலன்ரைன் டேயும் அப்படித்தான். அங்கு தாயகத்தில் காலை எழுந்ததுமே (பெப்ரவரி 14) கைத்தொலைபேசியில் அடித்த முதல் செய்தி இந்த காதலர்தின வாழ்த்துதான். இளையவர்கள் இன்பமாக அங்கு இருக்கிறார்கள். நாம் இங்கு 'அங்கு அந்தக்காலத்தில் நாம் எல்லாம் அப்படி இல்லை" என்று தொடங்கிவிடுவோம்.

நமது மகிழ்விலும் பிறரை மகிழ்விக்க முடியும். எமது கொண்டாட்டங்ளை நாமும் மகிழ்ந்து பிறரையும் மகிழ்விக்கும் வண்ணம் வடிவமைக்கமுடியும். நமது இளம் சந்ததியினரது பிறப்பும் கிடைப்பதற்கரிய பிறப்பே! எனவே தமது மகிழ்வை சிறைவைத்து பிறரை மகிழ்விக்கவேண்டும் என்று கட்டாயம் இல்லை. அப்படி எவரும் கட்டாயப்படுத்துவதும் சரி அல்லவே!

அண்மையில் லண்டனின் நடைபெற்ற வலன்டைஸ் டே நிகழ்வு ஒன்று (Dinner and Dance) சிறப்பாக, மகிழ்வாக நடைபெற்றது. இளையவர்கள் மகிழ்சியாக ஆடிப்பாடி இரவு உணவு உண்டு மகிழ்சியாக தங்கள் காதலர் தினத்தைக் கொண்டாடினார்கள். அப்படிக்கொண்டாடும் போதும் தாயகத்தில் உள்ள நமது மக்களை அவர்கள் எண்ண மறக்கவில்லை. தங்கள் மகிழ்சியில் கிடைத்ததை அவர்களுக்கும் பகிர்ந்து அளித்து மகிழ்ந்துள்ளனர் தாமும் மகிழ்ந்து பிறரையும் மகிழ்விக்கும் கொண்டாட்டங்கள் புதியகலாச்சாரத்தின் சாரல்கள் ஆக இருந்தாலும். எல்லைமீறாத பண்பாட்டு கோட்டுக்குள் நிற்கும் வரை அவையும் பாராட்டப்பட வேண்டியவையே.

இந்நிகழ்சியை கிடைத்த பணத்தில் ஒரு பகுதியை தாயக மக்களுக்காக சிவன் அருள் இல்லம் ஊடக வழங்கினர். தங்களது மகிழ்வான தரணத்திலும் தாயகத்தை மறவாத Sparkle Events சேர்ந்த வைதேகி அகிலன்,சிவஜெனனி அரவிந்தன் மற்றும் நிமால் தர்மரட்ணம் (DJ Nimal) அவர்களையும் பாராட்டுகின்றோம். நாமும் மகிழ்வோம் பிறரையும் மகிழ்விப்போம். வாழ்க இளைய தலைமுறை!



## கதை சொல்ல ஓர் கதை...



மீரா. குகன்

## சிறுவர் அரங்கம்



### சுதந்திர வாழ்வே சிறப்பு

ரோஜா நாட்டை ஓர் ராஜாவும் ராணியும் ஆண்டு வந்தனர். அது ஒரு அழகிய நாடு. அந்த நாட்டிலே பல வகையான ரோஜா பூக்கள் பூத்திருந்தன. சிவப்பு நிற ரோஜா பூக்கள்இ வெள்ளை நிற ரோஜா பூக்கள்இ மஞ்சள் நிற ரோஜா பூக்கள்இ இளஞ்சிவப்பு நிற ரோஜா பூக்கள்இ நீல நிற ரோஜா பூக்கள் என பல வகையான ரோஜா பூக்கள் இருந்தன.

ரோஜா நாட்டின் ராஜாவுக்கும் ராணிக்கும் நீண்ட காலத்துக்கு பின் ஒரு அழகான பெண் குழந்தை ஒன்று பிறந்தது. நாட்டு மக்கள் எல்லாரும் மிகவும் மகிழ்ச்சி கொண்டனர். ராஜாவும் ராணியும் குழந்தைக்கு ரோஷி என்று பெயரிட்டனர்.

இளவரசி ரோஷி சீரும் சிறப்புமாக வளர்ந்து வந்தாள். அவளுக்கு வித விதமான உடைகள் பல நிறங்களிலும் இருந்தன. அவள் விளையாடுவதற்கு எல்லா விளையாட்டு பொருட்களையும் ராஜாவும் ராணியும் வாங்கிக் கொடுத்தார்கள்.

ரோஷி ஆசைப்பட்டதெல்லாம் ராஜவும் ராணியும் கொடுத்து வந்ததால் ரோஷிக்கு தான் எது கேட்டாலும் இடைக்கும் என்று எண்ணியிருந்தாள்.

ரோஷிக்கு பறவைகளில் மிகவும் விருப்பம். ராஜா பல பறவைகளை பல கூண்டுகளில் அடைத்து பரிசாக கொடுத்திருந்தார். கிளிஇ குயில், மயில், புறா, காக்கை என பல வகை பறவைகள் ரோஷியிடம் இருந்தன.

ஒரு நாள் ரோஷி தனது பூந்தோட்டத்தில் பூக்கள் பறித்து கொண்டிருக்கும் வேளையில் ஒரு பறவையை கண்டாள். அப் பறவை மிக அழகாக இருந்தது. பல வர்ணங்களில் காணப்பட்டது. ரோஷிக்கு அப் பறவையை எப்படியும் பிடித்து கூண்டில் அடைத்து மற்ற பறவைகளுடன் வைத்து அழகு பார்க்க ஆசைப்பட்டாள். எட்டி அப்பறவையை பிடிக்க முற்பட்டாள்.
அப்பறவையோ உயர பறந்து மரத்தில் அமர்ந்தது. ரோஷியும் விடாது எப்படியும் பிடிக்க முயற்சித்தாள். இவ்வாறு பறவையின் பின் துரத்துகையில் ஒரு பதுங்கு குழியில் விழுந்து விட்டாள். "ஐய்யோஇ என்னை யாராவது காப்பாத்துங்கள்" என்று உரக்க கூக்கிரலிட்டாள். ஒருவருக்கும் இவளது கூக்கிரல் கேட்கவில்லை. ரோஷி இப்பொழுது என்ன செய்வது என்று தெரியாது அழத் தொடங்கினாள்.

"நான் காப்பாற்றுகிறேன். ஆனால் எனக்கு ஒரு உறுதி மொழி ஒன்று தரவேண்டும்" என்று ஒரு கீச்சிடும் குரல் கேட்டது. ரோஷி சுற்றும் முற்றும் பார்த்தாள். அந்த அழகான பறவையை தவிர ஒருவரையும் காண முடியவில்லை.
ரோஷி அப்பறவையிடம் "நீயா பேசியது ?" என்று வினவினாள். அப் பறவையும் "ஆமாம் நான் ஒரு அதிசய பறவை. நான் உன்னை காப்பாற்றுகிறேன். ஆனால் என்னை பிடித்து கூண்டில் அடைக்க கூடாது. ரோஷியோ அப்பறவையிடம் „ஏன் என்னிடமுள்ள பறவைக்கெல்லாம் நான் நல்ல தீனி போடுகிறேன். அவைகளை நன்றாக கவனிக்கிறேன். ஏன் உனக்கு என்னிடம் இருக்க விருப்பம் இல்லை, என்று திருப்பிக் கேட்டாள்?

அப்பறவையோ நான் சுதந்திரமாக பறந்து திரிவதை போன்ற சந்தோஷத்திற்கு ஈடு இணை எதுவும் இல்லை. எனக்கு எதைத் தந்தாலும் என் சுதந்திரத்தை மட்டும் நான் இழக்க ஒரு போதும் சம்மதிக்க மாட்டேன் என்று கூறியது.
இளவரசி ரோஷியும் அதற்கு சம்மதித்தாள். அப் பறவை உடனே ஒரு நீண்ட கயிறொன்றை வாயில் கவ்வி பிடித்தபடி அடுத்த நுனியை பதுங்கு குழியினில் விழுத்தியது. பின்னர் ரோஷியை அக் கயிறை பிடித்தபடி மெல்ல ஏறி வரும்படி பணித்தது. ரோஷியும் அக் கயிற்றின் உதவியுடன் வெளியே வந்தாள்.
ரோஷி அப்பறவையிடம் நன்றி தெரிவித்தாள். அப் பறவையோ சந்தோஷமாக பறந்து சென்றது.
அன்றுடன் இளவரசி ரோஷி தன்னிடமிருந்த பறவைகள் எல்லாவற்றையும் சுதந்திரமாக பறக்கவிட்டாள்.
தன்னிடமிருந்த சுய பெருமிதத்தையும் விட்டு எல்லோரும் போற்ற வாழ்ந்தாள்


ஆதிவாசி லீடர் கனக துர்க்கா பூஜாரி
பண்டித் லட்சுமன் ராஜ்
கருமாரி அம்மன் துணை
முகத்தைப் பார்த்து உங்கள் எதிர்காலத்தை கணிப்பார்
அத்தோடு கை ரேகையும் பார்க்கப்படும்
FACE READING
வியாபாரங்கள் - எதிரிகள் - உடல்நிலை - வேலை - குழந்தையின்மை
திருமணம் - பணம் - குடிபோதை - காதல் - விவாகரத்து
வழக்குகள் - கண்திருஷ்டி - குடும்ப ஒற்றுமை - படிப்பு
வாகனப் பொருத்தம் - மற்றும் பல... பிரச்சனைகளுக்கு தீர்வு காணலாம்
மந்திரம், தந்திரம், காத்துக்கறுப்பு, பிடைபிசாசு என்ன இருந்தாலும் நிவாரணம் செய்து கொடுக்கப்படும்
பேசும் மொழிகள்: தமிழ்
வாரத்தில் 7 நாட்களும் 10:00 முதல் 20:00 மணி வரை சந்திக்கலாம்
private & confidential
Adlerstr. 30, 44137 Dortmund - Germany
0152-12016356 // 0152-13946833





ஸ்ரீ கனகதுர்க்கா அம்பாள் ஆலயம்
துர்க்கா பூஜா துரந்தரர்
சிவசாமிக்குருக்கள்
ஜெயந்திநாதக்குருக்கள்
Tel: 02304/ 16721
Tel: 02304- 910 9445
0177 20 16 941
தினசரி மாலை
6.00 மணிக்குப்
பூஜை உண்டு
Robert koch Str.5
58239 Schwerte



HK Hammacher
வாகனச் சாரதி பயிற்சி நிலையம்
உங்கள் தாய் மொழியில்....
ஆங்கிலம், யேர்மன், பிரஞ், துருக்கி
மொழிகளில் வகுப்புக்கள் உண்டு.
பரீட்சைக்கு வரக்கூடிய வினாக்கள்
கார் மற்றும் மோட்டோசைக்கிளிற்கும்
சிறப்பாகத் தெரிவுசெய்துகற்பிக்கப்படும்.
தமிழில் தொடர்புகளுக்கு: 0172 57 35 454
HK Hammacher
Schleswiger Str .5
44145 Dortmund
0231 81 55 94
0173 56 46 651
MPU
ASF
ASP
இவர்களுக்கான சிறப்பு வகுப்புக்களும் உண்டு!












## கனடா “தமிழர் தகவல்“ 24வது ஆண்டு விருது விழா

கனடாவிலிருந்து 1991 முதல் வெளிவரும் 'தமிழர் தகவல்' சஞ்சிகையின் 24வது ஆண்டு மலர் 'இளங்கதிர்ச் சுவடு' வெளியீடும் விருதுகள் வழங்கும் விழாவும் பெப்ரவரி மாதம் 22ம் திகதி ரொறன்ரோ நகரசபை அங்கத்தவர் சபா பீடத்தில் நடைபெற்றது.

முதல் அமர்வுக்கு சட்டவாளர் மனுவல் ஜேசுதாசன் தலைமை தாங்கினார். இளங்கதிர்ச் சுவடு மலரை கவிஞர் பொன்னையா விவேகானந்தன் வெளியிட்டு வைத்து உரை நிகழ்த்தினார். அண்மையில் அமரத்துவமடைந்த அதிபர் பொ.கனகசபாபதி அவர்களுக்கு அர்ப்பிதம் செய்யப்பட்ட மலரின் முதல் பிரதி, அதிபரின் புதல்விகளான மணிமொழி, மணிவிழி ஆகியோரிடம் மேடையில் கையளிக்கப்பட்டது.

விருது வழங்கும் விழாவுக்கு நீதன் சண்முகராஜா தலைமை தாங்கினார். பிரதம விருந்தினராக சூழல் சுற்றாடல் அமைச்சர் கிளென் மறேயும், சிறப்பு விருந்தினராக ரொறன்ரோ உதவி மேயர் பாம் மக்கொனாலும் பங்குபற்றி உரையாற்றியதோடு இவ்வருட விருதுகளையும் வழங்கிச் சிறப்பித்தார்கள்.

24வது ஆண்டு வைபவத்தில் விருதுகள் பெற்றோர் விபரம்: கதிர் துரைசிங்கம் (பன்முக சமூகப் பணி), செந்தில்செல்வி சுரேʻவரன் (நடனக்கலை), 'உதயணன்' இ. சிவலிங்கம் (இலக்கியப் பணி), பிலோமினா கிருஷ்ணபிள்ளை (ஒப்பனைக் கலை), லெனின் எம். சிவம் (தமிழர் திரைத்துறைச் சாதனை), தாமோதரம்பிள்ளை யோகநாதன் (தொழிற்துறைச் சாதனை முன்னோடி), சந்திரன் இராசலிங்கம் (தொழிற்துறைச் சாதனை முன்னோடி), நதிஷா ஜெயகாந்தன் (கல்விச் சாதனை மாணவி). இவ்வருட வாழ்நாள் சாதனையாளர் விருது கலிபோர்னியாவில் வசிக்கும் மூத்த விஞ்ஞானியும் சூழல் சுற்றாடல் முன்னோடியுமான கலாநிதி முத்துலிங்கம் சஞ்சயனுக்கு வழங்கப்பட்டது.



யேர்மனியில்....
பவள விழா
பேராசிரியர் அ. சண்முகதாஸ் அகவை 75 சிறப்பு விழா



நாள்: 29.03.2015 ஞாயிற்றுக்கிழமை
நேரம்: 15.30
இடம்:
'Gemeindehaus"
Evangelische Kirchengemeinde Ergste
Evangelische Kirche
Auf dem Hilf 6, 58239 Schwerte/Germany

முனைவர் ச. மனோன்மணி
தமிழில் மொழிபெயர்த்த
ஜப்பானிய காதற் பாடல்கள்
பேராசிரியர் அ. சண்முகதாஸ் "75 ஆவது அகவைப்பரிசு நூல் அறிமுகம்"

அன்புடன் தங்களை அழைக்கிறோம்.
தங்கள் வரவை நாடும்,
வெற்றிமணி

சஞ்ஜே சிவா இசையில்
தமிழகத்தில் உருவான திரைப்படம்
என்னவளும் சீதையே
சிறப்புக்காட்சி [45 நிமிடங்கள்]
இயக்கம் : சம்பத்குமார் – பாடல்கள்: சேவியர்
தயாரிப்பு : வெற்றிமணி–T.B.B
என்னவளும் சீதையே



VTM MiniMarkt und Kiosk
துரித பணமாற்றுச் சேவை!
Ria MONEY TRANSFER



இலங்கை, இந்தியா உட்பட உலகின் எந்தப்பாகளுக்கும்
அதிகூடியவீதத்தில் பணப்பரிமாற்றம் செய்ய இன்றே நாடுங்கள்
NSB,BOC,HNB போன்ற வங்கிகளில்
நேரடியாகவும் மற்றும் அனைத்து
வங்கிக்கணக்குகளுக்கும் பணமாற்றம் செய்யலாம்.

மாபெரும் மலிவு விற்பனை!
உலருணவுப் பொருட்கள்
கடலுணவுப்பொருட்கள்
உடன் மரக்கறி வகைகள்



Neudorferstr 173
47057 Duisburg
inh:Pon.Vijayakumar
Tel 0203/98418781
E.mail :- vtm2012@hotmail.de











யேர்மனியில் எசன் நகரில் 22.02.2015 இடம் பெற்ற "மிருதங்கக் கலாஜோதி" நகுஷாந்த் நயினை விஜயன் அவர்களின் "மிருதங்க கையேடு" வெளியீட்டுவிழா!

மிருதங்க வித்துவான், சங்கீதரத்தினம் ச.பிரணவநாதன் அவர்களின் மாணவனும், எசன் நுண்கலைக்கல்லூரி மிருதங்க ஆசிரியருமான மிருதங்கக் கலாயோதி,நகுஷாந்த் நயினைவிஜயன் எழுதிய, மிருதங்கக் கையேடு நூல்வெளீயீடு,22.2.2015 அன்று எசன் நகரில் சிறப்பாக நடைபெற்றது. பிரதம விருந்தினராக சுவெற்றா ஆலயகுரு.ஜெயந்திநாத சர்மா அவர்களும்,சிறப்பு விருந்தினர்களாக,நாதஸ்வரவித்துவான் என். கே.பாலமுரளி,, தவில்.வித்துவான் மற்றும் கே.பி.செல்வநாயகமும் கலந்துகொண்டு வெளியிட்டுவைத்தனர்.மண்டபம் நிறைந்த மக்கள் மத்தியில் இடம்பெற்று இவ்விழாவில் லண்டன் பரீட்சை சான்றிதழ்களை மிருதங்க ஆசிரியர்,மிருதங்க வித்துவான் அனுஷாந் நயினை விஜயன் வழங்கினார். கலைநிகழ்வுகளுடனும், செல்வன்.டிவாகரின் சங்கீதக் கச்சேரியுடனும் விழா இனிது நடந்தேறியது.வெற்றிமணிஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்,சங்கீத ஆசிரியைகள் திருமதி.விஜயலட்சுமி போஜராஜசர்மா, திருமதி. ஞானாம்பாள் விஜயகுமார், நந்தினி ராஜபாலா,எசன் தமிழாலய நிர்வாகி.திரு.நவரட்ணம்,லிவகுசன் தமிழன்பர் திரு. அசோகன் இன்னும் பலரும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்டனர்.தமிழருவி ஆசிரியர் நயினைவிஜயன் நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார்.


திருக்கணித ஜோதிடம்

ஜாதகக் குறிப்பு எழுதுதல்
விவாகப் பொருத்த நிச்சயம்
சுபமுகூர்த்தம் வைத்தல்
ஜோதிட ஆலோசனைகள்
திருமணம்
பூப்புனித நீராட்டு விழா
புண்ணியாகவாசனம்
சிரார்த்தம்
கடைத்திறப்பு விழா
கோயிற்கிரியைகள்
கிரகசாந்தி




சிவஸ்ரீ க.சபாநாதகுருக்கள்
Kreuzeskirchstr. 40
45127 Essen
Tel: 0201-652450

வவுனியாவில் காணி விற்பனை!

80 Acres of Private Land for Sale

வவுனியாவில் காணி விற்பனைக்கு உண்டு!
தாயகத்தில் வவுனியாவில் தமிழ் பகுதியில் 60 ஏக்கர் வயல் தோட்டம் செய்யக்கூடிய, நீர் வளமுள்ள குடி இருக்கக்கூடியதுமான காணி விற்பனைக்கு உண்டு.

Only Genuine Buyers call.Preferable Charitable organization Tel: 0044 79 32 45 64 64
K.Ramanathan

Kaneen electronics
15 வது ஆண்டில்..
ATHAVAN TV
ஆதவன் தொலைக் காட்சியின் யோர்மனி முகவர்
ஆதவன் தொலைக்காட்சியில் உங்கள் விளம்பரங்கள் இடம்பெறவேண்டுமா! மற்றும் உங்கள் கலைநிகழ்ச்சிகள் பெருவிழாக்கள் திருவிழாக்கள் ஆதவனில் ஒளிபரப்பவேண்டுமா! எம்மை நாடுங்கள். எமது துல்லியமான ஒளிப்பதி, ஒலிப்பதி உங்கள் நிகழ்ச்சிகளை மெருகூட்டும்.

500 இருக்கைகள் கொண்ட Wuppertal மண்டபம் வாடகைக்கு பெறுவதற்கும் வீடியோ போட்டோ எடுப்பதற்கும் எம்மை நாடுங்கள்

Tel: 02053 423 740 Fax: 2053 423 741
Schevenhoferweg-24
42111 Wuppertal
Mobil: 0172 2931266- info@ kaneenelectronics.de
www.kaneenelectronics.de

Mathan
Finanz Coach & Finanz-Adviser
காப்புறுதிகளிலும் கடன் எடுப்பதிலும் காசை எப்படி மீதப்படுத்தலாம்!
வீட்டுக்கான கடன் வட்டி 1.75வீதம் முதல்
(10 வருடங்களுக்கு நிலையானது)
தனிப்பட்ட கடன்களுக்கான வட்டி 3.45 %
காப்புறுதிகள் 20 வீதம் மீதப்படுத்தலாம்
வீடு வாங்கும் போது பிள்ளைகளுக்கான விஷேட சலுகைகள் !
mit staatlicher Förderung
z.B. Familie mit 2 Kindern
908 € pro Jahr
Zuschuss für die Immobilie.
Auch ohne Eigenkapital möglich.
finanzcoachffm@gmail.com



069 9586 4440 Mobil: 0174 / 3112258



# காதலுக்கும் காமத்திற்கும் இடையில் மெல்லியதாக ஒரு கோடு!

காதலை சின்ன சின்ன சண்டைகள் தான் வளர்க்கும் என கவிஞர்.நா. முத்துகுமார் அவர்கள் எழுதினார். ஆனால், இப்போது உள்ளவர்கள் அந்த சின்ன சின்ன சண்டையை தான் காதல் முறிவுக்கு காரணம் காட்டுகின்றனர். ஏனெனில், இவர்கள் காதலிக்கவில்லை காதல் என்ற பெயரில் சுற்றித் திரிகின்றனர். முன்பெல்லாம் இப்படி கிடையாது. காதல் ஒரு ஓவியமாக வார்க்கப்பட்டு, காவியமாக பாவிக்கப்பட்ட காலங்கள் அது. வருடக்கணக்கில் காத்திருந்து, கோபத்தினால் பிரிந்திருந்து பின் கைகோர்த்த ஜோடிகள் எல்லாம் இருந்திருகின்றனர்.

காதலுக்காக மரியாதையும், கோட்டைகளும் கட்டிய நமது ஊரில், இன்று வெறும் மன்மத கூட்டங்கள் மட்டுமே உலா வருகின்றனர். எது காதல், எது காமம் என்ற வேறுபாடு தெரியாமல் மேற்கத்திய கலாச்சாரம் என்ற பெயரில் கண்டதை செய்து திரிகின்றது இன்றைய சமூகம். மெலியதாக ஒரு கோடு! கோட்டுக்கு இந்த பக்கம் இருந்தீங்கள் என்றா காதல், அந்த பக்கம் போனீங்கள் என்றா காமம், தெரிந்துக் கொள்ள தொடர்ந்து படியுங்கள்...

**ஒளிவுமறைவு இன்றி**

காதலில், உங்களை பற்றிய விஷயங்கள் மற்றும் கடந்த கால நினைவுகள் என எதையும் உங்களது காதல் துணையிடம் மறைக்க விரும்பமாட்டீர்கள். பயமும் இருக்காது. காமத்தில், தயக்கம் இருக்கும். உங்களைப் பற்றி பேசும் போதும், உங்கள் காதல் துணையைப் பற்றி பேசும் போதும் தயக்கமும் பயமும் இருக்கும். உங்களை பற்றிய கடந்த கால நினைவுகள் வார்த்தை தவறி கூட வெளிவந்துவிட கூடாது என்கிற அச்சம் உரையாடல் தொடங்கியதில் இருந்து முடியும் வரை இருந்துக் கொண்டே இருக்கும்.

**வாக்குவாதம்**

காதலில், வாக்குவாதம் ஏற்படும் போது தயக்கம் தலை தூக்காது. நினைத்ததை எல்லாம் பேசிவிடுவார்கள். ஆனால், கடைசியில் ஒரு கருத்தில் உடன்பாடு ஏற்படும். காமத்தில், எந்த ஒரு விஷயத்தைப் பற்றி பேச்செடுத்தாலும் மறைத்து மறைத்து பேசுவதிலேயே நேரம் முடிந்துவிடும். கடைசி வரை எந்த உடன்பாடும் இல்லாமல், பதற்றம் மட்டுமே பாக்கி இருக்கும்.

**நேர்மை**

காதலில், ஒருவருக்கு ஒருவர் நேர்மையாக இருப்பார்கள். எந்த ஒரு செயலாக இருந்தாலும், காதலரிடம் கூறிவிட்டு செய்யும் பழக்கம் இருக்கும். காமத்தில், உணர்வளவில் நெருக்கம் பாராட்டமாட்டார்கள். எப்படி மறைப்பதென்ற நோக்கம் மட்டுமே இருக்கும். நேர்மைக்கு அங்கு இடப்பற்றாக்குறை மட்டுமே இருக்கும்.

**ஆதரவு** :

காதலில், எந்த ஒரு பிரச்சனை என்றாலும் ஆதரவு கரம் நீட்ட உங்கள் காதல் துணை உடனிருப்பார்கள். காமத்தில், பிரச்சனை வந்தால் காரணம் காட்டிப் பிரிந்து போக மட்டுமே முற்படுவர்.

**தியாகம் :**

காதலில், தியாகம் என்பது பொதுவான ஒன்று. தங்களுக்கு பிடித்த விஷயங்கள் கூட காதல் துணைக்கு மன அளவில் சிறிது துன்பம் தந்துவிடும் என தோன்றினால் கூட அதை தியாகம் செய்துவிடுவார்கள். காமத்தில், சின்ன சின்ன விஷயமாக இருந்தால் கூட, மனம் ஒத்துபோகாமல் பிரிந்து சென்றுவிடுவார்கள்.

**ரகசியங்கள் :**

காதலில், ரகசியங்கள் என்பது இருவர் மத்தியில் பாதுகாக்கப்படும். இருவரும் ஒளிவுமறைவு இன்றி இருப்பார்கள். காமத்தில், தங்களைப் பற்றிய எந்த ஒரு ரகசியங்களும் கசிந்துவிடக்கூடாது என எண்ணுவார்கள்.

**பொருத்தம் :** காதலில், உணர்வு ரீதியாகவும், உடல் ரீதியாகவும் பொருத்தமாக இருப்பார்கள். காமத்தில், எப்போதாவது பொருத்தம் ஏற்படும் அதுவும் உடல் ரீதியான விஷயங்களுக்காக மட்டும். மற்றபடி பொருத்தம் என்பது இங்கு மொத்தம் ஏழரை தான்.

**நம்பிக்கை :**

காதலில், நம்பிக்கை என்பது தான் வேர். அது வலிமையாக இருக்கும். அது இல்லையெனில் அது காதலே இல்லை. காமத்தில், ஒருவர் மேல் ஒருவர் நம்பிக்கையாக உள்ளதாக காட்டிக்கொள்ள மிக மிக போராடுவார்கள். ஆனால், அனைத்தும் ஒரு தருணத்தில் உடைந்துவிடும்

**ஏற்றுகொள்வது**: காதலில், தவறுகளும் ஏற்றுகொள்ளப்படும். பின் நாட்களில் அதை காதல் திருத்திவிடும். காமத்தில், தவறுகள் சுட்டிக்காட்டப்படும். மிக பெரிய பிரச்சனையாக உருவெடுக்கும். பிரிவில் போய் முடியும்.

**வலிமை** : காதலில், எவ்வளவு தூரம் கடந்திருந்தாலும், எவ்வளவு நாட்கள் பிரிந்திருந்தாலும், காதலின் வலிமை கூடுமே தவிர குறையாது. காமத்தில், இடைவேளை கூடும் போது வலிமை இழந்துவிடுவார்கள். அடுத்தவர் மீது உணர்வு பாதை மாறத்தொடங்கிவிடும்.



## காதல் ரேகை கையில் இல்லை!

15ம் பக்கத் தொடர்ச்சி



நான் மட்டுமல்ல அவளுடன் பழகிய வேறு சிலரும் ஏதாவது கொடுத்தார்கள். எந்த மறுப்பும் இன்றி எல்லாவற்றையும் வாங்கிக் கொண்டாள். விரிவுரை முடிந்து வீடு செல்ல முற்பட்டபோது அவள் ஓடிவந்து சிறிய அன்பளிப்பு பெட்டி ஒன்றை தந்து 'ஹப்பி வலன்ரைன்' என்றாள். நன்றி சொல்லி அதைப் பெற்றுக் கொண்டேன். எனது நட்பை மதித்து அதைக் கொடுத்திருக்கிறாளே என்று எனக்குள் ஒரு கிளுகிளுப்பு. 'வீட்டுக்குப் போனதும் பிரிச்சுப் பாருங்க' என்று சொல்லி அவள் வந்த வேகத்திலேயே மறைந்துவிட்டாள். நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது. என்னவாய் இருக்கும் என்ற ஆவலோடு வீட்டிற்குச் சென்றேன். அந்த சிறிய பெட்டியைப் பிரித்துப் பார்த்தேன்.
ஆண்கள் கழுத்திலே கட்டும் அழகான ஸ்காவ் ஒன்று மடித்து வைக்கப்பட்டிருந்தது. அதற்குள் ஒரு அழகான வலன்டைன் கார்ட்டில் ஜப்பானிய கவிதை ஒன்று ஆங்கிலத்தில் பேனாவால் எழுதப்பட்டிருந்தது. வாசித்துப் பார்த்தாலும் அதன் பொருள் விளங்கவில்லை. என்ன செய்வது என்று யோசித்தபோது சட்டென்று தமிழில் மொழி பெயர்க்கப்பட்ட அந்த கவிதை நூல் ஞாபகம் வந்தது. அவசரமாக எடுத்து மேலோட்டமாகத் தட்டிப் பார்த்தேன்.

Waga seko-Sode kafu yo no Ime narasai-Makoto mo kimino Aferisi goto si!
Afazu tomo Ware we uramizi-Kono makura Ware to omofite-Makite sanemase!

எனக்கு அன்பளிப்பாய் கொடுத்த யப்பானிய காதற் பாடல்கள் அடங்கிய மொழி மாற்றம் செய்யப்பட்ட நூல்தான் அதுஇ அதை எடுத்து பக்கங்களைப் புரட்டினேன். ரீனா என்ன எழுதியிருப்பாள் என்பதை அறிவதில் ஆவல் பிறந்தது. என் பதட்டத்தில் எதுவுமே புரியவில்லை. 'முட்டாள்! நட்போடு பழகினால் அதைக் காதல் என்று எடுத்துக் கொள்வாயா? கடைசியில் நீயும் ஒரு சராசரி இளைஞன் என்பதைக் காட்டி விட்டாயே' என்று யப்பானிய மொழியில் திட்டியிருப்பாளோ? எப்படியும் கவிதையில் என்ன எழுதியிருக் கின்றது என்பதை அறியப் பொறுமையாகத் தேடினேன். நான் ஆவலோடு தேடிய கவிதை அங்கே இருந்தது. ஒவ்வொரு வரியாக வாசித்துப் பார்த்தேன்.

என் காதலனே ஆடைபுறம் மாறிட
கனவு வரும், உண்மையாக உன்னையே
நேரில் கண்டது போல!


பிருந்தா
Pirruntha Silk House
Textile & Jewellery
தங்க நகைகள் நீங்கள் விரும்பும்
இரகங்களில் பெற்றுக் கொள்ளலாம். திருமண
பட்டுப் புடவைகள் மற்றும் ஆடவர் மங்கயர்
உடைகளுக்கும் நாடுங்கள்.
Tel:0711 61 58 976 Mob:0170 33 44 059
Ludwig Str.92- 70197 Stuttgart



சேராவிடினும் நான் துன்புற மாட்டேன்
இந்த அணையை நான் என்று எண்ணிடுவாய்
அணைத்து உறங்கிடுவாய்!

எனக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. அவள் கவிதையில் சொன்னபடியே அவள் கொடுத்த ஸ்காவை அணைத்துக் கொண்டு தூங்கியது சுகமான அனுபவமாக இருந்தது. மறுநாள் விரிவுரையின்போது அவளைச் சந்தித்தேன். 'ஹாய் ரீனா ஐஸிரெறு' என்றேன்.
முகம் சிவக்க கைகள் இரண்டையும் நாடியில் வைத்தபடி விழி உயர்த்தி ஆச்சரியமாய் பார்த்தாள்.
எப்படி இது சாத்தியமாயிற்று என்று எனக்குப் புரியவில்லை. ஜப்பானிய மொழி உங்களுக்குப் புரியாதவரையில் நான் தப்பித்தேன்.
(நன்றி: பாடல் உதவி - முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் அவர்களால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட ஜப்பானியக் காதற் பாடல்கள் என்ற நூலில் இருந்து.)

## வேரில் பூத்த மலர்






வேரில் பூத்த மலர், பெண் ஆளுமையிலிருந்து எழுந்த இன்னொரு ஆற்றல் அண்மை நாட்களில் உற்சாகமாக தமது வீட்டில் நடந்த மகிழவான நிகழ்ச்சியின் பூரிப்பை இந்த நிகழ்வு கொடுத்துள்ளது. ஓவ்வொருவரும் சுப்பர் சிங்கர் யூனியர் 4 இல் இரண்டாவது இடத்துதைப் பிடித்த ஜெசிக்காவை தமது வீட்டுப்பிள்ளையே வெற்றி கொண்டதாக நினைத்து குதூகலித்துப் போயிருக்கின்றனர்.
பூமியே ஈடு இணையற்ற ஆளுமை உள்ள தளம். அதற்கொப்பாக தன்னை அர்ப்பணிப்பில் ஈடுபடுத்தி பொறுமை சகிப்புத்தன்மை என தனது மகளின் வெற்றிக்காக கிட்டத்தட்ட ஒரு வருடமாக தமிழகத்தில் தங்கி நின்று தனது மகளை வெற்றிக்காக தாய்மை எனும் பாச உளியால் செதுக்கி தயார்படுத்திய ஜெசிக்காவின் அன்னையே மிகப்பெரிய ஆளுமையாகும்.
தனது மகளின் குரலுக்குள் தன்னம்பிக்கையாக இழையோடி நின்றவர் திருமதி. யூட் அவர்கள். நானிருக்கிறேன் உன்னருகில் தைரியமாக இரு துணிவோடு பாடு என்று நாளிலும் பொழுதிலும் அரவணைத்து நின்று வெற்றிப்படியின் படிக்கல்லாக தனது தோள்களில் மகளின் கால்களைத் தாங்கிப் பிடித்தவர்.
கனடாவில் கணவனையும் மகனையும் விட்டு வந்து அவர்களின் நினைவில் ஏக்கத்துடனும், அந்த ஏக்கத்தின் வெளிப்பாடு மகளின் இலக்கு நோக்கிய பயணத்திற்கு தடையாக வந்துவிடக்கூடாதே என அதை வெளிக்காட்டிக் கொள்ளாது மகளை இந்த உயரத்திற்கு கொண்டு சென்றுள்ளார்.
தாயின் ஆளுமை என்ற வேரின் பெற்ற வெற்றிப்பூதான் ஜெசிக்கா பெற்ற வெற்றி.

**ஏலையா க.முருகதாசன்**


ஆட்டம் – பாட்டம் – கொண்டாட்டம்
வெற்றிமணி விழா




வெற்றிமணி விழா.22.08.2015-Dortmund நகரில்.




# சொல்லாலும் உடலாலும் மரியாதை



பேராசிரியர் அ.சண்முகதாஸ்

ஜப்பானியர்கள் ஒருவரையொருவர் காணும்போது அன்றைய நாளின் வணக்கம் கூறும் வழக்கம் உண்டு. அது 'நல்ல காலைப்பொழுது' என்றோ, 'நல்ல நாள்' என்றோ, 'நல்ல மாலை' என்றோ அமையலாம். அப்போது அவர்கள் உடலை இடுப்பிலிருந்து வளைத்து கீழே நோக்கி வணக்கம் கூறுவார்கள். வணக்கம் என்ற தமிழ்ச்சொல் 'வணக்கு' என்ற அடிச் சொல்லிலிருந்தே பிறந்தது.

'வணக்கு' என்றால் வளைத்தல் எனப் பொருள்படும். தமிழிலும் பண்டைக்காலத்தில் வணக்கம் கூறும்போது உடலை வளைத்து மரியாதை செலுத்திக் கூறப்பட்டிருக்க வேண்டும். இன்று தலையை மட்டும் சிறிது தாழ்த்துகின்ற வழக்கம் சிலரிடம் காண்கிறோம். ஆனால் ஜப்பானியர் அதனை இன்றும் பேணுகிறார்கள்.

இதைவிட மொழியினாலே ஜப்பா னியர் மரியாதை செலுத்து கிறார்கள்.

ஜப்பானிய மொழியிலே பேசுகின்றவர் ஒருவர் தன் பேச்சினைக் கேட்பவர் தொடர்பான எதனைக் குறிப்பதாயினும் அதனை பெருமைப படுத்தி அல்லது மாட்சிமைப்படுத்திக் கூறுவது நம்மையெல்லாம் வியப்பில் ஆழ்த்தவல்லது. எடுத்துக்காட்டு ஒன்றினைப் பார்க்கலாம். நான் சாப்பிடும் மீனைக் குறிப்பதென்றால் 'ஸகனா' என்றால் போதும். ஆனால் என் நண்பர் உண்ணும் அதே மீனைக் குறிப்பதென்றால் 'ஓஸகனா' என்று சொல்லவேண்டும். இங்கு 'ஓ' என்னும் முன்னொட்டு மரியாதையைக் குறிப்பதாக அமையும். அது 'மாட்சிமை பொருந்திய' இல்லது 'சிறப்புடைய' என்னும் பொருளைத் தருவதாகும். எனவே நான் தின்னுவதை 'மீன்' என்றும் நண்பர் உண்ணும் அதே மீனை 'மாண்புமிகு மீன்' என்றும் அழைக்கும் ஜப்பானிய மொழிமரபு அவர்களுடைய மரியாதை செலுத்தும் பண்பினைக் காட்டுகிறது.

இந்த மரியாதை நம்மிடமும் பண்டைக் காலத்தில் இருந்தது. அக்காலத் தமிழ்க் காதல் பாடல்களிலே தோழியோ தலைவியோ தலைவன் நாட்டை அல்லது மலையைக் கூறுமிடத்து 'நல் நாடு', நல் மலை' என்று கூறுவது வழக்கம்.

தலைவனுக்குச் செலுத்தும் மதிப்பையும் உணர் வையும் அவனுடன் சார்ந்த பொருள்களுடன் 'நல்' என்னும் அடைச்சொல்லாலே புலப்படுத்தினர். 'நல்' என்னும் மதிப்புயர்ச் சொல்லினை தம் நாடு, ஊர், தமிழ் முதலியனவற்றைக் குறிப்பிடும் போது 'நல்நாடு', 'நல்லூர்', 'நல்தமிழ்' எனப் பண்டைத்தமிழர் பயன்படுத்தினர்.

# நம் கலைகளின் அழகையும் ஆழத்தையும்

## அள்ளிப்பருகவைத்த அமிர்தகழி பாரம்பரிய அரங்கவிழா
















மட்டகளப்பு அமிர்தகழி மாமாங்கப் பிள்ளையார் பேராலய முன்றலில் கிழக்கு பல்கலைக்கழக நுண்கலைத்துறையினரால் ஒழுங்கமைக்கப்பட்ட பாரம்பரிய அரங்க விழா கடந்த வருடம் சிறப்பக நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதி கிழக்குப்பல்கலைக்கழக உபவேந்தர். கலாநிதி கி.கோவிந்தராஜா மற்றும் பீடாதிபதிகள் ஆலயக்குருமாரர்கள் என பலர் கலந்து சிறப்பித்தனர். அங்கு பாரம்பரிய அரங்க காட்சிக்கூடம் திறந்து பார்வைக்கு வைக்கப் பட்டதுடன், பாரம்பரிய கலைநிகழ்வுகளும் இடம் பெற்றன. இளம்கூத்து ஆளுமைகளை ஊக்கம்செய்து உடுக்குச் சமர் மத்தளக்கச்சேரி, பறை முழக்கம் இவற்றோடு (வடமோடி) பவளக்கொடி நாடகம் என்பனவும் இடம் பெற்றன. பாரம்பரிய கலைகளை வளர்த்தெடுப்பதிலும் அதன் வேர்களைப் பாதுகாப்பதிலும் மட்டுநகர் காட்டும் முயற்சி மட்டற்ற மகிழ்வைத்தருவதாக உள்ளது. வாழ்க நம் பாரம்பரியக்கலைகள். கலாநிதி வ.இன்பமோகன் தலைமையிலும் கலாநிதி சி.ஜேயசங்கர் ஏற்பாட்டிலும் மேற்படி நிகழ்வுகள் இடம் பெற்றன.

யேர்மனியில் பிராங்பேட் நகரில்
JAFFNA BASAR
உரிமையாளர் : நடராஜா சுதன்
மாதம் மாதம் மாதரைக் கவரும் புத்தம் புது டிசைன்களில் தங்க நகைகள்
ஒரே இடத்தில்
தரம் மிக்க தங்க நகைகள்,
பயணங்களை இனிமையாக்க
குறைந்த விலையில்
விமான பயணச்சிட்டுக்கள்
மற்றும் இல்லத்திற்கு வேண்டிய
மளிகைப் பொருட்கள்
அனைத்திற்கும் நாடுங்கள்



Jaffna Basar Jewellery, Kaiserstr.64 (Laden Nr.22) 60329 Frankfurt am Main, Tel: 069 25 62 63 53

1990 களின் ஓர் சந்திப்பு

# என்றும் இனிப்பான நாள் இன்றுதான் என்றாலும் இளமை கொஞ்சும் நாள்!!!!



பழையபடங்களைப் பார்க்கின்றபோது எமக்கே இளைமையான உணர்வு தோன்றும்போது, அப்படங்களில் நடித்தவர்களுக்கு எப்படி இருக்கும்! அப்பப்பா.!! என்றும் இனிப்பான நாள் இன்றுதான். இன்று கோட்டைவிட்டவன் வாழ்வில் எந்த நாளை எண்ணிமகிழ்வான்.

இருந்தாலும் இளமையும் கைகொடுத்து நிற்கும் காலம் அக்காலம் பொற்காலமே!









சினிமா நட்சத்திரங்கள் 80 களில் முன்னணியில் திகழ்ந்தவர்கள். அவர்களுக்குப் போட்டியாக 90களின் இருந்தவர்களின் சந்திப்பு.

மேற்படி சினிமாவில் 90களில் முன்னணியில் இருந்த ஹீரோ, ஹீரோயின், இயக்குனர்கள், இசை அமைப்பாளர்கள் சந்திப்பு கே.எஸ்.ரவிக்குமார் வீட்டில் நடைபெற்றது. எண்பதுகளில் பிரபலமாக இருந்த நடிகர்கள்- நடிகைகள் சந்திப்பு ஒவ்வொரு வருடமும் நடந்து வருகிறது. சென்னையில் பண்ணை வீடு அல்லது முக்கியமான இடங்களில் அவர்கள் சந்தித்து வருகிறார்கள்.

ரஜினி - சிரஞ்சீவி இந்த சந்திப்பில் ரஜினி, சிரஞ்சீவி, மோகன்லால், ராதிகா, பூர்ணிமா, நதியா, உட்பட பல்வேறு நடிகர், நடிகைகள் கலந்து கொள்கின்றனர்.

90களின் நட்சத்திரங்கள் இதே போல 90-களில் அறிமுகமான நடிகர், நடிகைகள், இயக்குனர்கள், இசை அமைப்பாளர்களின் சந்திப்பை நடத்த இயக்குனர் சுந்தர்.சியும் நடிகை மீனாவும் ஏற்பாடு செய்திருந்தனர். ஷங்கர் - கே.எஸ்.ரவிக்குமார் இந்த சந்திப்பில் இயக்குனர்கள் கே.எஸ்.ரவிக்குமார், ஷங்கர், சுந்தர் .சி, வெங்கட்பிரபு, பார்த்திபன், இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமான் ஆகியோர் பங்கேற்றனர்.

விஜய் - சூர்யா நடிகர்கள் விஜய், சூர்யா, ஜெயராம், அரவிந்த்ஸ்வாமி, என இன்றைக்கும் இளம் ரசிகர்களின் உள்ளங்களை கொள்ளை கொண்டுள்ள நடிகர்கள் பங்கேற்றனர். அஜீத், ஷாலினி ஜோடி ஏனோ இந்த கூட்டத்தில் பங்கேற்கவில்லை

கனவுக்கன்னிகள் 90களில் தென்னிந்திய சினிமா உலகில் கனவுக்கன்னிகளாக வலம் வந்த நடிகைகள் சிம்ரன், ரோஜா, மீனா, ஜோதிகா, சங்கீதா, மகேஸ்வரி, சங்கவி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கேக் வெட்டி உற்சாகம் நீண்ட நாட்களுக்குப் பின்னர் சந்தித்த இந்த நட்சத்திரங்கள், தங்களின் நினைவுகளைப் பகிர்ந்து கொண்டனர். கேக் வெட்டி உற்சாகத்தை வெளிப்படுத்தினர்.

ஆண்டுதோறும் சந்திப்பு இதுபற்றி கே.எஸ்.ரவிகுமாரிடம் கேட்டபோது, 'இது முதல் சந்திப்பு. முன்னோட்டம் மாதிரிதான். இன்னும் பல நடிகர், நடிகைகள், இயக்குனர்கள் அடுத்து நடக்கும் சந்திப்பில் கலந்து கொள்வார்கள்" என்று கூறினார்.

## 14 வது ஆண்டு நினைவுப் பூக்கள்!

மலர்வு: 12.05.1988

பிரிவு: 16.03.2001



**செல்வி கஜனி தேவராஜா**
(பிறேமன், ஜெர்மனி)

அன்பின் திருவுருவே! அருமைக் கஜனியம்மா!
சொல்லாமல் நீ பிரிந்த துயர் இன்னும் நீங்கவில்லை.
ஆண்டுகள் பதினான்கு ஆனதம்மா இப்போது!
அருமைக் கஜனி! உந்தன் அன்புமுகம் எங்களுக்குள்
நிலையாகி உந்தன் நினைவுகளை வளர்க்கிறது!
காலங்கள் கரைந்தாலும் கலையாத உறவாக
வாழ்ந்திருப்பாய் எங்களுடன்!
மறப்பதற்கோ எம் உறவு!
என்றும் பிரியாத எமதருமைக் கண்மணியே!
சக்திபதம் நீயடைந்து சாந்தியுறும் நாளிதனில்
கண்ணீரை உந்தனுக்குக் காணிக்கையாக்குகிறோம்!
அன்பே நீ அமைதி பெறு ஆதிசக்தி நிழலினிலே!
என்றும் உன் நினைவுகளுடன்
அம்மா அப்பா அக்கா அத்தான்
S.Thevarajah (U.K.)


Milin Impex GmbH

Dortmund நகரில்

இலங்கையர்களுக்கான எவ்வித உணவுப்பொருட்களையும்
மொத்தமாகப் பெற்றுக்கொள் எமது இணையத்தளத்தை நாடவும்

Web :www.milinimpex.de

Geschäftszeiten:
Dienstag, Mittwoch, Freitag
10:00 bis 19:00 Uhr
Montag & Donnerstag
07:00 bis 17:00 Uhr
Samstags 09:00 bis 16:00 Uhr
Sonn. und Feiertags: Geschlossen





Westendorf Str.41 - 44287 Dortmund Tel: 0231 45 96 17 /28 Fax: 0231 18 15 288

# திரை உலகம்




மீண்டும் சூர்யா - ஹரி இருவரும் இணைந்து உருவாக்கும் “சிங்கம்“ படத்தின் மூன்றாம் பாகத்தில் இசை அனிருத் எனக் கூறப்படுகிறது. அஞ்சான் படத்தைத் தொடர்ந்து தற்போது வெங்கட்பிரபு இயக்கத்தில் “மாஸ்“ படத்தில் நடித்து வருகிறார் சூர்யா. அப்படத்தைத் தொடர்ந்து விக்ரம் குமார் இயக்கும் “24“ படத்தில் நடிக்கவிருக்கிறார். விக்ரம் குமார் படத்தை சூர்யாவே தயாரிக்க இருக்கிறார்.

24“ படத்தில் நடித்துக் கொண்டே பாண்டிராஜ் இயக்கும் “ஹைக்கூ“ படத்திலும் சிறிய வேடத்தில் நடிக்க சூர்யா சம்மதித்திருக்கிறார். இப்படங்களைத் தொடர்ந்து ஹரி இயக்கத்தில் சூர்யா நடிப்பார் எனக் கூறப்பட்டது. ஏற்கனவே சிங்கம், சிங்கம் 2 படங்கள் வெற்றிப்படங்களாக அமைந்ததால், மீண்டும் அக்கூட்டணி சிங்கம் 3ஐ உருவாக்க திட்டமிட்டிருப்பதாக தகவல்கள் வெளியாகின. இந்நிலையில், தற்போது சூர்யா - ஹரி இணையும் படம் “சிங்கம் 3“ என்பது ஏறக்குறைய உறுதியாகியுள்ளது. மேலும், சிங்கம், சிங்கம் 2 ஆகிய படங்களுக்கு இசையமைத்த தேவி ஸ்ரீபிரசாத் “சிங்கம் 3“ படத்திற்கு இசையமைக்க மாட்டார் என்றும், அவருக்கு பதிலாக அனிருத் இசையமைப்பார் என்றும் கூறப்படுகிறது. ஆகஸ்ட் மாதத்தில் படம் தொடங்கும் என்று தெரிகிறது. இந்த ஆண்டு கடைசியில், அல்லது தீபாவளிக்கு சிங்கம் 3 வெளியாகலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. முதல் இரண்டு பாகங்களிலும் ”பெண் சிங்கமாக” நடித்த அனுஷ்கா தான் இப்படத்திலும் சூர்யாவிற்கு ஜோடியாக நடிப்பாரா இல்லையா என்பதெல்லாம், படத்தின் அதிகாரப்பூர்வ அறிவிப்பின் போது தெரிய வரும்.



## என்னை அறிந்தால் தந்த திருப்தி. திருப்திக்கு அஜித் விஜயம்!







அஜித்

என்னை அறிந்தால் படம் பிப்ரவரி 5-ம் தேதி வெளியாக மிகப்பெரிய வெற்றியடைந்துள்ள உள்ள நிலையில், நடிகர் அஜீத் திருப்பதி திருமலையில் சாமி தரிசனம் செய்தார். அங்கு குழுமிய தனது ரசிகர்களை நலம் விசாரித்தார். அவர்கள் தந்த அன்புப் பரிசை பெற்றுக் கொண்டதோடு, உடன் நின்று படமும் எடுத்துக் கொண்டார். வெள்ளை வேட்டி, சட்டை, தனது பிராண்ட் நரைத்த தாடியுடன் திருமலைக்கு வந்த அஜீத்தை, கோயில் நிர்வாகிகள் வரவேற்று சாமி தரிசனத்துக்கு ஏற்பாடு செய்தனர்.
சாமி தரிசனம் முடிந்து வெளியில் வந்த அஜீத்தை ரசிகர்கள் சூழ்ந்து கொண்டனர். அவர்களுடன் நின்று படங்கள் எடுத்துக் கொண்டார் அஜீத். சிலர் அவருக்கு பரிசாக திருப்பதி ஏழுமலையான் படத்தை அளித்தனர். அதைப் பெற்றுக் கொண்டு, ரசிகர்களை நலம் விசாரித்தார் அஜீத். பின்னர் அங்கிருந்து சென்னைக்கு கிளம்பினார். திருப்பதிக்கு அஜீத் செல்வது இது முதல் முறையல்ல. என்னை அறிந்தால் படத்துக்கு முன், வீரம் படம் முடிந்ததும் திருமலைக்குச் சென்று இயக்குநர் சிவாவுடன் மொட்டை போட்டுக் கொண்டு திரும்பியது நினைவிருக்கலாம்.



## ஐஸ்வர்யா மாதிரி மனைவி அமைவது அரிது!

ஐஸ்வர்யா மாதிரி மனைவி அமைவது அரிது என்று பெருமையாகக் கூறியுள்ளார் நடிகர் தனுஷ். சூப்பர் ஸ்டார் ரஜினியின் மூத்த மகளான ஐஸ்வர்யாவை திருமணம் செய்துள்ளார் தனுஷ். இருவருக்கும் லிங்கா, யாத்ரா என இரு மகன்கள் உள்ளனர். இந்த நிலையில், தனுஃக்கும் ஐஸ்வர்யாவுக்கும் கருத்து வேறுபாடு என்று சிலர் வதந்தி பரப்பி வருகின்றனர். இதுகுறித்து தனுஷ் அளித்துள்ள விளக்கத்தில், ”என்னை அழகாக மாற்றியவர் ஐஸ்வர்யா. என் குடும்பத்தினரையும் நன்றாக கவனித்துக் கொள்கிறார்.
ஐஸ்வர்யா, எனது குழந்தைகள், சகோதரர், பெற்றோருடன் சேர்ந்து வாழ்வது மகிழ்ச்சியாக இருக்கிறது. பிசியாக நடித்து விட்டு வீட்டுக்கு வரும்போது அமைதியும் மகிழ்ச்சியும் கிடைக்கிறது. தொழில் ரீதியாக என்னால் அடிக்கடி வீட்டில் இருக்க முடியாது. அப்போது ஐஸ்வர்யா குடும்பத்தை கவனித்துக் கொள்கிறார். என் குழந்தைகள் மற்றும் குடும்பத்தில் உள்ளவர்களைப் பார்த்துக் கொள்கிறார். தன் கேரியரையும் பார்த்துக்கொள்கிறார். அவரைப் போல ஒரு மனைவி அமைவது அரிது,” என்றார்.




19 வருட சேவையில் தங்கமாய்
ஜொலிக்கும் நம்பிக்கை ஸ்தாபனம்
LITTLE INDIA
Textile & Jewellery
அழகான ஆடைகளுக்கும்
பஞ்சாபி வகைகளுக்கும்
தங்க நகைகளுக்கும்
பெயர் பெற்ற ஸ்தாபனம்
Tel:02131 73 87 83 Fax: 02131 73 87 84
இதோ கோடை கால விடுமுறை உங்கள் விமானப்
பயணத்திற்கு பதிவுக்கு முந்துங்கள்
EurAsian - Tours
VALUTRANS
MONEY TRANSFER
துரித பண
மாற்றுச் சேவை!
info@eurasian-tours.com
Rishi Ganeshamoorthy
Rishi 0174 96 44 965
Further Str. 156
41462 Neuss


Jasmine Silk House
தமிழ் புத்தாண்டை முன்னிட்டு
மாபெரும் மலிவு விற்பனை!
15.03.2015 முதல் 15.04.2014 வரை
பட்டுச்சேலைகள் பாட்டிசாறிகள் பஞ்சாபிகள்
சிறுவர் சிறுமிகளுக்கான அடைகள்
அனைத்தும் தரமாகவும் மலிவாகவும் பெற்றிட நாடுங்கள்
Jasmin Silk House
Fester Str.50
40882 Ratingen
HP:0173 1937 325
ஜஸ்மின் சில்க் ஹவுஸ்
Tel:02102 844744
T.Mohanadas


ASIA BAZAR
துரித பண மாற்றுச் சேவை!
Ria
Money Transfer
MoneyGram
ஆசிய, ஆபிரிக்க
உணவுவகைகள்
வியாழன்சனிக்கிழமை தோறும்
இலங்கை, இந்திய உடன்
மரக்கறிவகைகள்
கடல் உணவுப் பொருட்கள்.
இன்னும் பல...
VALUTRANS
MONEY TRANSFER
உரிமையாளர்:
பா.கணேஷ்
An der Stadt Mauer 2-4
41061 Mönchengladbach
Tel:02161 208303 Fax:02161-309282


யேர்மனியில் டோட்மூட் நகரில் சுவையான உணவிற்கு
தரமும் சுவையும்
தரும்...
CEYLON IMBISS
இலங்கை உணவகம்
திங்கள் முதல் சனிவரை
காலை 11.30 முதல்
மாலை 22.00 மணிவரை
ஞாயிறு மற்றும் விடுமுறை
நாட்களில்
16.00 -22.00 மணி வரை
Annen Str.1
44137 Dortmund
Tel:0231- 7252859


சித்திரைத் தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு
உங்களுக்காக
MAYRAA
நிறுவனத்தினால்
04.04.2015 அன்று
உயர் தரமான சல்வார்கள்
மற்றும்
தையல் பொருட்களுக்கும்
ஒரு புதிய பகுதி திறக்கப்படும்!!!
Heart Says...
உங்கள் இதயம்
விரும்புவது...
MAYRAA
MAYRAA | Rheinische Str. 71a | 44137 Dortmund | Tel.: +49 231 5320421 - 0 | Web: www.mayraa.com


யேர்மனியில் தரம்மிக்க ஓர் மொத்த வியாபார நிலையம்!
StaR - Impex
Asia & Afro Großhandel & Einzelhandel
மரக்கறி கடலுணவுப் பொருட்களின்
மொத்த இறக்குமதியாளர்கள்
எமது விலைகள் சலுகைகள்
அறிய எமது இணையத்தளம்
Öffnungszeiten:
Mo-Fr: 10.30-19.30
Sa: 09.30-18.00
Web.Star-impex.net
StaR Impex : Inh :K.Sivasubramaniam
Mobil: 0172/2183703 - E-Mail: star-impex@live.de
Tel:0231 860 26 96 Fax: 0231/8602698
Kipper Str.3 44147 Dortmund Germany